www.padippakam.com

விலை ரூ. 3-00

LICENCE No. TN/MS (N) WPP-100

# ஈழ சுதந்திரன்

ELASUTANTIRAN



திருவள்ளுவராண்டு
உ0௳௯
புரட்டாசி-ஐப்பசி
அக்டோபர்-1998
புத்தகம்: 11 இதழ்: 10

∴ படையால் மட்டுமல்ல உணவுத்தடையாலும் இலங்கைத் தமிழ்மக்களை சாகடிக்கும் கொடுமை

∴ 6,50,000 இடம்பெயர்ந்த மக்களில் 25 ஆயிரம் பேருக்கே பாதிஉணவுப் பங்கீடு. தற்போது அதுவும் இல்லை

∴ எட்டாண்டுகளாகத் தொடரும் பொருளாதாரத் தடையால் வடக்கு கிழக்கில் கொடிய பஞ்சம்

∴ சிறீலங்கா படைகள் மேற்கொண்டிருப்பது வன்முறைக்கு எதிரான நடவடிக்கையல்ல; தமிழின ஒழிப்புப் போரே. தமிழ் மண் பறிப்புப் போரே!

# உணவை போர்க்கருவியாகப் பயன்படுத்துவதன் மூலம் சிறீலங்கா அரசு செய்வது

# கிரிமினல் குற்றமே

## மனித உரிமை அமைப்புகள் கண்டனம்

**உணவை ஒருபோர்க் கருவியாகப் பயன்படுத்துவதன் மூலம் சிறீலங்கா அரசு உலக குற்றத்தைப் புரிந்து வருவதாக பன்னாட்டு மனிதவுரிமை ஆதரவாளர்கள் அறிவித்துள்ளனர். சிறீலங்கா அரசின் இச்செயல் 1949ஆம் ஆண்டு ஜெனீவா மாநாட்டுச் சர்வதேசப் பிரகடனம் 3வது சரத்தின்படி போர்க் குற்றமும் ஆகும் என்று அவர்கள் பறைசாற்றியுள்ளனர்**

**'சார்க்' அமைப்பின் தலையாய நாடு என்ற முறையில் சிறீலங்கா அரசின் இக்குற்றச் செயலைத் தட்டிக் கேட்க வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கும் உண்டு என்றும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.**

உணவையும் போரில் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தும் உலகமாகக் குற்றச்செயலை சிறீலங்கா அரசு புரிந்து வருவதை இலங்கையின் கத்தோலிக்க ஆயர்கள் மகா சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் மகா சங்கத்தின் தலைவர் ஆயர் ஆஸ்வால்ட் கோமீஸ், செயலாளர் ஆயர் மால்கம் ரஞ்சித் ஆகியோர் இதுபற்றி சிறீலங்காவின் குடியரசுத் தலைவர் திருமதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு விடுத்துள்ள ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இலங்கையின் அரச நிர்வாகத்தின் கீழ் உட்படாத முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களில் வாழும் பொதுமக்களுக்குத் துணைபுரியும் வண்ணம் நாங்கள் உங்களுக்கு இதை எழுதுகின்றோம். இப்பகுதியிலுள்ள மக்கள் கடந்த இரு தலைமுறைகளாக நடந்து வரும் மோதல்களின் (யுத்தத்தின்) காரணமாக மிகப்பெரும் துயருக்கு ஆளாகியுள்ளனர் அரசின் பாதுகாப்பு நடவடிக்கைகளினாலும், அதன் அடாவடி நடவடிக்கைகளினாலும் இம்மக்கள் இன்றும் தொடர்ந்து அழிவுக்கு ஆளாகி வருகின்றனர்.

### இதுவா மக்கள் இதயம் கவர்தல்

குறிப்பாக உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் தடையினால் அவர்கள் அனுபவிக்கும் தொல்லைகளை நாங்கள் குறிப்பிட்டே ஆக வேண்டும். ''மக்களின் இதயங்களையும் எண்ணங்களையும் வெற்றிக் கொள்வோம்'', என்ற கொள்கையைப் பிரகடனம்படுத்திக் கொண்டே அண்மையில் அப்பகுதிக்கான உலர் உணவுப் பங்கீட்டைக் கூட கடுமையாக வெட்டியிருப்பது அதற்குப் பொருத்தமாகத் தெரியவில்லை. மண்ணெண்ணெய், வேளாண் இடுபொருள்கள், மீன்பிடி உபகரணங்கள், மருந்துகள் போன்றவற்றுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடைகள் அத்தகையதே. இதனால் அப்பகுதிகளில் வாந்திபேதி, மலேரியா போன்ற சத்துக் குறைவுத் தொற்று நோய்கள் பரவிவருவதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

அரசு அமைப்புகள் அல்லது அரசு சாராத் தொண்டு நிறுவனங்கள் மூலம் முறையாக இவற்றின் விநியோகம் நடைபெற்றிருக்குமானால், எந்த விருப்பத்தகாத அமைப்புகளினாலும் எதுவும் நடந்துவிடுமோஎன்று கவலைப் படுவதற்குத் தேவை ஏற்படாது.

பாதுகாப்புப் படைகளை மிகவும் கவனமுடன் நடந்து கொள்ளக் கட்டளையிடும்படி மிக அவசரமாகக் கேட்டுக் கொள்கிறோம். அவர்கள் நடத்தும் வான் வழித்தாக்குதல்கள்மற்றும் மனிதநேயத்துக்குப் புறம்பான அத்துமீறல்களால் பொது மக்களுக்கு ஏற்படும் இழப்புகள் கொஞ்சமல்ல.

அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சுதந்திரபுரம் கிராமத்தின் மீது நடந்த கபிர்ரக விமானத் தாக்குதலில் 26 பொது மக்கள் அநியாயமாகச் செத்துள்ளனர். 44 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இலங்கை கத்தோலிக்க மகா சங்க உறுப்பினர்களாகிய நாங்கள் மாண்பமை குடியரசுத் தலைவரைக் கோருவதெல்லாம் இப்பகுதி மக்களுக்கான உலர் உணவுப் பங்கீட்டு வெட்டை உடனடியாக நீக்க வேண்டும் என்பதாகும்.

### அரசியல் தீர்வே அவசரத் தேவை

இலங்கைவாழ் அனைத்துப் பிரிவு மக்களுக்குமான நீதி சமத்துவம் என்ற அடிப்படையில் தற்போதைய மோதல் நிலைக்கு அமைதி வழியில் அரசியல் தீர்வைக் கொண்டுவர நாங்கள் என்றும் உங்களுக்கு ஆதரவாக இருப்போம் என உறுதி கூறுகிறோம்.

(16ம் பக்கம் பார்க்க)



முகத்தார் ஜேசுரத்தினத்தின் இளைய மகன் திருமணத்தில் புதுமணத் தம்பதிகளுடன் ஈ.ஏ.ம. கழக நிறுவனர் சந்திரகாசன், செயலாளர் செல்வி சூரியகுமாரி மற்றும் ஜேசுரத்தினம் தம்பதிகள். (செய்தி 15ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

''கருணையிலார் ஆட்சி கடுகி ஒழிக!
அருள்நயந்த நன்மார்க்கர் ஆள்க!-தெருள்நயந்த
நல்லோர்கள் வேண்டு நலம்பெறுக! நன்றுநினைத்து
எல்லாரும் வாழ்க இசைந்து!'' —திருவருட்பா

(இரக்கமில்லாதவர் ஆட்சி விரைந்து ஒழிந்திட வேண்டும். அருளை விரும்பி நல்லவழியில் நடப்போரே ஆண்டிட வேண்டும். அறிவறத்தை விரும்பும் நல்லவர்கள் தாங்கள் விரும்பும் நலத்தையெல்லாம் பெறவேண்டும். எல்லாரும் நல்லதையே நினைத்து இசைந்து வாழ்ந்திட வேண்டும்.)

# தெளிவு

## சிங்களக் கட்சிகளின் கண்ணாமூச்சி ஆட்டம்!

சிறீலங்காவில் உள்ள சிங்களக் கட்சிகளுக்குத் தமிழர் வாழ்வுடன் விளையாடுவதே அரசியலாகப் போய்விட்டது.

1960 கள் வரை தமிழ் மக்களுக்கு நாட்டையே தூக்கிக் கொடுத்து விட்டதாக-சிங்கள மக்களின் முன்னுரிமைகளை விட்டுக் கொடுத்து விட்டதாக ஒன்றை ஒன்று குறைகூறிக் கொண்டு சிங்கள வாக்குகளைக் கொள்ளையடிப்பதில் போட்டி போட்ட அக் கட்சிகள் 1970களிலிருந்து தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஆளுங்கட்சி விட்ட குறைதான் நாட்டை அழிவுப் பாதைக்குக் கொண்டு செல்வதாக ஒன்றை ஒன்று குற்றம்சாட்டத் தொடங்கிவிட்டன.

காரணம், பெரும்பான்மைச் சிங்கள மக்களின் வாக்குகள் சிதறுகிறபோது தமிழ் மக்களின் வாக்குகளையும் கணிசமாகப் பெறுவோர் எளிதாக ஆட்சியைப் பிடித்து விட முடியும் என்கிற நிலையினால், தமிழ் மக்களுக்கு நன்மை செய்வதிலல்ல; அவர்களுக்கும் தாங்கள் நல்லவர்கள்தான் என்று நடிப்பதன் மூலமே அவர்களுடைய ஆதரவையும் பெற்று விடமுடியும் என்கிற நப்பாசையின் காரணமாக அவர்களின் தமிழின விரோதப் போட்டியின் தன்மை சற்று மாறியிருக்கிறது அவ்வளவுதான்.

ஆம்; ''சிறிமாவோ குழுப்பியதால்தான் இனப்பிரச்சினை வன்முறை வடிவேற்கத் தொடங்கிவிட்டது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களுக்குத் தனி நாட்டைத் தவிர அவர்கள் கேட்கிற அத்தனையும் கொடுப்போம்'' என்று கூறியே, தமிழீழக் கோரிக்கை தேர்தல் தீர்ப்புக்காக தமிழர் விடுதலைக் கூட்டணியால் தமிழ்மக்கள் முன் வைக்கப்பட்ட 1977 தேர்தலில் ஜெயவர்த்தனா அசைக்க முடியாத பெரும்பான்மை பலத்தோடு வென்றார்.

காரணம், தமிழீழப் பகுதியில் உள்ள தமிழ் மக்கள் தனி நாட்டுக் கோரிக்கைக்கே ஒருமனதாக வாக்களித்து, தமிழ்த் தொகுதிகளிலெல்லாம் 'தமிழீழம் ஒன்றுதான் எங்கள் தீர்ப்பு' எனப் பறைசாற்றினாலும், ஈழப்பகுதிக்கு வெளியேயுள்ள தமிழ்மக்கள் பெரும்பாலும் ஜெயவர்த்தனாவின் உறுதிமொழியில் மயங்கி வாக்களித்ததால், அவருடைய ஐக்கிய தேசியக் கட்சி 'ரோடு ரோலர் மெஜாரிட்டி'யுடன் வென்றது.

மலையகத் தமிழ் மக்களின் கட்சியான தொண்டமான் தலைமையிலுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கூட அரசில் சேர்ந்தது.

ஆனால், அதிபர் ஆட்சி முறைக்கு மாறி, ஒரு சர்வாதிகாரிபோல நடந்து 'கொண்டு ஜெயவர்த்தனா, தமிழினத்தையே பூண்டோடு அழிக்க முற்பட்டாரேயல்லாமல், எள் முனையளவும் தமிழினத்திற்கு நன்மை செய்ய முனையவில்லை. மாறாக, 1983ல் வரலாறுகாணாத தமிழினப் படுகொலை அவருடைய அரசினாலேயே திட்டமிட்டு நடத்தப்பட்டது.

எனினும், தீமையிலும் ஒரு நன்மை என்பதைப் போல 1983 இனப்படுகொலை காரணமாக இந்தியா தலையிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு, 1987ல் செய்து கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை உடன்பாட்டின் விளைவாக ''இலங்கையின் வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழ் மாகாணம் தமிழர்களின் பாரம்பரியத் தாயகம்'' என்கிற உண்மை உலகத்திற்குப் பறைசாற்றப்படுகிற நன்மை விளைந்தது.

ஆனால், ஜெயவர்த்தனாவுக்கு அடுத்து வந்த பிரேமதாசா, இந்திய அமைதிப்படை வருகையை ஒரு ஆக்கிரமிப்புப்போலச் சித்தரித்து, ''தமிழரானாலும் சிங்களவரானாலும் நாம் இலங்கையர். அந்நியரான இந்தியருக்கு என்ன இங்கு நாட்டாண்மை?'' என்று புலிகளையும் மயக்கி ஏறத்தாழ சாத்தியமாக இருந்த தமிழீழத்தைத் தகர்த்தெறிந்தார். ஆவ... தகர்த்துபோனார்.

பின்னர் வந்த விஜயதுங்க காலத்திலும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி தமிழ் மக்களை நசுக்கத்தான் முயன்றது.

''ஐக்கிய தேசியக் கட்சியின் அணுகுமுறைத் தவறால்தான் தமிழர் சிக்கல் தீரவில்லை; நான் வந்தால் சில தினங்களுக்குள்ளாகவே பேச்சுவார்த்தைமூலம் தீர்த்து விடுவேன்'' என்று முழக்கி, தமிழ் மக்களின் வாக்குகளையும் பெற்றுத்தான் சந்திரிகா ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடித்தார். சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியை ஏற்படுத்தினார்.

அவரால் பிரச்சினை தீர்ந்து விடும் என்று நம்பி புலிகளும் பேச்சுவார்த்தைக்குப் போனார்கள். ஆனால் அந்தப் பேச்சுவார்த்தைத் தோல்வியையே சாட்டாக வைத்து, சிங்களப் படை முழுவதையும் வடபகுதியில் போருக்கு அனுப்பி யாழ்ப்பாணத்தையே பிடித்து விட்டதாகத்தான் சந்திரிகா உலகத்திற்குத் தம்பட்டமடித்தாரே யொழிய, தேர்தலுக்கு முன்பு தமிழ்மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதி எதையும் செயற்படுத்த முற்படவில்லை. (இதை அவர் ஆட்சிக்கு வந்த போதே 'ஈழசுதந்திரன்' சுட்டிக்காட்டியது.)

எனினும், புலிகளை வன்முறை வழிபாட்டினர் என்று காட்டி, அதன் மூலம் தமிழீழக் கோரிக்கையே பயங்கரவாதம் என்று நாட்டுவதற்காக இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் என்ற ஒன்றினை சந்திரிகா முன் வைத்தார்.

அது பற்றி முன்னைய ஆளும் கட்சி, தற்போதைய பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் தன்னுடைய கருத்தைத் தெளிவுபடுத்தாத ஐக்கிய தேசியக் கட்சி, சிங்களக் கமிஷன் என்ற ஒன்றின் மூலம் ''சந்திரிகாவின் திட்டம் தமிழர்களுக்கு நாட்டையே தாரைவார்க்கும் திட்டம்'' என்று எதிர்ப்பிரச்சாரத்தைத் தூண்டிவிட்ட ஐக்கிய தேசியக் கட்சி, ''புலிகளுடன் உடனடியாகப் பேச்சுவார்த்தைநடத்தி இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் சந்திரிகா நாடகமாடுகிறார்'' என்று இப்போது உலக அரங்கில் நடிக்கத் தொடங்கியுள்ளது.

அதே நேரம் தற்போது நடத்தும் போரை நிறுத்த வேண்டுமென்றோ, படைகளை தமிழீழப் பகுதியிலிருந்து வாபஸ் வாங்க வேண்டுமென்றோ, உணவுத் தடையை அகற்ற வேண்டுமென்றோ அது வலியுறுத்த முன்வரவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஆக, சிங்களக் கட்சிகள், முக்கியமாக ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழர் பிரச்சினையில் வெறும் கண்ணாமூச்சி ஆட்டம் ஆடிக் கொண்டிருக்கின்றன என்பதே உண்மையாகும்.

இந்தக் கண்ணாமூச்சி ஆட்டத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிராமல், தமிழ் மக்கள் விரும்பும் தீர்வினை இலங்கையில் அவர்களுக்குத் தேடிக் கொடுக்க இந்தியாவும், உலக நாடுகளும் முன் வரவேண்டும்.

கடல்வற்றிக் கருவாடு தின்போம் என்பதும், சிங்களக் கட்சிகள் ஒன்றுபட்டு தமிழர் பிரச்சினையைத் தீர்க்கும் என்பதும் கனவானதே.

### இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னியிலிருந்து

## இராணுவ கட்டுப்பாடு பகுதிக்கு மக்கள் வர அனுமதி மறுப்பு

கடந்த கிழமை தொடக்கம் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதியில் இருந்து பொதுமக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வருவதற்கு அனுமதிக்கப்பட வில்லை என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இருந்தபோதிலும் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள மன்னார் பகுதியில் இருந்து மக்கள் வன்னிப்பகுதிக்கு திரும்பிச் செல்வதற்கு படையினர் அனுமதித்தனர்.

வாரத்தின் மூன்று தினங்கள் அதாவது செவ்வாய், புதன், சனி ஆகிய நாட்களில் உயிலங்குளம் ஊடாக மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிக்குள் அனுமதிக்கப்படுகின்றனர் என்றும், நாள் ஒன்றுக்கு 600 முதல் 700 பேர் வரையில் உள்ளே வர அனுமதிக்கப்படுகிறார்கள் என்றும் லெப்டினன்ட் கி. கிகான்குமார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறு வியாபாரிகள், பயணிகள், அலுவலக ஊழியர்கள், இடம்பெயர்ந்த குடும்பங்கள் என பல்வேறுபட்ட நோக்கங்களுக்காக மக்கள்வருகின்றனர்.

இவர்களில் மன்னார் பகுதிக்குச் செல்வோர், வவுனியா பகுதிகளுக்குச் செல்வோர் மற்றும் நலன் புரி நிலையங்களுக்குச் செல்வோர் எனத் தரம் பிரித்துஅவர்களுக்கென தனித் தனி வரிசைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. அங்கு அவர்கள் பாதுகாப்பு சோதனைகளின் பின்னர் உளளேவர அனுமதிக் கப்படுகின்றனர்.

அத்தோடு இங்கு விஷேடமாக செயற்படுகின்ற மன்னார் கச்சேரி அலுவலர்கள் பதிவுகள் மேற்கொண்டதும் உரிய பொலிஸ் ''பாஸ்'' பொலிஸாரினால் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மன்னார் பகுதிக்கு செல்வோருக்கென சுமார் 15 வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

## முஸ்லிம் பகுதிக்குச் செல்ல வேண்டாம் என சுவரொட்டி

அக்கரைப் பற்று தமிழ்ப் பகுதிகளில் 'தமிழ் மக்களை முஸ்லிம் பகுதிக்குள் செல்ல வேண்டாம்' எனக் கோரும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

'ஏ.டி.ரி.எஸ்.' எனக் கூறும் அமைப்பால் இச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்த் தொழிலாளர்கள் மறு அறிவித்தல் வரும் வரை முஸ்லிம்பகுதிகளுக்குள் செல்ல வேண்டாம். ''சலவை, சவரத் தொழிலாளர் தமது பணியை முஸ்லிம்களுக்கு வழங்கக் கூடாது'', முஸ்லிம் வர்த்தகர்களிடமிருந்து பொருள்களை வாங்க வேண்டாம்'' போன்ற வாசகங்கள் சுவரொட்டிகளில் காணப்படுகின்றன.

கடந்த வாரம் அக்கரைப் பற்று பகுதிகளில் தமிழ்த்தொழிலாளர்களை முஸ்லிம் பகுதிகளுக்குள் வர வேண்டாம் எனக் கூறும் சுவரொட்டிகள் 'பி.எல்.ஓ. ஸ்ரீலங்கா' எனப் படும் அமைப்பினால் பரவலாக ஒட்டப்பட்டிருந்தன.

இவ்வாறு ஏட்டிக்குப் போட்டியாக ஒட்டப்பட்டுள் மேற்படி சுவரொட்டிகளால் அக்கரைப்பற்று பிரதேசத்தில் இனம் புரியாத அச்சம் ஏற்பட்டுள்ளது.

சுவரொட்டிகளை ஒட்டியுள்ள அமைப்பினர் யார் என்று தெரியாமல் மக்கள் வியக்கின்றனர். இதனால் பொதுமக்கள் வீதிகளில் நடமாட அஞ்சுகின்றனர்.

தமிழ் மக்கள் சந்தைக்குப் போகத் தயங்குகின்றனர். முஸ்லிம் மீன் வியாபாரிகளும் தமிழ் பகுதிகளுக்குள் வியாபாரம் செய்ய அஞ்சுகின்றனர்.

அக்கரைப்பற்று நகரில் பொலிஸாரும் அதிரடிப் படையினரும் நாள் முழுவதும் காவல் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

www.padippakam.com



## ஒரு குறளை உணர்வோம்

## ஐம்புலனைக் கொல்லும்படி அறைகிறாரா வள்ளுவர்?

- 'அருகோ' -

''அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒழிங்கு''

திருக்குறள்: 343

பரிமேலழகர் : ஐந்தன் புலத்தை அடல்வேண்டும்-வீடு எய்துவார்க்குச் செவி முதலிய ஐம்பொறிகட்குரியவாய ஓசை முதலிய ஐம்புலன்களையும் கெடுத்தல் வேண்டும்;வேண்டிய எல்லாம் ஒருங்கு விடல் வேண்டும்-கெடுக்குங்கால் அவற்றை நுகர்தற் பொருட்டுத் தாம் படைத்த பொருள் முழுவதையும் ஒருங்கே விடுதல் வேண்டும்.

'புலம்' என்றது அவற்றை நுகர்தலை- அது மனத்தை துன்பத்தானும் பாவத்தானுமன்றி வாராத பொருள்கள் மேல் அல்லது வீட்டு நெறியாகிய யோக ஞானங்களில் செலுத்தாமையின் அதனை அடல் வேண்டும் என்றும், அஃது அப்பொருள்கள் மேல் செல்லின் நுகர்ச்சி விறகு பெற்ற தழல் போல் முறுகுவதல்லது அடப்படாமையின் வேண்டிய எல்லாம் ஒருங்கு விடவேண்டும் என்றும் கூறினார்.

மணக்குடவர் : துறப்பார்க்குப் பொறிகள் ஐந்தினுக்கும் நுகர்ச்சியான ஐந்தினையும் கொல்லுதல் வேண்டும்; அதற்காகத் தாம் விரும்பின எல்லாவற்றையும் ஒரு காலத்திலே விடுதல் வேண்டும்.

பரிதியார் : ஐம்புலன்களையும் பொறிவழியிலே செல்லாமல் கெடுக்க வேணும்; ஐம்புலன் உணர்வுகளை விட வேணும்.

காளிங்கர் : இனி, இதன் உட்கருவியாகிய ஐம்புலன்களையும் துறவு நெறிக்குப் புறவழியாகிய ஐம்பொறிகளின் நுகர்ச்சியைப் பரவாமல் தனது உள்ளத்தால் செறுத்தல் வேண்டும்; மற்று அங்ஙனம் செறுத்தபின் அவ்வுள்ளத்தான் முன்னின்று விரும்புவதாகிய வேட்கைகளெல்லாம் ஒரு தன்மைப்பட விடுதல் வேண்டும்; எனவே அவ்வுள்ளமானது தானும் ஒருவழிப்பட்டு நிற்க வேண்டும் என்பது பொருளாயிற்று.

டாக்டர் மு.வ. : ஐம்பொறிகளுக்கு உரிய ஐந்து புலன்களின் ஆசையையும் வெல்லுதல் வேண்டும்; அவற்றிற்கு வேண்டியபொருள்களை எல்லாம் ஒரு சேர விடவேண்டும்.

''அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை; விடல் வேண்டும் வேண்டிய எல்லாம் ஒருங்கு'' என்று திருவள்ளுவர் செப்புவது எதற்கு?

''துறவறத்திற்கு!'' என்று, அதிகாரத் தலைப்பைக் கொண்டு இதற்கு விடை இறுக்கலாம்.

''சரி; அந்தத் துறவறம் எதற்கு?'' என்று அடுத்த கேள்வியைக் கேட்பின், ''வீடுபேற்றிற்கு'' என விடை அளிப்பர்.

''வீடு பேறுதான் வள்ளுவர் விரும்புவதாயின் அதற்காகவும் ஒரு அதிகாரத்தை, அல்லது இயலை வைத்திருக்கலாம் அல்லவா?''

உள்ளபடி பரிமேலழகர் விதந்து போற்றுகிற வடமொழி வழக்கின்படி பார்த்தால், ''தர்ம, அர்த்த, காம, மோட்சம்'' என்று சேர்த்துத்தான் 'புருஷார்த்தங்கள்' (ஆண்மைக்கோட்பாடுகள்) நான்கு என்று வடமொழி வழங்குவதையுறுத்துகிறது. ஆனால் திருக்குறள் அறம்-பொருள்-இன்பம் என்ற முப்பால் வேதம் என்ற மொழியப்படுவதால், 'துறவறம்' என்பது வீடுபேற்றுக்கான நெறியல்ல என்பது பெறப்படும்.

அப்படியாயின் திருவள்ளுவர் போற்றும் துறவறம் என்பதென்ன?

உலகைப் புதுக்கும் ஒரு குறிக்கோளை வெற்றி பெறச் செய்வதற்காக உலகியலில் மற்றவர்கள் மாந்திக்கிடக்கும் நுகர்வுகளிலிருந்து விடுபடுவது அல்லது அவற்றை வெற்றி கொள்வது என்பதேயாகும்.

ஆம்; ஒரு குறிக்கோளை எய்த வேண்டுமாயின் ஐம்பொறிகளையும் அடக்காமல் அது நடக்காது. இங்கே 'அடல்' என்ற சொல்லை ஐம்புலன்களைக் கட்டுப்படுத்துதல் என்கிற பொருளில் அல்லாமல், மணக்குடவர் உரை கூறுவதுபோல் கொல்லுதல் அதாவது அழித்தல் என்ற பொருளில் திருவள்ளுவர் ...

அடுத்து, 'விடல் வேண்டும் வேண்டிய எல்லாம் ஒருங்கு' என்று திருவள்ளுவர் கூறுவது, மற்றவர்கள் மகிழ்ச்சியான வாழ்வுக்கு எது எது தேவை என்று கருதுகிறார்களோ, அவற்றையெல்லாம் குறிக்கோள்வாதிகள் ஒருசேர விட்டுவிட வேண்டும் என்பதையே ஆகும்.

ஆமாம்; ஒரு சராசரி மனிதனைப் போல் வாழ்ந்து கொண்டு, அவனைப் போலவே புலன் நுகர்ச்சிகளில் பொழுதைக் கழித்துக்கொண்டு, அத்தியாவசிய வாழ்வுக்குத் தேவையில்லாத ஆடம்பரப் பொருள்களையெல்லாம் தேடிக்குவித்துக் கொண்டு, அவற்றைத் தேடித் திரட்டுவதிலும், பாதுகாப்பதிலுமே நேரத்தையும் நினைப்பையும் செலவழித்துக் கொண்டிருந்தால், குறிக்கோளை எவ்வாறு எய்த முடியும்?

எனவேதான் குறிக்கோள்வாதிகளுக்கு ஐம்புலன்களையும் அடக்கித் தன் வயத்தில் வைத்துக் கொள்வதும், அப்புல நுகர்ச்சிக்காக வேண்டிய பொருள்களையெல்லாம் ஒருசேர விட்டுவிடுவதும் இன்றியமையாதது என்பதை இக்குறட்பா ...

## வேலூர் மாவட்ட கல்லூரி மாணவர் பேரவை தொடக்க விழா

வேலூர் மாவட்ட கல்லூரி மாணவர் பேரவை தொடக்க விழா 22-02-98 அன்று ஆற்காடு இலங்கை அகதிகள் முகாமில் நடைபெற்றது. சென்னை மண்டலஇணைப்பாளர் செபஞானசீலன் விழாவை தொடக்கி வைத்தார். விழா ''ஈழத்துப்பண்ணுடன்'' ஆரம்பமானது. முதல் நிகழ்ச்சியாக கூட்டத்திற்கு வருகை தந்த வேலூர் மாவட்ட கல்லூரி மாணவர்களும் திருவண்ணாமலை மாவட்ட மாணவர் பேரவை நிர்வாகிகளும், முகாம் பெரியவர்களும் தங்களை அறிமுகம் செய்து கொண்டனர்.

ஆற்காடு அகதிகள் முகாமைச் சேர்ந்த ந. தயாரஞ்சன் வரவேற்புரை நிகழ்த்தினார். செபஞானசீலன் ''பேரவையும் அதன் திட்டங்களும்'' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். அவரைத் தொடர்ந்து திருவண்ணாமலை மாவட்ட மாணவர் பேரவை தலைவர் பத்மநாபன் உட்பட அனைத்து நிர்வாகிகளும் தங்கள் பேரவை செயல்பாடு பற்றி விளக்கிக் கூறினார்கள்.

இவர்களைத் தொடர்ந்து அணைக்கட்டு அகதிகள் முகாமைச் சேர்ந்த முத்தமிழன் மாணவர்களாகிய நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து உங்களை எதிர்நேர்க்கும் பிரச்சினைகளைச் சமாளிக்கும் திறனை வளர்த்துக்கொண்டு சிறப்புடன் சேவைகளைஆற்றி வர வேண்டுமென கேட்டுக் கொண்டார். இதன் பின்பு அணைக்கட்டு அகதிகள் முகாமைச் சேர்ந்த கலைக்குழுவினரின் விழிப்புணர்வுநாடகம் இடம் பெற்றது. தொடர்ந்து பேரவையை சிறப்புடன் நடத்துவது பற்றிய கருத்துக்களும் கேட்டறியப்பட்டன. அடுத்து நடைபெற்ற வேலூர் மாவட்ட கல்லூரி மாணவர் பேரவைக் குழுத் தேர்வில் தலைவர் செல்வன் என். தயாரஞ்சன், ஆற்காடு. செயலாளர் செல்வன் எஸ். ஜோண்சன், ஆற்காடு. பொருளாளர் செல்வி கே எஸ். ரூபனா, அணைக்கட்டு. உப தலைவர் செல்வன் மதிவதன் பாணாவரம். உப செயலாளர் செல்வி ஆர். சுசிலா, பாணாவரம். ஒருங்கிணைப்பாளர் செல்வன் காந்தரூபன், அணைகட்டு. கண்காணிப்பாளர் செல்வன் பாலசிங்கம், சின்னப்பள்ளிகுப்பம். ஆலோசகர் முத்தமிழன், அணைக்கட்டு. ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். பின்னர் வேலூர் மாவட்ட கல்லூரி மாணவர் பேரவையின் விதிமுறைகள் அறிமுகப் படுத்தப்பட்டன. பேரவை செயல்படுத்த இருக்கும் திட்டங்கள்பற்றியும் விளக்கம் கூறப்பட்டது. இறுதியாக செயஞானசீலன் நன்றியுரை நிகழ்த்த ஈழத்துப் பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

இக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை ஆற்காடு இலங்கை அகதிகள் முகாம் மக்களும், மாணவர் மன்றம், நலப்பணியாளரும், முகாம்விளையாட்டுக் குழுவினரும், ஆகிரியர்களும், நிர்வாக குழுவினரும் சிறப்பாக நடத்தி முடித்திட ஒத்துழைப்பு வழங்கினர், மதிய உணவு வழங்கி சிறப்பித்தனர்

## திருமலை மாவட்ட அகதிகளுக்கு உலருணவு முறையாக கிடைப்பதில்லை

திருகோணமலை மாவட்ட அகதிகளுக்கு உலருணவு முறையாக கிடைப்பதில்லை. அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகம் இது தொடர்பாக எதுவித நடவடிக்கையினையும் எடுக்காத அதே வேளை அகதிகளின் சேம நலன்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதென திருகோணமலை மாவட்ட ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் ஆரியபால வல்பிட்டகம விசனம் தெரிவித்துள்ளார்,

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் ஒன்று திருகோணமலை கச்சேரியில் இடம்பெற்றபோது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான நஜீப் ஏ. மஜீட், சுனில் சாந்த ரணவீர, மாவட்ட அரச அதிபர், திருமலை மாவட்ட பிரிகேடியர் பெர்னாண்டோ ஆகியோர் கலந்து கொண்டனர்,

அவர் அங்கு மேலும் பேசுகையில்,

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் திட்டமிட்ட நடவடிக்கை இன்மையினால் திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் சீர்குலைந்துள்ளன. இது தொடர்பான விண்ணப்பங்கள் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்டாலும் தனிப்பட்டோரின் தேவைகளே நிறைவேற்றப் படுகின்றன. மாவட்ட அபிவிருத்திக்கென எதுவும் நடக்கவில்லை.

திருமலை மாவட்ட அகதிகளுக்கு கடந்த சில மாதங்களாக உலர் உணவு நிவாரணம் ஒழுங்காக வழங்கப்படவில்லை.

நிவாரணம் ஐம்பது வீதம் குறைக்கப்பட்டுள்ளது. அதே போல் அகதி முகாம்களுக்கான மின்சாரம் மற்றும் நீர் என்பவற்றுக்கான மாதாந்தக் கட்டணங்களும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் செலுத்தப்படவில்லை. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

இதனைவிட உள்ளூராட்சி மாகாணசபை அமைச்சினால் மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கென உதவி அரச அதிபர் பிரிவினூடாக வழங்கவென தலா 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், இந் நிதிகள் ஒழுங்காக வழங்கப்படவில்லை. இது குறித்து மாவட்ட ஒருங்கிணைப்புச் சபைத்தலைவர் கவனமெடுக்க வேண்டும் என்றார்.

[illegible]

நான்கு வயது மகனுக்கு தானே நஞ்சூட்டி கொலை செய்த தாய் ஒருவர் மாத்தளை பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

தம்புள்ள வேவலவெவ கிராமத்தைச் சேர்ந்த மேற்படி பெண் திருமணமாகாதவர் என தெரிய வருகிறது தனது மைத்துனர் ஒருவர் திருமணம் செய்து கொள்வதாக உறுதியளித்ததையடுத்து மைத்துனரின் இச்சைக்கு இணங்கி ஒரு ஆண் மகவுக்கு தாயாகியுள்ளார். மேற்படி பெண் கர்ப்பமடைந்ததையடுத்து மைத்துனர் அப்பெண்ணைத்திருமணம் செய்து கொள்ள மறுத்துள்ளார். விரக்தியடைந்த இவர் குழந்தையை தன் தாய்தந்தையோடு பகல் ...

www.padippakam.com



## கற்பனைப் பொன்மகள் கவியமுதம் தந்தாள்!

கவிமணி டாக்டர் ச. ஆறுமுகநாதர்

ஓய்வெடுக்கக் கதிரவனும் மேற்கில்சென்ற பின்னே
ஓடிவந்த இருளதுவும் உலகத்தை மறைக்க
காய்கனிகள் நிறைந்திருந்த சோலைகளும் உறங்க
கண்ணுறக்கம் இல்லாமல் தவித்தஎந்தன் முன்னே
பாய்ந்துவந்த ஒளிவெள்ளம் பெண்வடிவம் பெற்றே
பாசமுடன் என்நெஞ்சில் இடம்பிடித்துக் கொண்டு
'ஆய்வென்ன என்னையுமே பாருங்கள்' என்று
அழகெல்லாம் திரண்டொன்றாய் அமையவந்து கேட்டாள்

என்னஇது புதுமையென வியப்புற்ற எனது
இருகரத்தைப் பற்றியுமே அவள்மடியில் இருத்தி
'மன்னவரே! மாமணியே! கவிமணியே!' என்று
மலர்வாயால் முத்தத்தை மகிழ்வுடனே பொழிந்து
அன்னமுடன் மான்மயில்கள் குயில்செயலைக் காட்ட
அடடாவோ, அடாவென்று அவளழகில் மயங்க
பொன்னுருவாய் என்னுருவில் இரண்டறவே கலந்து
பூரிப்பை ஊட்டுவித்து புன்னகையும் செய்தாள்

என்னுளத்தில் தன்னுருவை வரைந்துவிட்ட கன்னி
இனிமையுடன் அவளுளத்தில் என்னுருவை வரைந்தே,
கன்னலுடன் கனிச்சாறாய் கற்கண்டாய் அமுதாய்
காலமெலாம் மறக்காத காதலினை ஊட்டி
தன்வயத்தில் இருந்தென்னை தவறிடாமல் இருத்தி
தகைமையுடன் கேட்டதெல்லாம் தந்துமகிழ் ஊட்டி
'அன்னைதந்தை உறவினரைப் பார்த்துவரேன்' என்று
ஆருயிராள் சென்றிட்டாள் இன்னும்வர வில்லை!

வருகையினை எதிர்நோக்கி வஞ்சியவள், உருவை
வாஞ்சையுடன் வழியெல்லாம் விழியாக்கிப் பார்த்தும்
பெருமைமிக்க கவின்மகளும் வராதிருக்கக் கண்டு
பிரிவென்னும் துயரத்தால் பேதலித்து நின்று
அருமைமிக்க ஆருயிராள் அடக்குமுறைத் தவிப்பால்
அஞ்சுகின்ற இருளுக்கும் அஞ்சிவிட்ட தாலோ
வருவதற்கு தடையாகி இருக்கின்றாள் என்று
வருத்தமுற்றேன்; 'யாரைநான் தூதாக அனுப்ப?'

என்றுமே எண்ணிநான் மனமுளைந்து துடிக்க
இருப்பதுவும் கொள்ளாத மாலையுடன் இரவும்
தன்கடமை செய்திடவே வந்திட்ட வேளை
தண்ணிலவு மண்ணெல்லாம் வெண்ணொளியைப்பாய்ச்ச
என்நிலைமை சுரம்கண்ட உடலாக இருக்கும்
ஏக்கத்தை அவளுக்கு யார்சொல்லப் போவார்?
பொன்மகளும் என்னிடர்க்கு மருந்தாக அமைய
பூரித்து வரும்நாள்தான் எந்நாளோ அறியேன்!

வரும்நாளை அறியாது வருந்திநின்ற வேளை
வண்ணமுகம் நிலவாக வாய்கொவ்வைக் கனியாய்
பருவமதும் வில்லாக, புன்னகை முத்தாக
பூரித்த மார்பகமும் செவ்விளநீ ராக
தருணத்தைக் காட்டுகின்ற அழகெல்லாம் ஒன்றாய்த்
தன்னிடத்தில் அமைந்திட்ட கற்பனைப்பொன் மகளாள்
அருமையுடன் 'வந்திட்டேன் ஆருயிரே' என்று
அவள் வந்தாள்! செந்தமிழ்க் கவியமுதம் தந்தாள்!

### தமிழ் மக்களின் ஆதரவைப் பெற

# ஐ.தே.க. அரசியல் யோசனையை ஆதரித்தே தீரவேண்டும்

### அமைச்சர் பட்டி வீரக்கோன் வலியுறுத்தல்

அரசாங்கம் முன்வைத்துள்ளஅரசியல் யோசனையை சட்ட மூலமாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என நீதி அரசியலமைப்பு அமைச்சர்பேராசிரியர் ஜி.எல். பீரிஸை வலியுறுத்தி வருகிறேன். ஐக்கிய தேசியக் கட்சி தனது திருத்தங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கட்டும். தமிழ் மக்களின் ஆதரவைப் பெற வேண்டுமாயின் ஐக்கிய தேசியக் கட்சி அரசியல் யோசனையை ஆதரித்தே தீரவேண்டும். அதனைத் தவிர மாற்று வழி கிடையாது என திங்கட்கிழமை மாலை வெள்ளவத்தை பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தில் நடைபெற்ற ''கொழும்பில் தமிழ் மக்கள் கைது'' என்னும்தலைப்பிலான கருத்தரங்கில் உரையாற்றிய விஞ்ஞான தொழில்நுட்பத் அமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

கொழும்பில் தமிழ் மக்கள் கைது உட்பட ஏனைய பிரச்சினைகளுக்கு இனப்பிரச்சினையை அடிப்படை காரணமாகும். இந்த பிரச்சினைகள் இனப்பிரச்சினைக்கான தீர்வை துரிதப்படுத்த வேண்டும் என உணர்ந்து அரசியல் யோசனைக்கு ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவை பெற திரைமறைவில் பேச்சுவார்த்தை நடத்தி பயன் ஏதும் இடம் பெறப்போவதில்லை.

**சர்வஜன கணக்கெடுப்பு**

அரசியல் யோசனைக்கு மாற்று யோசனை சமர்ப்பிப்பதாகக் கூறிக்கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி காலத்தை கடத்தி வருகிறது. ஆகையால் அரசாங்கம் முன் வைத்துள்ள யோசனை சட்ட மூலமாக பாராளுமன்றத்தில்சமர்ப்பிக்கப் படவேண்டும் என வலியுறுத்தி வருகிறேன். அரசியல் யோசனைக்கு தமிழ்க்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என தமிழ் மக்களும் வலியுறுத்த வேண்டும். அரசியல் யோசனையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கு முன் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதில் எந்தவித அர்த்தமும் இல்லை.

அப்பாவி பொதுமக்கள் கைது மற்றும் இம்சைகள் தொடர்பான விடயங்களை கவனிப்பதற்காக ஜனாதிபதி அமைச்சர்கள் மட்டத்திலான குழுவொன்றை நியமித்துள்ளார். இந்தக் குழு நியமிக்கப்பட்டதை அடுத்து அப்பாவித் தமிழ் மக்கள் கைது செய்யப்படுதல் வெகுவாகக் குறைந்து உள்ளது. தமது நடவடிக்கைகளை கவனிக்க ஒரு குழு செயல்படுகிறது என்பதை பொலிஸார் உணர்ந்துள்ளதே இதற்கு காரணமாகும்.

வடக்கு கிழக்கு மாகாண இளைஞர்கள் மட்டுமல்ல தலையக இளைஞர்கள் கைது தொடர்பாக பலசிங்கள மக்கள் குழுவிற்குப் புகார் செய்துள்ளனர். மேலும் மலையகத்தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுகின்றனர். ஆனால் அவர்களிடம் வாக்குமூலம் பெற பொலிஸார் நிலையத்தில் இருப்பதில்லை. அப்படியானால் அவர்களை ஏன் கைது செய்ய வேண்டும் என அமைச்சர் எஸ். தொண்டமான் ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பினார்.

கைது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு எடுக்கும் பணிப்புரைகளை பொலிஸார் அமுல் நடத்ததுவதில்லை. பொலிஸார் சட்டத்தை உதாசீனம் செய்கின்றனர். தமிழ் மக்கள் பொலிஸ் நிலையத்தில் பதிந்த பதிவேட்டை கொண்டு செல்ல வேண்டிய அவசியம் இல்லை என பலமுறை வலியுறுத்திக் கூறியும் பொலிஸார் தமிழ் மக்களிடம் பொலிஸ் பதிவேட்டை கேட்கின்றனர்.

### செம்மணி புதைகுழி விவகாரம்:

## இராணுவ வீரர் உயிர்ப் பாதுகாப்பு குறித்து மன்னிப்புச்சபை கவலை

யாழ். குடா நாட்டில் காணாமல் போயுள்ளதாகக் கருதப்படும் தமிழர்களில் 400க்கும் மேற்பட்ட தமிழர்களது புதைகுழிகள் தொடர்பாக தகவல் வெளியிட்ட சிறைக்கைதியான இராணுவ வீரரின் உயிர்ப் பாதுகாப்புக் குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை தனது கவலையினை வெளியிட்டுள்ளது.

கடந்தவாரம் சிறைக்காவலர்கள் சிலரது தாக்குதலுக்குள்ளாகி காயமடைய நேர்ந்த இந்த இராணுவ வீரரது உயிர் பாதுகாப்பு விவகாரத்தையிட்டு சர்வதேச மன்னிப்புச்சபை அக்கறை தெரிவித்துஅறிக்கையொன்றினை அண்மையில் வெளியிட்டிருந்தது.

ஒருபொலிஸ்காரர் உட்பட மற்றும் ஐந்து இராணுவ வீரர்களது பாலியல் வல்லுறவு கொலைக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக இந்த ராணுவ வீரரும் மற்றும் அனைவரும் தண்டனை விதிக்கப்பட்டு, சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனரென்பது குறிப்பிடத்தக்கது.

வழக்கு விசாரணையின் போது சோமரத்ன ராஜபக்ஷ என்ற இந்த இராணுவ வீரர், 300க்கும் 400க்கும் இடைப் எண்ணிக்கையிலான நபர்கள் புதைகுழிகள் குறிப்பிட்ட இந்த செம்மணியில் இருப்பதாகத் தகவல் வெளியிட்டிருந்தார்.

செம்மணி புதைகுழிகள் தொடர்பாக குறிப்பிட்ட இந்த இராணுவ வீரரது நீதிமன்றத் தகவலையடுத்து, மனிதவுரிமைகள் குழுக்கள் மற்றும் தமிழ்க் கட்சிகள் ஆகியோர் மத்தியில் பலத்த எதிர்ப்பு நிலை உருவாகியிருந்ததுடன் பாரபட்சமற்றதொரு விசாரணை உடனடியாக நடத்தப்பட வேண்டுமெனவும் அவை கோரியிருந்தன.

## ஈழத்துக்கும் தமிழகத்துக்குமான உறவுப் பாலம்தொடர்ந்து இறுக்கமாகவே உள்ளது

### திருமலை இலக்கிய விழாவில் தமிழக முனைவர் அரசு பேச்சு

தமிழக இலக்கியப் பரப்பில் தமிழர்கள் இன்று தடம் பதித்துக் கொண்டிருக்கின்றனர். பாரதி, பாரதிதாசன் வரிசையில் ஈழத்துக் கவிஞர்களும் இலக்கியமும் 'வாழ்வும் ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்தது என்பதனை உணர்த்தி வருகின்றனர். இத்தகையவெளிப்பாடுகளின் தாக்கம் தமிழக இளைஞர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது. ஈழத்துக்கும் தமிழகத்துக்குமான உறவுப்பாலம் தொடர்ந்தும் இறுக்கம் அடைந்துள்ளது. ஆயிராக உடலாக இரத்தமாக நாம் பின்னிப் பிணைந்துள்ளோம்.

அதில் கிஞ்சித்தும் தளர்வு காணப்படவில்லை என்று திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் அருட்தந்தை தனிநாயகம் அடிகளார் அரங்கில் இடம்பெற்ற வடக்கு, கிழக்கு மாகாண இலக்கிய விழாவின் முதலாம் நாள் நிகழ்வின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய தமிழக முனைவர் வி.ரி. அரசு தெரிவித்தார். பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். முனைவர் அரசு தொடர்ந்து கூறியதாவது:-

ஈழத்துக்கலை, இலக்கியப் படைப்பாளிகள் இன்று தமிழகத்தில் தமது முத்திரையினை பதித்து வருகின்றனர்.

தமிழகத்தின் இலக்கிய விமர்சனப் போக்கு எங்கோ ஒரு திசையில் சென்று கொண்டிருந்தவேளை அமரர் கைலாசபதி மற்றும் கா. சிவத்தம்பி போன்றோர் இந்த விமர்சனப் போக்கினைத் தனித்துவமானதாக தமிழர் தம் பாரம்பரியத்திற்கு அமைவானதாக மாற்றினர். இந்த வகையில் பேராசிரியர் எம் ஏ. நுஃமான் வேறொரு நிலையில் தடம் பதித்துள்ளார்.

பேராசிரியர் சிவத்தம்பி ஒரு காலகட்டத்தில் தமிழகத்தின் கல்விமான்களிடையே மட்டும் தெரிந்தவராக இருந்தார். ஆனால் இன்றோ தமிழக மக்களின் அன்புக்குரியவராக மாறிவிட்டார். இதே போன்று இன்றைய தலைமுறையைச் சேர்ந்த கவிஞர் சேரன் நாடகக்கலையில் தடம் பதித்துள்ள இளைய பத்மநாதன் போன்றோர் தமிழக மக்களில் பெரிதும் அறியப்பட்டவர்களாக உள்ளனர் என்றார்.

www.padippakam.com



# கவிதைச் சரம்

## செய்திச்சரம்

21-8-98

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் புலிகளுக்கும், இராணுவத்தினருக்குமிடையே நடந்தசண்டையில் 20 புலிகளும், 5 இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(தினமணி, தினத்தந்தி)

ராஜீவ் கொலை நடப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன் வெளிநாட்டை சேர்ந்த ஆயுத தரகரிடமிருந்து புலிகளுக்கு பணம் கை மாறியது உண்மையே என்று அமெரிக்க செனட்டர் ஜான்கிரி தலைமையிலான அமெரிக்க தேர்வு துணைக்குழு ஒன்று வெளியிட்ட அறிக்கை ஒன்று ''பியாண்ட் டைகர்ஸ்'' என்ற புத்தகத்தில் வெளியிடப் பட்டுள்ளது.

(தினகரன்)

22-8-1999

இலங்கையில், தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் உள்ள அரசு அலுவலகங்கள், பொதுமக்களின் போராட்டத்தையொட்டி மூடப்பட்டுள்ளதாக புலிகள் தெரிவித்துள்ளனர். மேலும் வடக்கு பகுதிகள் 8 லட்சம் தமிழர்கள் அகதிகளாக உள்ளதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர். ஆனால், இதை இராணுவம் மறுத்து ஒன்றரை லட்சம் பேர்கள்தான் அகதிகளாக உள்ளனர் என்று கூறியுள்ளனர்.

(கதிரவன்)

24-8-1998

இலங்கையின் வடக்கு பகுதியில் கப்பல் பயணம்செய்வது பாதுகாப்பானது அல்ல, என்று புலிகளால் பிடிக்கப் பட்டு இலங்கை விமானப்படையால் அ[illegible]க்கப்பட்ட கப்பலின் கேப்டன் கூறியுள்ளார்.

(தினமலர்)

25-8-1998

ஜெயின் பரிந்துரை அடிப்படையில் புதிதாக அமைக்கப் பட உள்ள பல்துறை கண் காணிப்புக் குழு, ராஜீவ் கொலை வழக்கு தொடர்பாக தமிழக முதல்வர் கருணாநிதியிடம் விசாரிக்கும் என மத்திய அரசு நேற்று இரவு தெளிவு படுத்தியுள்ளது. மேலும் சந்தேகத்துக்குரியவர்களின் பட்டியலிலிருந்து மட்டுமே கருணாநிதியின் பெயர் நீக்கப்பட்டுள்ளதாகவும் அது கூறியுள்ளது.

## அன்னை மடியில்...!!!

இயற்கை தந்த வரமே—எங்கள்
ஈழத் தமிழ் இனமே!

இன்ப ஊற்றின் தளமே—பாடும்
ஏழு சப்த ஸ்வரமே!

கானம் பாடும் இனமே—ஈழக்
கன்னி மண்ணின் மணமே;

கட்டுக் கடங்கா எம் உணர்வே—சிங்களக்
கயவர்க்கு அடங்காத் தினவே!

ஈழத் தாய் கொடுத்த உறவே—இதில்
யார்க்கும் வேண்டாம் ஐயுறவே!

உடலை நாராய்க் கிழித்தாலும்
உணவைத் தர மறுத்தாலும்—விடுதலை

விடை காணாமல் தூங்காது—ஈழ
வீரனின் தாகம் தீராது!
முற்புதரை தரையில்விரித்தாலும்-செங்குருதியை
ஆறாய் ஓடச் செய்தாலும்

சுதந்திர வேட்கை தணியாது—உமது
சூட்சுமம் இங்கே பலிக்காது...!!
சந்திரனில் காலடி வைத்தாலும்—எங்கள்
சரித்திரத்திற் கிணை யாகாது...!!

நாட்டை விட்டு பிரிந்தாலும்—எங்கள்
உணர்வை நிறுத்த முடியாது...!!
நாட்டுணர்வு சற்றும் மாறாது-ஈழ
நாட்டைப் படைக்காமல் ஓயாது

T. சித்திரவடிவு
குடியாத்தம் II

## வழி காட்டும் பலகைகள்

### பாவலர் கருமலைத் தமிழாழன்

நிற்பதற்கு எத்தனையோ
கண்முன்னே காட்சிகளாய்
நிற்பதனைக் காணாமல்
நிற்கின்றாய் தடுமாறி!

தோல்விக்குத் துவளாமல்
தொடர்கின்ற முயற்சியினால்
வேல்பிடித்த வீரர்கள்
வெற்றியினைப் பறிக்கின்றார்!

நலிவுக்கு நடுங்காமல்
நல்லுழைப்பால் வியர்வை சிந்தச்
சலியாதார் தம்காத்தில்
சாதனைகள் படைக்கின்றார்!

தடைகளினைப் புதுதிசைக்குத்
தடமாக மாற்றியதில்
நடைபயின்று புதுச்சரித
நல்லேட்டைச் சேர்க்கின்றார்!

துயரங்கள் தவறுகளைத்
துலக்குகின்ற துடிப்பொன்றே
தயங்காது பிடிப்பாக்கித்
தலைநிமிர்ந்து பார்க்கின்றார்!

வாழ்க்கையெனும் பயணத்தில்
வழிகாட்டும் பலகைகள்!
தாழ்வுதனை மனமகற்று
தடுமாற்றம் மறைந்தோடும்!

## இறைவேட்டல்!

இறைவா!
ஈழத்தின் அமைதியைத் திருப்பிக்கொடு
மாங்குயில் கூவுவதை
ரசித்து நின்ற
மாணவ நேரங்களையும்
பனித்துளி கண்டு
பரவசமான
பனிக் காலைப் பொழுதுகளையும்
மீண்டும் பெற வேண்டும்

இறைவா! ஈழத்தின் அமைதியைத் திருப்பி கொடு
தோழியரோடு விளையாடிய
தாயாரின் தாலாட்டில்
கண் மயங்கித் தூங்கும்
களிப்பான இரவினையும்
மீண்டும் பெற வேண்டும்.

இறைவா! ஈழத்தின் அமைதியைத் திருப்பி கொடு
காற்றில் கைவீசி நடந்து
கண்ணாம் பூச்சி ஆடும்
அன்புக் சிறார்களின்
அந்திப் பொழுதிற்காக
இறைவா! ஈழத்தின் அமைதியைத் திருப்பி கொடு

ஜெகதீஸ்வரி நித்யானந்தன்
இ.அ. முகாம், குடியாத்தம் II

## ஈழ ஆட்சி

கோடி கோடி உடலங்கள் சுவாசித்த பின்னும்-இன்னும்
குறையாமல் வீசுகின்ற காற்று சாட்சி
கோடி கோடி வீரர்கள் மடிந்தபின்னும்-இன்னும்
குறையாமல் போரிடும் எம் தோழர் சாட்சி

கோடி கோடி உயிரினங்கள் தாகம்தீர்த்தும்-இன்னும்
குறையாமல் ஓடுகின்ற நதிகள் சாட்சி
கோடி கோடிச் செடிகொடிகள் வளர்ந்த பின்னும்-இன்னும்
குறையாமல் மழைபொழியும் மேகம் சாட்சி

மூடிமூடி வைத்தாலும் சாம்பட்டால்-மண்ணை
முட்டிமுட்டி முளைப்பதுதான் விதைகள்! எம்மைச்
சாடிச்சாடி அழித்தாலும் சிறிலங்காவே!—நாம்
தமிழீழம் படைத்திடுவோம்! பெறுவோம் ஆட்சி!

செல்வி R. பூமதி
இ.அ. முகாம், சிவகிரிப்பட்டி,
பழனி-624602.

## தமிழர் வீரம் பொய்மையோ!

ஈழத் தமிழர் தாரம் இன்னும்
முடியவில்லையே—இருளும்
விடியவில்லையே—அவர்
வாழத் துணையால் யாரும் இங்கே
துணியவில்லையே—நெஞ்சம்
கனியவில்லையே

புறநானூற்றுத் தமிழர் வீரம்
பொய்மை என்பதா?—நாம்
புன்மை என்பதா?—நாம்
அகநானூறு பேசக் கற்ற
அடிமை என்பதா? ஐயோ
அவலம் என்பதா?

நித்தம் சாவின் சத்தம் கேட்டும்
நெஞ்சமில்லையா?—கருணை
கொஞ்சமுமில்லையா?—அட
கத்தும் கடலில் இரத்தத் தீவு

காணவில்லையா?—ஒன்றும்
தோணவில்லையா?
ஐயோ பூணவில்லையா! ஈழவெற்றி

K. மாலினி
இ.அ. முகாம், அப்துல்லாபுரம்

## பேச்சுவார்த்தை மீள ஆரம்பமாவதையும் அரசியல்தீர்வு ஒன்றை பிரி. விரும்புகிறது

இலங்கையில் போர் தொடருவதை எந்த ஒரு சமூகமும் விரும்பவில்லை. பேச்சுவார்த்தை மீள ஆரம்பமாவதையும் அரசியல் தீர்வு ஒன்றையும் நாம் விரும்புகிறோம். இப்பிரச்சினை போரினால் தீர்க்கப்படக்கூடிய பிரச்சினையல்ல என்பதைஅனைவரும் உணர்ந்துள்ளோம் என நான் நினைக்கிறேன் என்று இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் தத்தம்கூறியுள்ளார்

யாழ்ப்பாணத்துக்கு அவர் மேற்கொண்ட விஜயம் தொடர்பாக பிரிட்டிஷ் தூதரகம் விடுத்த அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபைக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் தூதுவர் அளிக்கப்பட்ட வரவேற்பில் ஆற்றிய உரையில் வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் யாழ். மாநகரைப் புனரமைக்க உதவ வேண்டும் எனவும் குறிப்பிட்டதாகவும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டு உள்ளது.

www.padippakam.com



சிறுகதை

# தனிக் குருவி

ஜெகதீஸ்வரி நித்தியானந்தம்
இ. அ. முகாம், குடியாத்தம்,

அது ஒரு மழைக்காலம்
அழகான வெண்ணிலவை
ஆட்டிப் படைக்கும் வெண்ணம்
மோகத்தோடு முத்தமிட வரும்
மேகக் கூட்டங்கள்
சில்லென்ற காற்று மேனியில்
பட்டு சில்லிட்டது

அழும் நிலையில் அகண்டவானம்
தன் கண்ணீர்த்துளிகளைப்
பூமிக்கு காணிக்கையாக்கக் காத்திருந்தது.

அந்த வானைப் போலத்தான்
இங்கும் ஓர் வாலைக்குமரி
தன்னிலை எண்ணி இமையில்
கண்ணீரைத் தேக்கி நின்றாள்
எண்ணங்கள் பின்னோக்கிச் சென்றன

அழகான சின்ன வீட்டில்
அன்பான தாய் தந்தை தனயனுடன்
நிலாச் சோறு உண்ட
நினைவுகள் நெஞ்சில் மோதின!

கண்ணிலே தூசி விழுந்தால்கூட
துடிக்கின்ற அண்ணனின் அன்பு
அலக்கழித்தது மனதை!

தித்திப்பாய் கொண்டாடும்
தீபாவளியும் தைப் பொங்கலும்
அன்று வாயில் உமிழ் நீரை வரவழைத்தது!
அந்த நினைவுகள் இன்று உப்பு
கண்ணீரை வரவழைக்கிறது.

என்ன செய்வாள் பேதையவள்?
சிங்கள வெறி நாய்கள் சிதறடிக்கும்
நம்மை என்பதறியாது அன்னைநாடு
விட்டு அயல்நாடு சென்றாள்
அவளின் தாய் பிழைப்பு தேடி!

தந்தையும் அண்ணனும் தாங்கிட
தங்கையுடன் அன்புக் கூட்டில்
வாழும் வேளையில் தான்
புத்த மதம் சித்தம் கலங்கி எமைப்
புழு என்றெண்ணிப் பொசுக்கியது
கலவரத்தின் கொடுமைதனை
கண்மணியின் கண்களேபேசின!

கண்மணியின் அண்ணன் இளங்குமரன்
துடிக்கும் பருவம் துவளாத மனம்
பருவக்கால்கள் பாயில் படுத்துறங்குமா?
கடைத் தெருக்களை வலம் வர
காலனோ அவனை வலம் வந்தான்
கழுகுக் கூட்டம் உயிர் பறிக்கும்
என அறியானே காளை
தோள்களிலே மாலை சூடும் வயதில்
தோட்டாக்கள் முத்தமிட்டன உடலை
கதறினாள் பதறினாள் கண்மணி
கண்ணிலே நீர் வற்றியது கழிவிரக்கம்
வாட்டியது! விம்மிய இதயம்
வெளிச்சம் அற்ற இருளறையானது
இருந்தும் ஓயவில்லை சிங்கள
அரக்கனின் நாசவேலை! புத்தம்புது
மலர்களைக் கூடப் பிடுங்கி முகர்ந்து
கசக்கி எறிய ஆரம்பித்தது!

தன் மொட்டுகளும் கருகி விடுமோ
என்னும் தந்தையுள்ளப் பரிதவிப்பால்
தமிழ் நாட்டின் கரை சேர்ந்தனர்
மனைவியைப் பிரிந்து, மகனை இழந்து
மண்ணைத் துறந்து வதத மகளிருவரையும்
காக்க எண்ணியது அத்தந்தை மனம்

காலமும் சிறிது உருண்டோடியது
கலாச்சாரம் கொஞ்சம் ஆட்டம் கண்டது.
கள் வெறியில் சுகம் இருப்பதாய்க்
கண்மணியின் தந்தை எண்ணத்
தொடங்கினார்! தீயோரின் நட்பும்
திண்டாட வைத்தது. காலம் எப்போதும்
காத்திருப்பதில்லையே! இளைய மகள்
பூப்பெய்தினாள். தமக்கையே தாயாகிப்
போனாள் தங்கைக்கு. புயலை எல்லாம்
மனதில் அழுத்திப் புன்னகையை

மாதங்கள் சில சென்றன
மங்கையான கண்மணியின் தங்கை
பள்ளிக் கல்வி தொடர்ந்தாள்
பள்ளிக் கல்வியை தவிர
வேறொன்றும் அறியாத அவள் மனதைப்
பார்க்கவும் ஓர் கை அருகருகே
வந்து வந்து சென்றது

ஆமை போல் தன் மனவோட்டில்
முதலில் அவள் முடங்கினாள்
ஆனால் தீ நட்புக் கூட்டம் ஒன்று
அவள் மனதைத் தீண்டித்தீண்டி
விசமாக மாற்றியது இதயத்தை
இரண்டாக்கி குழப்பியது
பின் முழு நிலா மூடுபனிக்குள்
மறைந்து தன் காதலை
சொல்லியது போல் தன் அழிவிற்குத்
தானே விதை தூவினாள்.
காதலைப் புரிந்த அவளால்
ஏனோ காதலனைப் புரிய முடியவில்லை
பருவ வேகம் தினம்
தென்னை மர நிழல்தனிலே
காதல் ராகம் பாடியது

பள்ளி நூலைத் திறந்த அவளுக்கு
பாடம் ஒன்றுமே புரியவில்லை
பாவம் பேதையின் கல்வி
புயலில் சிக்கிய படகாய்
கரை தட்டி நின்று விட்டது!

இதுவோ இப்படியெனில்
இவள் தந்தையோ இன்னொரு
துணை தேடித் துக்கம் கூற
பறவை தன் துணை மறந்து
தங்கிய கதையாக ஆகினார்.
மரத்துப் போனது கண்மணியின்
மனம்! தமையனை இழந்துவிட்டு
தங்கையின் தடுமாற்றத்தை
தடுக்க முடியாமல்-சொந்தத்
தந்தையினை எதிர்க்க முடியாமல்
என்னென்னவோ எண்ணி
அழுது கொண்டு ஏங்கி நின்றாள்!

தன் அன்னையின் அன்பாவது
கிடைக்குமா? என்று கதறல்கள்!
ஓய்ந்து உள்ளம் ஊமையாக
அழுதது! தந்தையோ தன் வீட்டை
மறந்து விட்டார்! தங்கையோ தன்
பாதையைத் தேடிச் சென்றாள்!
தனிக்குருவி யொன்று இன்று
தன் துணை தேடிக் காத்திருக்கின்றது.

# யாழ்., வவுனியா, மன்னார் அகதிகளின் உலர் உணவு நிவாரண வெட்டு நிறுத்தம்

## முழுமையாக வழங்க ஜனாதிபதி பணிப்பு; முல்லை, கிளிநொச்சி நிலைமை ஆராயப்படுமாம்

பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களின் அகதிகளுக்கான உலர் உணவு, நிவாரண வெட்டை நிறுத்துமாறும் அந்த அகதிகளுக்கு ஜூன் மாதம் வழங்கிய அதே யளவு நிவாரணத்தை வழங்கும்படியும் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு பணிப்புரை வழங்கினார்.

ஜனாதிபதியின் இந்த உத்தரவை அடுத்து இம்மூன்று மாவட்டங்களிலும்வாழும் சகல அகதிகளுக்கும் உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும். ஆனால் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட உலர் உணவு நிவாரண வெட்டு குறித்து எந்த முடிவையும் ஜனாதிபதி அறிவிக்கவில்லை.

இவ்விரு மாவட்டங்களில் உள்ள அகதிகள் தொடர்பாக அரசாங்கம் முழுமையாக ஆராய்ந்த பின்னரே நிவாரண வெட்டை நீக்குவதா என்பது பற்றி முடிவு செய்யப்படும்.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்கள், கிழக்கு மாகாணம் ஆகியவற்றில் வாழும் அகதிகளுக்கான உணவு நிவாரணம் பெற்று வந்தன. அந்த தொகை 55 ஆயிரத்து 56குடும்பங்களாக குறைக்கப்பட்டன.

யாழ். மாவட்டத்தில் 18 ஆயிரத்து 857 குடும்பங்கள் உணவு நிவாரணம் பெற்று வந்தன. அந்த தொகை 8889 ஆகவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் உணவு நிவாரணம் பெற்றுவந்த 39 ஆயிரத்து 63 குடும்பங்கள் 13 ஆயிரத்து 333 ஆக்வும், மன்னாரில் 17 ஆயிரத்து 169 குடும்பங்கள் 4444 குடும்பங்களாகவும், வவுனியா மாவட்டத்தில் 8599 குடும்பங்கள் 5566 குடும்பங்களாகவும் குறைக்கப்பட்டன.

வட மாகாணத்துக்கான உணவு நிவாரணம் குறைக்கப்பட்டதை அடுத்து கிழக்கு மாகாணத்திற்கான உணவு நிவாரணத்தொகையும் குறைக்கப்பட்டது.

உணவு நிவாரண வெட்டை தமிழர் விடுதலை கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.பி.டி.பி., புளொட் உட்பட பல கட்சிகள் எதிர்த்தன.

பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டிற்குள் இல்லாத கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அரசாங்க அதிபர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் முன் உணவு வெட்டை எதிர்த்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர்.

ஜனாதிபதியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய யாழ். மாவட்ட எம்.பி.யும் ஈ.பி டி பி. இயக்கத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழு உணவு நிவாரணம் குறைக்கப்படாது மீண்டும் அனைத்து அகதிகளுக்கும் உணவு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என கேட்டுக்கொண்டது.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் கடந்த இரு மாதங்களாக குறைக்கப்பட்ட உணவு நிவாரணமே வழங்கப்பட்டது. ஆகையால் அடுத்த மாதம் முதல் அனைத்து அகதிகளுக்கும் உணவு நிவாரணம் வழங்கும் பொழுது மறுக்கப்பட்ட இரண்டு மாதத்திற்குரிய தொகையும் சேர்த்தே வழங்கப்படுமா? என்பது அறிவிக்கப்படவில்லை.

# நடேசலிங்கம் மகள் பூப்பெய்தினார்

ஈழத் தமிழர் பாதுகாப்பு கழகச் செயலாளரும், ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் ஈரோடு மண்டலப் பொறுப்பாளருமான சபாபதிப் பிள்ளை நடேசலிங்கம்-திருமதி அம்சாநந்தினி ஆகியோரின் மூத்தமகள் செல்விமிதுலாயினி, வயதுக்குவந்ததை தொடர்ந்து அன்னாரின் பூப்புனித நீராட்டு விழா 16-9-98 அன்று இலங்கை திருகோணமலை விகாரை வீதியிலுள்ள இலக்கம் 26-ஏ, நீர்ப்பாசன விடுதியில் சிறப்பாக நடைபெற்றது. செல்வி மிதுலாயினி, நடேசலிங்கம் சீரோடு வாழ ஈழசுதந்

www.padippakam.com



அறிவியல் பகுதி

# தகவல் தொடர்பில் கோட்பாடும் குழு விவாதமும்

தொகுப்பு: இரவிந்திரராசா

## X,Y கோட்பாடு

ஒரு நிறுவனத்தையோ, அல்லது அமைப்பையோ தலைமையேற்று நடத்துபவர்கள் மக்களைப்பற்றிய அவர்களது சிந்தனை ஓட்டம் ஊகங்களின் அடிப்படையிலும் அவர் தன் மனநிலையை அடிப்படையாக கொண்டும் X வகையான கோட்பாட்டை கொண்டவர்கள், Y வகையான கோட்பாட்டைக் கொண்டவர்கள் என்று வகைப்படுத்தலாமென மெக்கிரியோ என்ற அறிஞர் கண்டறிந்தார். இந்த வகையில் இத்தலைவர்களின் மனிதர்கள் பற்றிய ஊகங்களின் அடிப்படையில்

### X கோட்பாட்டை சேர்ந்தவர்கள்

1. சோம்பேறிகள்.

2. வேலை செய்வதை வெறுப்பவர்கள்.

3. ஆசைகளை வளர்த்துக் கொள்பவர்கள், தமது பாதுகாப்பைப் பற்றியே எண்ணுபவர்கள், ஏமாற்றிக்கொள்ளுபவர்கள், நேர்மை இல்லாதவர்கள், சுயநலம் உள்ளவர்கள்.

4. தலைமை ஏற்க விரும்ப மாட்டார்கள். பொறுப்புகளை தட்டிக் கழிப்பார்கள். தொடர்ந்து தொண்டர்களாகவே இருப்பர்.

5. படைப்பாற்றல் திறன் சிறிதும் இல்லாதவர்கள்.

### Y கோட்பாட்டைச் சேர்ந்தவர்கள்

இந்த மனிதர்கள்

1. நல்ல மனம் உடையவர்கள்.

2. வேலை செய்வதை ஊதியம் கருதி இல்லாமல் விருப்பமாகச் செய்வார்கள்.

3. வழிகாட்டத் தேவையில்லை. தாமே தமது பொறுப்புக்களை உணர்ந்து செயற்படுவர்.

4. சுயசிந்தனை உள்ளவர்கள். நிறுவனத்தின் குறிக்கோளை அடையக் கடுமையாக ஈடுபடுவர்.

5. பொறுப்புக்களை நிறைவேற்றிக் கொள்வதில் வழிகாட்டத் தேவையில்லை. தாமே செயற்படுவர். சந்தர்ப்பம் கிடைத்தால் தலைமை ஏற்கவும் முன்வருவர்.

5. படைப்பாற்றல் திறன் எல்லோருக்கும் உண்டு. வாய்ப்புக்கள் வழங்கப்படுவதுடன் பொதுவாக மனிதர்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள்.

**மக்கள் பற்றிய தங்களின் ஊகங்களின் அடிப்படையில் X வகையினர் பின்வரும் பண்புகளைக் கொண்டிருப்பர்**

1. தாங்கள் தான் வழி நடத்திச் செல்ல வேண்டுமென என்னுவர்.

2. அதிக பொறுப்புக்களைத் தம்வசம் வைத்திருப்பர்.

3. மற்றவர்களைத் தாழ்வாக மதிப்பார்கள். அதிகாரம் காட்டுவார்கள்.

4. பொறுப்பின் கீழ் உள்ளோர் பொறுப்பினை நிறைவேற்றாவிடின் தண்டனை கொடுப்பர்.

5. தாங்கள் விரும்பிய படி செயற்பட்டால் சன்மானம் மட்டும் கொடுப்பார்கள்.

**மக்கள் பற்றிய தங்களின் ஊகங்களின் அடிப்படையில் Y வகையினர் பின்வரும் பண்புகளைக் கொண்டிருப்பர்**

1. இந்த மனிதர்கள் மதிப்பாகவும், முதிர்ச்சி உடையவர்களாகவும் இருக்கக்கூடியவர்கள்.

2. வேலை செய்வது இவர்களுக்கு விருப்பமான செயல்.

3. குறிப்பிட்ட நோக்கத்தில் அந்நோக்கம் நிறைவேறக் கட்டுப்பாட்டுடன் வேலை செய்வார்கள்.

4. வேலைக்கு ஏற்ற வெகுமதி உண்டு என்ற எண்ணம் உடையவர்கள்,

5. பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் உயர்வான கற்பனைத்திறன், செயல் ஊக்கம், படைப்பாற்றல் திறன் உள்ளவர்கள்.

6. சாதாரண மனிதனையும் நல்ல சூழலில் கற்றுக் கொள்ளுகின்றனர். பொறுப்பினைச்செய்துமுடிப்பது மட்டுமன்றி, பணியினைத் தேடிச் செய்யவும் முற்படுவர்.

**குழு விவாதம் மக்களை சுய பரிசோதனை செய்து கொள்ள உதவும் தன்மைகள்:**

ஒவ்வொரு மனிதனுக்கும் சொந்த அனுபவங்கள் உண்டு. இதன் விளைவாக, எது சரி, எதுதவறு என்ற முடிவுகளுக்கு ஒருவர் வர முடியும். அவரது உள்ளுணர்வு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அறிவு பெற்றதாக இருக்கிறது; ஆனாலும், ஒரு இறுதியான முடிவுக்கு வரவும் சரியான வழிகாட்டி கிட்டாமலும் அவர் இருக்கலாம். தனது இந்தக் குறை குறித்து அறியாதவராகவும் அவர் இருக்கலாம். ஒரு பிரச்சினையை மற்றவர்களுடன் விவாதிக்கும் போது சரியான வளர்ச்சிப் போக்கினைப் பெற அந்த விவாதம் உதவுகின்றது.

**முதலாவதாக, குழு விவாதங்கள் தனியொருவரை, மற்றவர்களின் அனுபவ அறிவு என்ன? சில குறிப்பிட்ட முடிவுகளுக்கு அவர்கள் ஏன் வந்தார்கள் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. தனியொருவர் எடுத்த முடிவுகள் குறித்து வெளிச்சம் பெற குழு விவாதம் கைக் கருவியாக உதவுகின்றது தன்னுடைய கருத்துக்களின்** அடிப்படையை மறுசோதனைக்கு உள்ளாக்கச் செய்கிறது. தனது முடிவினை மாற்றிக் கொள்ளவும் அல்லது தனது நிலைப்பாட்டை வலுப்படுத்திக் கொள்ளவும் வழி வகுக்கிறது.

எந்த வகையில் பார்த்தாலும், அடுத்தவர்களின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஒருவர் தன்னையும் தன் முடிவுகளையும் ஆய்வு செய்து கொள்ள முடிகின்றது. நேர்மையோடும், துணிச்சலோடும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால், ஒருவன் தன்னுடைய ஆளுமைத் திறனை பழுத்த அனுபவமிக்கதாக்கிக் கொள்ள முடியும்.

**இரண்டாவதாக,** முடிவான தீர்வுகளுக்கு ஒருவர் இன்னமும் வரவில்லையானால், அவரால் இயன்ற முடிவுகளை எடுக்க குழு விவாதங்கள் பெரிதும் துணை புரிகின்றன. தான் நம்பும், உண்மையாக விசுவாசிக்கும் கருத்துக்கள் குறித்து தெளிவுபடுத்திக் கொள்ளவும் உறுதிப்படுத்திக் கொள்ளவும் குழு விவாதங்கள் ஊன்றுகோலாகின்றன. ஆபத்தான தொட்டாற் சுருங்கி மனப்பான்மையிலிருந்து காப்பாற்றுகிறது.

இரும்பினைக் கூர்மைப் படுத்த மற்றொரு இரும்பைத் (சம்மட்டி) தான் பயன்படுத்துகிறோம். அது போலவே, தனிமனிதன் தனது நண்பனை எதிர்கொள்வதன் மூலம் தன்னை, தன்னறிவைக் கூர்மைப்படுத்திக் கொள்கிறான். குழு விவாதங்கள் மழுங்கிய மதியினைக் கூட அறிவுக் கூர்மை மிக்கதாக ஆக்கிவிடுகிறது.

எனவே, மேற்கூறிய

புரட்டாசி-ஐப்பசி

> **தொழுநோய் கிருமியை கண்டுபிடித்தவர்**
>
> தொழுநோய் கிருமிகளை முதன் முறையாகக் கண்டு பிடித்த விஞ்ஞானி-ராபர்ட்கொச்.
>
> தொழுநோய்க்கான ஸ்டிரெப்டோமைசின் மருந்து கண்டு பிடிப்பில் நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி-டாக்டர்செல்மன வாக்ஸ்மன்.

தன்னைச் சுயபரிசோதனை செய்துகொள்ளவும், தான் நம்புவதை மீண்டும் சரிபார்த்துக் கொள்ளவும் குழு விவாதங்கள் வகை செய்கின்றன. குழு விவாதங்கள் ஒருவரை குழு வாழ்க்கைக்கு, சமுதாய வாழ்வுக்கு தயார் செய்கின்றது. ஒருவரது வாழ்க்கையில் மிகச் சிறிய நேரமே தனிமையில், அடுத்தவர்களிடமிருந்து அப்பாற்பட்டு அமைகிறது. **எனவே, ஒரு மனிதர் அடுத்தவர்களுடன் சேர்ந்து வாழக் கற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.**

குழு ஒன்றில் தொடர்ந்திருக்க வேண்டுமெனில், இரண்டு வழிகள் உள்ளன. குழுவாக ஒரு முடிவை எடுக்க அவர் வழிவிட வேண்டும் அல்லது தான் எண்ணிய எண்ணத்துக்கு குழுவினர் அனைத்துப் பேரையும் இணங்கச் செய்ய வேண்டும். குழுவிலுள்ள ஒவ்வொருவரும் விட்டுக்கொடுப்பதுடன் அதே நேரத்தில் பயன் பெறவும் முயல வேண்டும்,

குழுவின் ஒட்டுமொத்தப் பிரதிபலிப்புக்கு ஒவ்வொரு உறுப்பினரும் தனது ஆக்கரீதியான, சாதகமான பங்கை வழங்க வேண்டும். அடுத்தவர்களுடைய கருத்துரிமையை அங்கீகரிக்க வேண்டும். மாற்றுக் கருத்துக்களின் தகவு குறித்து அறிந்திருக்க வேண்டும். அடுத்தவருடைய கருத்துக்கள் சரியானவை என்று ஒருவர் உடனடியாக ஏற்றுக் கொள்வது கடினம்தான். தன்னுடையகருத்திலேயே பிடியாக நிற்க அவர் விரும்பக் கூடும். அடுத்தவரின் கருத்துரிமையை அங்கீகரிப்பதுடன் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமளிக்கும் வகையிலும் ஒழுக வேண்டும். ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், மாற்றுக் கருத்துக்கள் வந்த வண்ணமாகத்தான் இருக்கும்.

மாறுபாடான கருத்துக்களை சந்திக்க முன்வருவதன் மூலம், குழு விவாதங்களில் தான் பங்கெடுக்கும் போது இருந்த சூழ்நிலையை விட, மேம்பாடான அந்தஸ்தில் தாம் இருப்பதை ஒவ்வொருவரும் உணரமுடியும். பல நேரங்களில், குழு விவாதங்களின் பயனாக, அதில் இடம்பெற்று உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் முன்னேற்றம் காண்பதைக் கண்கூடாகக் காணமுடியும்.

(குழு ரீதியான நிபந்தனை வேதியல் பகுப்பாய்வு போல.)

(தொடரும்)

## ஆழியாறு இ. அ. முகாம் மாணவர் மன்ற ஆண்டு விழா

ஈரோடு மண்டலத்தைச் சேர்ந்த ஆழியாறு நகர் இலங்கை அகதிமுகாமில் மாணவர் மன்ற ஓராண்டு நிறைவு விழா, ஆழியாறு நகர் கலைமகள் மண்டபத்தில் 1998 ஆகஸ்ட் 29, 30 ம் திகதிகளில் நடைபெற்றது.

முதல் நாளன்று 6ம் வகுப்பு மாணவர்களிடையே திருக்குறள் எழுத்துப்போட்டி, 7ம், 8ம் வகுப்பு மாணவர்களிடையே 'நாட்டுத்தலைவர்கள்' என்ற தலைப்பிலான பேச்சுப்போட்டி, 9ம், 10ம் வகுப்பு மாணவர்களிடையே 'சுதந்திர தினவிழா' என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி, 6ம் வகுப்பு முதல் உயர் கல்வி மாணவர்களிடையே 'ஈழம்' என்ற தலைப்பில் கவிதை மற்றும் ஓவியப்போட்டி நடைபெற்றது.

இரண்டாம் நாள் பாலர் வகுப்பு மாணவர்களிடையே ஓட்டப் போட்டி, முதல் வகுப்பு மாணவர்களிடையே முயல் பாய்ச்சல் போட்டி, இரண்டாம் வகுப்பு, தவளை ஓட்டம், மூன்றாம் வகுப்பு பலூன் உடைத்தல், நான்காம் வகுப்பு கரண்டியில் எலுமிச்சை கொண்டு ஓடுதல், ஐந்தாம் வகுப்பு ஆண்களுக்கான சாக்கோட்டம், பெண்களுக்கான கயிறு அடித்தல், 6ம் வகுப்பு இருபாலர் 100 மீட்டர் ஓட்டம், 7ம் வகுப்பு 200 மீட்டர் ஓட்டம், 8ம் வகுப்பு 300 மீட்டர் ஓட்டம் மற்றும் விளையாட்டுக் குழுவின் கரப்பந்தாட்டம், பெற்றோர் பெண்கள்) சங்கீதக் கதிரை முதலிய விளையாட்டுப் போட்டிகளும், கலை நிகழ்ச்சிகளும் பரிசளிப்பும் நடைபெற்றன. நடனங்கள், நாடகங்கள், வில்லுப்பாட்டு முதலியனவும் இடம்பெற்றன.

ஆழியாறு கோயில் குழுதலைவர் ஆறுச்சாமி நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களான மணி, பாலு, செல்வி, பவானி மண்டல மருத்துவப் பொறுப்பாளர் பூங்குன்றன், ஈ.ஏ.ம.க. சேவையாளர் குகதாசன், மாவட்டத் தொண்டர் பிரியந்தன், முகாம் விளையாட்டுக்குழு ஆலோசகர்கள் சண்முகப்பிரியா, ஜோசப் முகாம் தலைவர் கணபதி மற்றும் முகாம் காப்பாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்-ஆசிரியர் சங்க உறுப்பினர்கள், போதனா மைய ஆசிரியர்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். நன்றியுரை மாணவர் மன்றத் தலைவர் பி. நிரோஷன்.

இவ்விழாவில் வழங்கப்பட்ட பரிசுப் பொருட்களில் மூன்றில் இரண்டு பங்கை ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகமும், மூன்றில் ஒரு பங்கை ஜே.ஆர்.எஸ். அருட்தந்தை வின்னி ஜோசப்பும் வழங்கி உதவினர். ஏனைய செலவுகளை முகாம் மக்களே ஏற்றுக் கொண்டனர்.

இவ்வாறு தெரிவிக்கும் மாணவர் மன்றச் செயலாளர் எல். ஹத்தீஸ், தலைவர் பி. நிரோஷன் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றனர்.

www.padippakam.com



# ஈரோடு மண்டல ஈ.ஏ.ம. கழக மாணவர் அமைப்பும் கலந்துரையாடலும்

## மாணவர்கள் மத்தியில் புத்தெழுச்சி

**ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் ஈரோடு மண்டல மாணவர் அமைப்புக் கூட்டமும், உயர் கல்விக்கானகலந்துரையாடலும் ஈரோடு நகரில் உள்ள மண்டலப் பணிமனையில் 1998 ஆகஸ்ட் 14, 15, 16ம் திகதிகளில் நடைபெற்றன.**

கலந்து கொண்டோரின்விபரம்:

முன்னிலை : சபாபதி நடேசலிங்கம் (மண்டலப் பொறுப்பாளர்).

1. ந. இரவீந்திரராஜா
2. யோ. சீலன்
3. க.சதீஸ்வரி,
4. க. ஸ்ரீலட்சுமிப்பிரியா

பங்கு கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை-58.

கலந்துரையாடல் தமிழ்த் தாய் வாழ்த்து மற்றும் ஈழத்துப் பண்ணோடு இனிதே ஆரம்பமானது.

முதலில் எமது மண்டலப் பொறுப்பாளர் ச. நடேசலிங்கம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

தொடர்ந்து, சுய அறிமுகம் ந. இரவீந்திரராஜாவால் மேற்கொள்ளப்பட்டது. இதில் அனைவரும் தங்களைப்பற்றிய சிறுகுறிப்புடன் தம்மைத்தாமே அறிமுகம் செய்து கொண்டனர். இதன் மூலம் பங்கேற்ற அனைத்து மாணவர்களிடையே ஓர் இறுகிய தன்மை நீங்கி நாம் அனைவரும் நண்பர்கள் என்ற முறையை,உறவு முறையை ஏற்படுத்திக்கொள்ள ஏதுவாக இருந்தது.

கூட்ட நோக்கமும் அதன் செயற்பாடுகளும் என்ற தலைப்பில் எமது மண்டலப் பொறுப்பாளர் பேசுகையில்:

''நாளைய ஈழத்தில் எமது சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் முக்கிய பங்கு தமிழ் நாட்டிலுள்ள ஈழ மாணவர் சமுதாயத்தையே சார்ந்துள்ளது. இதற்கமைவாக தமிழக அரசினாலும் தொண்டு நிறுவனங்களாலும் ஏற்படுத்தபட்டுள்ள அனைத்து வசதிகளையும் பயன்படுத்திஈழ அகதிகள் முகாம்களிலுள்ள மாணவர் சமுதாயம் எதற்காக சிங்களப் பேரினவாத அரசு எம்மையும் எமது இனத்தையும் முழுமையாக நசுக்க முற்பட்டதோ அதனை முறியடிக்கும் வகையில் கல்வியிலே நாம் சிங்களவர்களுக்கு சளைத்தவர்கள்அல்லஎன்பதை நிரூபித்துக் காட்டவேண்டும்.

முகாம்களிலுள்ள 12-ம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர் சமுதாயம்முகாம்களிலுள்ள இளைய மாணவர். சமுதாயத்தை வழிநடத்தும் முகமாக தாம் பெற்ற கல்விச் செல்வத்தை அவர்களுக்கு வழங்கி அவர்களும் மிகச் சிறந்த கல்விமான்களாக உருவாக வேண்டுமென்ற நோக்குடன் செயல் படவேண்டும் என்றார்.

### யோ-கரி யன்னல்

பிற்பகலில் ''தகவல் தொடர்பு மற்றும் தலைமைத்துவப் பயிற்சி வெளிப்படுத்துதல்'' என்றதலைப்பில் ந. இரவிந்திரராஜா விளக்களித்தார்:

''யோ—கரி யன்னல்'' என்ற பகுதியினைத் தெளிவு படுத்துகையில் யோ மற்றும்கரி என்ற உளவியல் அறிஞர்கள் மனிதனில் நடத்தையின் அடிப்படையில் அவனது மனநிலைகளை நான்காகப் பிரித்து இருக்கின்றார்கள். அதனால் இது 'யோகரி யன்னல்' என்று அழைக்கப்படுகிறது. என்று கூறியதோடு, அதனுடைய நான்கு பகுதிகளைப் பற்றியும் மாணவர்களுக்கு விளக்கி ஒவ்வொரு மாணவர்களும் தாங்கள் எந்தப் பகுதியில் தற்போது இருக்கின்றோம். எமது குண நலன்கள் என்ன அவற்றை எவ்வாறு படிப்படியாக மாற்றலாம், எந்தப் பகுதியில் இருப்பதுநல்லது என்பதை எளிதாக உணரக்கூடியதாகத் தெளிவு படுத்தினார்.

மேலும், ''தேவை என்றால் என்ன?''—என்ற கேள்விக்கு நம்மிடம் இருக்கின்ற ஒன்றுக்கும், இல்லாத ஒன்றுக்கும் இடையே உள்ள இடைவெளியே அதுவாகும். உதாரணமாக, ஒரு சிறுமியிடம் ஓர் பள்ளிச் சீருடைதான் இருக்கிறது என வைத்துக் கொள்வோம். அவளுக்கு மாற்றி அணிய இன்னுமொரு பள்ளிச் சீருடை இருக்க வேண்டும் என நினைப்பது அவளது 'தேவை' அதுபோல ''விருப்பம் என்றால் என்ன?'' என்ற கேள்விக்கு—அச்சிறுமிக்கு மாற்றியணிய ஒரு சீருடையல்லாமல் பல (ஒன்றுக்கு மேற்பட்ட) சீருடைகள் வேண்டும் என அவள் எண்ணுவது விருப்பம் ஆகும் என்றும் விளக்கினார்.

### மன அழுத்தம்

மேலும் ''பிரச்சினை என்றால் என்ன?'' என்ற கேள்விக்கு ஒரு தனி மனிதனோ அல்லது குழுவோ, அல்லது ஓர் சமுதாயமோ தனது தேவையை அல்லது குறிக்கோளை அடைய ஏற்படுகின்ற தடையோ அல்லது இடையூறோதான் பிரச்சினை என்று அழைக்கப்படும். இவ்வாறு நமக்கு பிரச்சினைகள் ஏற்பட்டால் அவற்றை எவ்வாறு சமாளிப்பது, தீர்ப்பது என விளக்கியவிதம் மாணவர்களுக்கு மத்தியில் மிகப் பெரிய விழிப்புணர்வையும், வாழ்க்கைக்குத் தேவையான விடயம் என்று ஆழ்ந்து கவனித்த அவர்களது ஆர்வமும் எம்மையே வியப்படையச் செய்தது.

தொடர்ந்து 'மன அழுத்தம்' என்றால் என்ன?'-என்ற கேள்விக்கு, ''உடல் உள ரீதியாக தனது இயல்புநிலை மாறி அமைதியற்ற பதட்டமான ஓர் நிலையை அடைவதே'' மன அழுத்தம் அல்லது மன உளைச்சல் எனப்படும். இம் மன அழுத்தம் எந்த ஒரு மனிதனையும் விட்டு வைக்கவில்லை. ''எனக்கு எப்போதும் மன அழுத்தம் இருந்ததேயில்லை நான் எப்பொழுதும் இயல்பாகவே இருக்கின்றேன்' எனக் கூறுகின்ற எந்த ஒரு மனிதனையும் நாம் காண்பது அரிது. இவ்வாறு நம்மையெல்லாம் ஆட்டிப் படைக்கின்ற இம்மன உளைச்சல் இல்லாத வாழ்வால் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்ல முடியாது. இது இருக்க வேண்டும். ஆனால் அளவோடு.

### உணர்ச்சி மயம்

இவ்வாறு மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களை எவ்வாறு இனம் காண்பது? இந்த மன அழுத்தம் எப்படி, எதனால் ஏற்படுகின்றது?, இவ்வாறான மன உளைச்சலை எவ்வாறு சமாளிக்கலாம் அல்லது குறைக்கலாம்? அல்லது தீர்க்கலாம் என விரிவுரையாற்றியதிலிருந்து அனைத்து மாணவ மாணவியர்களும் கண்ணிமைக்காமல் மிகவும் ஆர்வமுடன் கவனித்ததோடல்லாமல், தமது ஐயங்களையும் கேட்டுப் போக்கிக் கொண்டனர். இதன் மூலம் நாம் அவர்களுக்கு கற்பித்தபோதனைகள் அவர்களுக்குள் ஓர் தாக்கத்தை நிச்சயமாக ஏற்படுத்தியிருக்கும் எனவும், அதன் பிரதிபலன் நிச்சயமாக நன்மையே தரும் என்பதையும் நாம் எளிதில் உணரக்கூடியதாக இவ் வகுப்புக்கள் அமைந்தன.

இப்பயிற்சியின் நிறைவாக ''இலக்கு'' என்றால் என்ன?, ''குறிக்கோள்'' என்றால் என்ன?, இலக்கு நிர்ணயித்தலின் பயன் என்ன?' இலக்கு நிர்ணயித்தல்என்றால் என்ன? அது அவசியமானதா?போன்ற கேள்விகளுக்குப் பதில் கூறி விளக்கமாக அவர் ஆற்றிய உரைகள் இலக்கு என்பதன் முக்கியத்துவத்தையும் -இலக்கு குறிக்கோள் இல்லாத ஓர் வாழ்வு எப்படி இருக்கும் எனவும், இலக்கினை எவ்வாறு நிர்ணயிக்கலாம்-அதன் பயன்கள் என்ன என்பதையும் மாணவர்களுக்கு உணர்த்தி வழி காட்டியது.

அடுத்ததாக,''சிரமதானப் பணி'' ஆரம்பமானது. இதில் அனைத்து மாணவர்களோடு பயிற்றுனர்களும் கலந்துக் கொண்டு அவ்வளாக வளாகத்தையும், அதனைச் சுற்றிய பல பகுதிகளையும் மிகவும் உற்சாகத்துடன் சுத்தம் செய்தனர். இப்பணி முடிவடைந்ததும்சிரமதானம் செய்து களைப்படைந்த அனைத்து மாணவ-மாணவியர்களுக்கும் களைப்பு தீர்ந்து புத்துணர்வு பெறஇனிய சுவையடங்கிய தேநீர் வழங்கப்பட்டது.

தொடர்ந்து, கல்லூரிமாணவர்பேரவை அமைப்பு-மாவட்ட மாணவர் அணி தெரிவு மற்றும் கல்லூரி மாணவர் பேரவை தேர்வு ஆகியவை மேற்கொள்ளப்பட்டன.

### அமைப்புகளின் விபரம்:

1. மாவட்ட மாணவர் பேரவை அமைப்பு.
2. மண்டல மாணவர் பேரவை அமைப்பு.
3. மாவட்டக் கல்லூரி மாணவர் பேரவை அமைப்பு.
4. மண்டலக் கல்லூரி மாணவர் பேரவை அமைப்பு.

இவற்றில் முதலில்

1. மாவட்ட மாணவர் பேரவை அமைப்பு:-

### சேலம்/நாமக்கல் மாவட்டம்

தலைவர்-எஸ். மஞ்சுளா, பவளத்தானூர் ஏரி,செயலாளர் ஏ. பிரபாகரன்,பரமத்தி.

### தர்மபுரி மாவட்டம்

தலைவர் என். நவசீலன், பாம்பாறு, செயலாளர் ஜி. சுஜாதா, அரூர். பொருளாளர் ஏ. திவாகர், தும்பளகள்ளி உபதலைவர் ஆர். ரஞ்சனி, அரூர்; உபசெயலாளர் வி. கிருஷ்ணகுமாரி, ஊத்தங்கரை.

### ஈரோடு மாவட்டம்

தலைவர் சி. சசிகுமார், செயலாளர் டி. கவிதா, பொருளாளர் எஸ். பிரீடன்ராஜ் உறுப்பினர்கள் சர்மிளா, இலங்கேஸ்வரன், சார்லஸ்.

2. மண்டல மாணவர் பேரவை அமைப்பு:-

தலைவர் எஸ். சசிக்குமார் உபதலைவர் நவசீலன், செயலாளர் டி. கவிதா, உபசெயலாளர் எஸ். பிரீடன்ராஜ், பொருளாளர் ஏ. பிரபாகரன், உப பொருளாளர் எஸ். மஞ்சுளா, உறுப்பினர்கள்: எம். தமிழ்ச்செல்வன், எஸ். சங்கர், ஐ. ராபின் ஜுனியர், எம். திவாகர், ஜி. சுஜாதா, எம். இளங்கேஸ்வரன்.

3. மாவட்ட கல்லூரி மாணவர் பேரவை அமைப்பு:-

### சேலம்/நாமக்கல் மாவட்டம்

தலைவர் எஸ். கிங்ஸ்லி பரமத்தி முகாம், செயலாளர் ஏ. ஜெயமலர் குறுக்குப்பட்டி அட்டை, பொருளாளர் ஆர். இராஜேந்திரன்,பவளத்தானூர் ஏரி. உறுப்பினர்கள் ஆர். விவேகானந்தன், எஸ். பத்மநாதன், குறுக்குப்பட்டி. எஸ். சாந்தகுமாரி பரமத்தி. ஜே. ஷெல்டன், பரமத்தி, கே. பத்மநாதன் பரமத்தி. பி.சுசானா பரமத்தி.

### தர்மபுரி மாவட்டம்

தலைவர் என். நிகேவன், தொப்பையாறு. உபதலைவர் எல். சித்ரா ஊத்தங்கரை. செயலாளர் பி. சுபானி, கெலவரப்பள்ளி. உப செயலாளர் எஸ். சுபாஷினி, தும்பளகள்ளி. பொருளாளர் எஸ். விஜயலட்சுமி, ஊத்தங்கரை.

### ஈரோடு மாவட்டம்

தலைவர் ஜீன், செயலாளர் நிக்சன், பொருளாளர் விஜிதா, உறுப்பினர்கள் சி. விஜூஜ் மல்கம், சசிக்குமார், ஆனந்தசிவம், பார்த்தீபன், ரஞ்சகுமார்,இந்திராகாந்தி.

### கோவை மாவட்டம்

தலைவர் யேரிதிரேசா, செயலாளர் விஜேந்தினி,பொருளாளர் விக்டர் சுரேஷ்.

4. மண்டல கல்லூரி பேரவை அமைப்பு:-

தலைவர் எஸ். கிங்ஸ்லி, பரமத்தி. செயலாளர் எம். நிகேதன் தொப்பையாறு. பொருளாளர் எக்ஸ். நிக்சன், புவானிசாகர். உபதலைவர் எஸ். மேரிதிரேசா, பூலூவப்பட்டி. உபசெயலாளர் பி. சுபானி ஓசூர் (கெலவரப்பள்ளி), உறுப்பினர்கள் ஆர். இராஜேந்திரன், எல். சுரேஷ், எஸ்.விஜயேந்தினி,ஏ.விஜிதா, ஈ. ஜீன் ரொபினா, எஸ். விஜயலட்சுமி, ஏ. ஜெயமாலா.

இரண்டாவது நாள் (15-8-1998 சனிக்கிழமை) நிகழ்ச்சியில் முதலில் நலப்பணி சேவையில் முதலுதவி பற்றிய பயிற்சிகள் பற்றி மண்டலப் பொறுப்பாளர் கூறினார். சத்துணவு தயாரிப்புத் தொடர்பான களப்பணி மற்றும் அறிமுகம் என்ற தலைப்பிலும், சத்துணவுஎவ்வாறு தயாரிக்கப்படுகிறது, இதில் என்னென்ன பொருட்கள் சேர்க்கப்படுகிறது. இவற்றில் என்ன சத்துக்கள் அடங்கியுள்ளன, இதை உட்கொள்வதனால் ஏற்படுகின்ற நன்மைகள் என்ன? என்றும், முகாம்களில் சத்துணவு பற்றி மக்கள் கொண்டுள்ள மதிப்பீடுகள் என்ன? என்றும் அவர்களுக்கு எமது கருத்துக்கள் எவ்வாறு போய்ச் சேர வேண்டும்? அதற்கு எப்படி மாணவர்கள் சமுதாயம் நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றியும் விளக்கினார்.

தொடர்ந்து வருவாய் ஊக்குவிப்புத் திட்டம் மற்றும் ஆயத்த ஆடை தொடர்பாக செல்வி க; சதீஸ்வரி விளக்கினார். இதில் வருவாய் ஊக்குவிப்புத் திட்டம் என்றால் என்ன? அதனை நாம்எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம், ஆயத்த ஆடைகள் எப்படி உருவாகின்றன. அது எவ்வாறு மக்களுக்கு போய் சேருகிறது என்பது பற்றி மாணவர்கள் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும் என்பது போன்றவைகளோடு, பொதுவாக கழகச்சேவைகள் என்னென்ன என்று மாணவர்களாகிய நாளையச் சமுதாயம் நன்கு இப்போதே அனைத்தையும்

(11ம் பக்கம் பார்க்க)

# ஈழத்தமிழர் வரலாறு

## [கி. பி. 1000 வரைக்கானது]

கலாநிதி சி. க. சிற்றம்பலம்
(வரலாற்றுத்துறைத் தலைவர், யாழ். பல்கலைக் கழகம்)

## 10. பொருளாதாரம்

ஈழத்தின் பொருளாதாரத் துறையிலும் குறிப்பாக வாணிபத் துறையில் தமிழ்மக்களின் பங்கு காத்திரமாக இருந்ததைப் பாளி நூல்கள் மட்டுமின்றிப் பிராமிக் கல்வெட்டுகளும் எடுத்துக் காட்டியுள்ளன. இதுபற்றி ஏற்கனவே ஆராயப்பட்டாலும் கூட மேலோட்டமாக இங்கே குறிப்பிடுவது அவசியமாகின்றது. தேவ நம்பிய தீஸனின் தம்பியாகிய அசேலனிடமிருந்து அரசியலதிகாரத்தினைக் கைப்பற்றியவர்களாக தமிழகத்தில் இருந்து வந்த குதிரை வணிகனின் புத்திரர்களாகிய சேனன், குத்திகன் ஆகியோர் குறிப்பிடப் படுகின்றனர்.

தமிழகத்தவர் குதிரை வாணிபத்தில் ஈடுபட்டதை இது எடுத்துக் காட்டுவதை வவுனியாவிற் கிடைத்த பிராமிக் கல்வெட்டொன்றில் 'வேளிர்' குழுவைச் சேர்ந்த ஒருவன் குதிரைகளை மேற்பார்வை செய்யும் பொறுப்பதிகாரியாகக் கடைமையாற்றியது மேலும் உறுதிப்படுத்துகின்றது119. இவ்வாறே தமிழ் வணிகர் ஈழத்தில் கிறிஸ்தாப்த காலத்திற்கு முன்னர் செல்வாக்குப் பெற்றிருந்ததை அநுராதபுரம், வவுனியா, சேருவல குடிவில் போன்ற இடங்களிற் காணப்படும் பிராமிக் கல்வெட்டுகளும் ஆமோதிக்கின்றன.120

அம்பாறை மாவட்டத்திலுள்ள குடுவிலில் காணப்படும் கல்வெட்டின் தமிழ் வணிகரின் மனைவி 'திஸ' பற்றிய குறிப்புண்டு. அத்துடன் இக் கல்வெட்டில் இவ்வணிகர்கள் நீண்ட காலமாக இங்கு குடிகொண்டு இவ்வணிகத் தொழிலை மேற்கொண்டிருந்ததை இதில் இடம்பெற்றுள்ள 'தீகவாபி பொறன வணிஜ' என்ற பதம் எடுத்துக் காட்டுகின்றது. பழைய என்ற பொருளைத் தருவது தான் 'பொறன' என்ற பதமாகும். இத்தகைய வணிகர்கள் குழுக்களாக இயங்கியதை அநுராதபுரத்தில் கிடைத்துள்ள கி.மு. 3/2 ஆம் நூற்றாண்டுக்குரிய பிராமிக் சாசனம் மேலும் எடுத்துக் காட்டுகின்றது. இவர்கள் இவ்விடத்தில் நிலைகொண்டு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டதைக்கூறும் இச்சாசனத்தில் இவர்களின் பெயர்கள் மட்டுமின்றி இவர்களின் தலைவன் பற்றிய குறிப்பும் காணப்படுகின்றது. சக, நசத, திஸ, கபிரசுயாத போன்ற இவர்களின் பெயர்கள் பௌத்த மதத்தினை இவர்கள் தழுவி இருக்கலாமென உணர்த்துகின்றன. வவுனியாவிலுள்ள பிராமிக் கல்வெட்டுகளிலும் தமிழ் வணிகன் விசாகன் பௌத்த மதத்திற்கு அளித்த நன்கொடை பற்றியே பேசப்படுவதும் ஈண்டு அவதானிக்கத்தக்கது.

அநுராதபுரக்-கல்வெட்டின் இன்னொரு சிறப்பு யாதெனில் இக்குழுவின் தலைவனாகிய கப்பலோட்டியாகிய (நாவிக) கரையான் (கராவ) என விளிக்கப்படுவதாகும். நாவிக என்ற பதம் கப்பலோட்டியையே குறிப்பதாகும். இக்கப்பலோட்டி கரையார் சமூகத்தினைச் சேர்ந்தவனாகக் காணப்படுகின்றான். பரத குலத்தின் ஒரு பிரிவினரே கரையார் ஆகும். ஈழத்திலுள்ள நூற்றுக்கு மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுகளில் இக்குலத்தவர் பட/பரத என விளிக்கப்பட்டுள்ளதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். இவர்கள் குதிரை வாணிபத்திலீடுபட்டதோடு முத்து சங்கு குளித்தலில் ஈடுபட்டிருந்தனர். முத்துக்குளித்தலில் ஈடுபட்டிருந்தோர் முக்குவர் என 'அழைக்கப்பட்டனர். கண்ணகி வழக்குரைக் காதையில் வரும் 'மீகாமனும்' இக் கரையார்சமூகத்தவனே. அத்துடன் மீகாமனென்பது 'கப்பலோட்டி' எனப் பொருள்படும். இதற்கும் அநுராதபுரத்திலுள்ள 'நாவிக'என்ற பதத்திற்குமிடையேஉள்ளஒற்றுமை அவதானிக்கத்தக்கது. மீகாமன் வெடியரசன் ஐதீகங்கள் கூட வாணிபத்துறையில் இச் சமூகத்தினரிடையே ஏற்பட்ட போட்டி பூசலைச் சித்தரிக்கும் ஐதீகங்களாகலாம். அதுமட்டுமின்றித் தமிழகத்தவரும் வாணிபக் குழுக்களாக இயங்கியதை கோவலன், கண்ணகி ஆகியோரின் தந்தைமாரின் பெயர்களே எடுத்துக்காட்டுகின்றன. மாசாத்துவான் என்பது 'தரை வழி வர்த்தகக் குழுவின் தலைவன்' எனப் பொருள்படும். இவ்வாறே மாநாய்கன் என்பதும் கடல்வழி வர்த்தகக் குழுவின் தலைவன் என்பது பொருளாகும்.

தமிழ்நாட்டு வணிகர் ஈழத்தோடு கொண்டிருந்த உறவு ஐதீகங்களாகவும் சித்தரிக்கப் பட்டுள்ளது. நாகநாட்டு (ஈழத்தின் வடப்குதி)இளவரசி பீலிவளை தனது மகனை அவனின் தந்தையாகிய சோழ அரசன் நெடுங்கிள்ளிக்கு இப்பகுதியுடன் வர்த்தக நடவடிக்கையிலீடுபட்டிருந்த கம்பளச் செட்டி மூலம் அனுப்பியசெய்தியானது இரு பகுதிகளுக்குமிடையே காணப்பட்ட வர்த்தகத்தில் 'செட்டி' வணிகர் கொண்டிருந்த பங்கினை எடுத்துக் காட்டுகின்றது.121

நாகநாடாகிய மணிபல்லவத்தில் தென்கிழக்காசிய நாடுகளுடன் வர்த்தக நடவடிக்கைகளிலீடுபட்ட தமிழ் வணிகர் தங்கி நின்று செல்வது பற்றியும் மணிமேகலை குறிப்பிடுகின்றது.122 தமிழகப் புகார் நகரத்தில் வாணிபத்திற்காக வந்து குவிந்த வெளிநாட்டுப் பொருட்களில் ஈழம், கடாரம் (மலேயா) ஆகிய நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட பொருட்களே ஈழத்துணவும் காழகத் தாக்கமும் எனப் பட்டினப் பாலை கூறுகின்றது.122 ஈழத்தவர் உரோமருடன் மேற்கொண்ட வர்த்தகத் தொடர்புகள் கிறிஸ்தாப்த காலத்திற்கு முன்னர் தமிழகத்தினூடாகவே நடைபெற்றன.

உரோமர்கள் ஈழத்திற்கு வருவதற்குப் பதிலாக ஈழத்து வாசனைத் திரவியங்களை தமிழகத் துறைமுகங்களிலேயே பெற்றுச்சென்றனர். இதனால் ஈழத்தின் வெளிநாட்டு வர்த்தகத்தில் தமிழக வணிகர் பெற்றிருந்த காத்திரமான பங்கு புலனாகின்றது. தென்கிழக்காசிய நாடுகளுடன் மட்டுமின்றி மத்திய தரைப் பிரதேசத்திலும் செங்கடலூடாக வாணிப நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டிருந்ததை எகிப்து நாட்டில் கிடைத்துள்ள தமிழ் வணிகரின் பெயர் பொறித்த தமிழ்ப் பிராமி வடிவிலமைந்த இரு மட்பாண்டச் சாசனங்கள் உறுதி செய்கின்றன.

இவ்வாணிப நடவடிக் கரை ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுகள் 'கஹபதிகள்' என அழைக்கின்றன. வியாபார நடவடிக்கைகளிலீடுபட்ட செல்வந்த குழுவினரையே சுட்டி நிற்கின்ற பதமாக இதனைக் கொள்ளலாம்.124 இத்தகைய குழுவிற்றான் மாசாத்துவான், மாநாய்கன் ஆகியோரும் அடங்குவர். தமிழகத்தில் மதுரை மாவட்டத்தில் உள்ள திருப்பரங்குன்றக் கல்வெட்டில் (கி.பி. 1/2 ஆம் நூற்றாண்டு) இக்குழுவினர் 'குடுமிக்ள்' என்ற பதத்தினாலும் அழைக்கப்பட்டுள்ளனர். 125 இக்கல்வெட்டு 'ஈழத்துக் குடுமிகன்' பற்றிக் குறிப்பிடுவதை நோக்கும்போது ஈழத்து வணிகன் மதுரையில் தங்கி வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது தெரிகிறது. மதுரையிற் கிடைக்கும் பிராமிக் கல்வெட்டுக்களும் இங்கு நடைபெற்ற வர்த்தக நடவடிக்கைகள் பற்றிப் பேசுவதும் ஈண்டு அவதானிக்கத் தக்கது.

கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்குரிய பல்லவ கிரந்தத்திற் காணப்படும்திரியாய்ப் பாறைக் கல்வெட்டில் ரபுசக்க, வல்லிக என்ற இருவணிகர்கள் பற்றியும், அவர்கள் அமைத்த கிரிகண்ட தூபி பற்றியும் குறிப்புளது. 126 பல்லவ கிரந்தத்தில் இது காணப்படுவதால் இவர்களை தமிழக வணிகர் என இனங்கண்டு கொள்ளுவதில் தவறில்லை. எனினும் இவர்கள் குடியிருந்த பெயர்களும் இவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளுக் இவர்களைப் பௌத்தர்களாகவே இனங்காண வைக்கின்றது. பல்லவர் காலத்தில் திரிகோணமலைப் பகுதியுடன் தமிழகத்தவர் வர்த்தக நடவடிக்கைகளின் ஈடுபட்டதை இங்குள்ள 'பல்லவ வங்க' என்ற துறைமுகத்தின் பெயர் எடுத்துக் காட்டுகின்றது.

வங்கம் என்றால் கப்பல் எனப் பொருள்படும். பல்லவ நாட்டிலிருந்து வந்த கப்பல்கள் நிறைந்து காணப்பட்டதால் இது இவ்வாறு பெயர் பெற்றிருக்கலாம். அநுராதபுரத்தில் தமிழ் வணிகர் குழுக்களாக இயங்கிச் செயற்பட்டதை இங்கு கிடைத்த மூன்று தமிழ்க் கல்வெட்டுகள் எடுத்துக்காட்டுகின்றன. இவற்றுள் முதலாவது 'நான்குநாட்டார் என அழைக்கப்பட்ட வர்த்தககணத்தவரது ஆகும். இவர்கள் இங்குள்ள மாகோதைப் பள்ளிக்குஅளித்த நிவேதனம் பற்றி இது கூறுகின்றது மாகோதை என்பது பழைய சேர நாட்டிற் காணப்படும் இடமாதலால் இவர்கள் இவ்விடத்திலிருந்தே இங்கு வந்தவர்கள் எனலாம்மற்றைய இரு கல்வெட்டுகளும் 'குமார கணம்' என அழைக்கப்பட்ட மற்றுமொரு தமிழக வர்த்தக கணத்திற்குரியது.

இக்கல்வெட்டில் இங்குள்ள இந்துஆலயத்தில் நடைபெறும் கிரிகைகளுக்கு இவர்கள் நிவேதனமாக அளித்த பணம் பற்றிய குறிப்புளது. இப் பணத்தை இங்குள்ள வணிகரான 'செட்டி'களிடமிருந்து இவர்கள் பெற்றதாகவும் கூறப்

படை எடுக்க முன்னர் ஈழத்து அரசியல் நிலைமை, குதிரை வணிகனின் மூலமாக அறிந்த செய்தியினைச் சூளவம்சம் குறிப்பிடுவதை நோக்கும் போதும், இக்காலத் தமிழகக் கல்வெட்டுகளில் 'குதிரைச் செட்டி என்ற பதம் காணப்படுவதை அவதானிக்கும் போதும் இச்செட்டிகள் குதிரை வாணிபத்திலும் ஈடுபட்டிருந்தனர் எனக் கொள்ளலாம்.

தலைநகரில் மட்டுமின்றி ஈழத்தின் பிற பாகங்களிலும் இவர்கள் செயற்பட்டதை பதுளையிற் கிடைத்த கி.பி.10 ஆம் நூற்றாண்டுக்குரிய சிங்கள மொழியிலமைந்த தூண் கல்வெட்டொன்று எடுத்தியம்புகின்றது. 127 இக்கல்வெட்டு கொபித்திகம என்ற இடத்தில் செயற்பட்ட தமிழகத்து இன்னொரு வணிக கணமாகிய 'வணிக்கிராம' பற்றிக் குறிப்பிடுகின்றது. இதனைப் பதிப்பித்த பரணவித்தான தென்னிந்தியச் சாசனங்களில் விளிக்கப்படும் 'மணிக்கிராமம்' என்ற வர்த்தக கணமே இவ்வாறு 'வணிக்கிராம' என இக்கல்வெட்டில் அமைக்கப்பட்டுள்ளதென எடுத்துக்காட்டியுள்ளார். இக்கல்வெட்டானது கொபித்திகம என்ற இடத்தில் விவசாயிகளும் வணிகர்களும் வாழ்ந்ததை எடுத்தியம்பும் அதே நேரத்தில் இவர்களின் உரிமைகள் கடமைகள் பற்றியும் அரச உத்தியோகத்தர் எவ்வாறு இவர்களை அணுக வேண்டுமென்றும், இவ்வணிக கணத்தினரின் சிறப்புரிமைகள் பற்றியும் குறிப்பிடுவது அவதானிக்கத்தக்கது. இத்தகைய சிறப்புரிமைகள் தமிழக வணிகர் ஈழத்தில் சிறப்பான அந்தஸ்தைப் பெற்றிருந்ததை விளக்குகின்றன எனலாம்.

ஈழத்து வர்த்தகத்தில் தமிழகத்தவரின் பங்கு காத்திரமாக அமைந்ததை மேற்கூறிய சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. ஈழத்து வாசனைத் திரவியங்கள், யானைகள், பொன், முத்து, சங்கு ஆகியன இவர்களை இங்கு ஈர்த்தன. இத்தகைய வாணிப நடவடிக்கையின் களங்களாக வடக்கே அமைந்திருந்த ஜம்புகோள பட்டின, பல்லதித்த (வல்லிபுரம்)ஆகியனவும், வடமேற்கே அமைந்திருந்த பிரபல்யமிக்க துறைமுகமாகிய மாந்தையும் விளங்கியது. கிழக்கே 'பல்லவ வங்க' திரிகோணமலைத்துறைமுகம்(கோகர்ண) ஆகியனவும் இதிற் பங்கு கொண்டிருந்தன. இத்துறை முகங்களிலும் தமிழர் செல்வாக்கு மிகுந்தே காணப்பட்டதை இவைகளின் பெயர்களே எடுத்துக் காட்டுகின்றன;

ஜம்புகோளஎன்பதில் இரு பகுதிகள்உள. இவைமுறையே ஜம்பு, கோவளம் ஆகும். ஜம்பு என்பது நாவல் மரத்தைக் குறிக்கும் சொல்லாகும். கோவளம் தமிழகத்திலுள்ள கோவளத்தையே நினைவுகூர்கின்றது. நாவல் மரங்கள் நிறைந்த பகுதியாகையால் இது இவ்வாறு வழங்கப்பட்டிருக்கலாம். அதுமட்டுமன்றி பாளி நூல்கள் இதனைச் தமிழ்ச் சொல்லாகிப் 'பட்டின' என

"ஈழசுதந்திரன்"

மாத இதழ் சந்தா விபரம்

ஓராண்டு சந்தா இந்தியாவில் ரூ. 30-00
வெளிநாடுகளில் அமெரிக்க டொலர் 10
அல்லது பிரிட்டிஷ் பவுண்ட் 6

ஈழசுதந்திரனுக்கு வெளிநாடுகளில் சந்தா சேர்த்தனுப்ப முன்வருவோர் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி
ஈழசுதந்திரன்
14, சேட் காலனி முதல் தெரு,
மூன்றாம் மாடி
எழும்பூர், சென்னை-8.

www.padippakam.com



# ஈழத்தமிழர் வரலாறு...

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

தக்கது. பல்லதித்த என்பது வல்லிபுரத்தினைக் குறிக்கலாம் காரணம் 'தித்த' என்பது இறங்குதுறை எனப் பொருள்படும். இதனால் 'வல்லிபுரம்' தான் பல்லதித்த என இவ்வாறு அழைக்கப்பட்டிருக்கலாம். வல்லிபுரம் கூட தமிழகத்திலுள்ள செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள இடப் பெயரைக் குறித்து நிற்கின்றது. இவ்வாறே மாந்தை என்பதும் பெருந்தோட்டம் என்பதும்சங்க இலக்கியங்களில் தமிழகத் துறைமுகத்திற்கு வழங்கப்பட்ட பெயரென்பதை குறுந்தொகையிற் காணப்படும்.

'முனா அதியானையின்
குருகின் கானலம்
பெருந்தோட்ட மள்ளரார்ப்
பிசை வெரு உங்
குட்டுவன் மாந்தையன்ன'

என்ற அடிகள் உணர்த்துகின்றன. 128

இவ்வடிகள் மாந்தை, பெருந்தோட்டம்ஆகியனதமிழகத்திலிருந்து ஏற்பட்ட மக்கட் புலம்பெயர்வால் இவ்வாறுபெயரிடப்பட்டதை உணர்த்துகின்றன. பாளி மொழியிலுள்ள 'மாதோட்ட' என்ற வடிவம் பெருந்தோட்டம் என்ற தமிழ் வடிவத்தின் மொழி பெயர்ப்பாகும். இவ்வாறே 'மாதித்த' என்ற பாளி மொழியிலுள்ள இத்துறைமுகத்தின் வடிவம் கூட பெரிய இறங்குதுறை எனப் பொருள்படும். இதனால் பெருந்துறை பெருந்தோட்டம் என்பதே இவ்வாறு மாதித்த எனப் பெயர் பெற்றிருக்கலாம். இத்துறைமுகத்திற்குப் பெருந்துறை என்ற பெயரும் காணப்பட்டிருக்கலாம். இவ்வடிவம் தமிழகத்திலுள்ள திருப்பெருந்துறையை நினைவு கூர்கின்றது. தட்டாலம்சம் கி.பி. நான்காம் நூற்றாண்டு நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிடுகையில் இதனை 'லங்காபட்டின'என்ற தமிழ் வடிவத்தில் அழைக்கப்படுவதும், இத்துறைமுகத்தில் தமிழர் பெற்ற செல்வாக்கினை எடுத்துக் காட்டுகின்றது. இதன் சிறப்பினை மாதோட்டத்து ஈசுவரனைப் பாடிய நாயன்மார்களான சம்பந்தரும், சுந்தரரும் தமது பாடல்களில் குறிப்பிடத் தவறவில்லை. 130 சுந்தரர் இதனை 'வங்கம் மலிகின்ற மாதோட்டம்' என்றார். சர்வதேச வர்த்தக நிலையமாக எழுச்சி பெற்ற இத்துறைமுகத்தின் சிறப்பினை இங்கு கிடைத்த தொல்லியற் சான்றுகளும் உறுதி செய்கின்றன. இவ்வாறே திரிகோணமலைத் துறைமுகத்தின் பழைய வடிவமாகிய 'கோகர்ண' என்பது தமிழகத்தின் மேற்குக் கரைத் துறைமுகமாகிய 'கோகர்ணவை' நினைவு கூருகிறது. 'பவலவங்க' என்பதின் மூலவடிவமும் அத்தகையதே. இத்தகைய சான்றுகள் பண்டைய ஈழத்தின் வாணிபத்தில் தமிழகத்தோர் ஏற்படுத்திய தாக்கத்தின் எச்சங்களே எனலாம்.

(தொடரும்)

## மருத்துவக் கதிர்

# மூளைக் காய்ச்சலும் மூடநம்பிக்கைகளும்

1. மூளைக்காய்ச்சல் (Meningitis) என்பது என்ன?

மூளைக்கும் மண்டையோட்டுக்கும் இடையில் உள்ள சவ்வுகளிலும், மூளையிலும் கிருமிகள் தொற்றினால் அழற்சி ஏற்படும். இந்த தொற்றழற்சியினால் ஏற்படும் நோயறிகுறிகளை மூளைக்காய்ச்சல் எனப் பொதுவாகக் கூறுவார்கள்.

2. மூளைக் காய்ச்சல் உண்டாக்கும் கிருமிகள் எவை? வைரஸ்கள்.

சிலவகை பாக்டீரியாக்களும் இதற்குக் காரணமாகின்றன.

3. இந்த வைரஸ் நோய் கிருமிகள் எப்படி மனிதருக்கு தொற்றுகின்றன?

வைரஸ் கிருமிகள் பன்றி,குரங்கு போன்ற விலங்குகளை நுளம்பு கடிக்கும்போது நுளம்பின் உடலுக்குள் செல்லுகின்றன. இந்த நுளம்புகள் மனிதரைக் கடிக்கும்போது அவர்களிற்கு தொற்றுகின்றது.

4. பாக்டீரியாக் கிருமிகள் எப்படித் தொற்றுகின்றன?

பாக்டீரியாக்கிருமிகள் கூடுதலாக மனிதரில்இருந்து மனிதருக்குத் தொற்றுகின்றன. இந்தக் கிருமிகளை பரப்பும் நோயாளிகளில் சிலருக்கு நோய் காணப்படலாம். சிலருக்கு நோய் வெளிப்படையாக தெரியாமலும் இருக்கலாம்.

இந்த நோய்க் கிருமிகள் தொற்றியவர்கள் இருமும் போதும் தும்மும்போதும் வெளிப்படும்நுண்துளிகள் (Doplets) மூலமாக மற்றவர்களிற்கு தொற்றுகின்றன.

இந்த நோய்க்கிருமிகள், மூக்கு தொண்டைப் பகுதியில் தொற்றி இலேசான நோயைஏற்படுத்தும். பின்பு இக்கிருமிகள் நுண்ணிய இரத்தக் குழாய்கள் வழியாக மூளைக்குப் போய்ச் சேர்ந்து விடுகின்றன. அங்கு மூளைச் சவ்வழற்சியை ஏற்படுத்துகின்றன.

5. மூளைக் காய்ச்சல் ஏற்பட்டால் என்ன அறிகுறிகள் காணப்படும்?

வழக்கமாக நோயறிகுறிகள் திடீரெனத் தோன்றும். தொடக்கத்தில் தலைவலி, காய்ச்சல் சோர்வு போன்றவை இருக்கும். வெளிச்சத்திற்கு கூசுதல், வாந்தி, வலிப்பு போன்ற அறிகுறிகள் காணப்படும். இவ்வறிகுறிகள் குழந்தைகளில் அதிகமாகக் காணப்படும். கழுத்து விறைத்துக் காணப்படுவதுடன், தலை பின்னுக்கு இழுக்கப்பட்டும் இருக்கலாம். சிலருக்கு வெறித்த பார்வை இருக்கும். பிறற்றல், நினைவிழப்பு போன்றவையும் சில சமயங்களில் இருக்கலாம். 1 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் உச்சியிலுள்ள மென் சவ்வுப் பகுதி வீக்கமடைந்திருக்கும்.

6. மூளைக்காய்ச்சல், எந்த வயதில் ஏற்படும்?

இந்த நோய்கள் எல்லா வயதினருக்கும் வரலாம், ஆயினும் சிறுவர்களிற்கு நோய் எதிர்ப்புத் தன்மை குறைவாக இருப்பதால் இளம்வயதினரே கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றனர்.

நியுமோனியா, நடுக்காது தொற்று, சைனோசைட்டிஸ் போன்ற நோய்கள் ஏற்பட்டபின் அல்லது இந்நோய்கள் இருக்கும்போதே கிருமிகள் இரத்தக் குழாய்களினூடாக மூளையை அடைந்து மூளைக் காய்ச்சல் ஏற்படலாம்.

7. மூளைக்காய்ச்சல் தொடர்பாக ஏன் தவறான நம்பிக்கைகள் ஏற்படுகின்றன?

மூளைக்காய்ச்சல் அறிகுறிகளை வெறித்த பார்வை, வலிப்பு, பிதற்றல் போன்றவை திடீரென ஏற்படுவதால், இவையாவும் கெட்ட ஆவியின் செயலாக சிலர் கருதுகின்றனர் இந்த அறிகுறிகள் இலேசான காய்ச்சலின் பின் ஏற்பட்டாலும் இதை ஒரு நோயாக நினைக்காமல்,ஆவியின் செயலாகக் கருதுகின்றனர்.

8. இத்தவறான நம்பிக்கைகளால் ஏதும் பாதிப்பு உண்டா?

நிச்சயமாகப் பாதிப்புண்டு. கெட்ட ஆவியின் செயலாக கருதி நோயாளியை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லாது மந்திரிக்க அல்லது பேய் விரட்டுவதற்கு கொண்டு செல்கின்றனர். இவ்வாறு கொண்டு செல்லும் நாட்களில் மூளைக் காய்ச்சல் தீவிரம் அடைந்து விடுகிறது. இறுதியில் இந்த முயற்சிகள் பலனளிக்காமல் போய் நோயாளியை நினைவிழந்த நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு போவதால் சிகிச்சை பலனளிக்காமல் போய் விடுகிறது.

மூகாமில் மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சிறுமியை முதலில் மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு நினைவிழந்த நிலையிலிருந்த நோயாளிக்குத் தொடர்ந்து மருந்து[illegible]மாகி நினைவு திரும்பியதும், சிறுமியின் குடும்பத்தினர் மருத்துவரின் அறிவுரையையும் கேட்காமல் வீட்டிற்கு அழைத்து வந்து மந்திரவாதியைக் கொண்டு மந்திரித்தனர். சிறுமியின் உடல் நிலை தேறியது. ஆனால் மூளையில் ஏற்பட்ட பாதிப்பால், கைத்தசைகள் சூம்பிப்போய் செயலிழந்து விட்டன. இந்த நோயாளியை மருத்துவமனையில் தொடர்ச்சியாக வைத்து பராமரித்திருந்தால் கையில் ஏற்பட்ட பாதிப்பை கண்டறிந்து உடனே சரி செய்திருக்கலாம். இதுபோன்ற தவறான நம்பிக்கைகளால், மரணத்தை தழுவியவர்களும் உண்டு.

7. மூளைக்காய்ச்சல் நோய்க்கு சிகிச்சை முறையை சுருக்கமாக கூறவும்?

நோயாளியை மருத்துவ மனையில் அனுமதித்து நோயாளியை பரிசோதிப்பதுடன், மூளைய முண்ணாண் திரவத்தை முதுகுப்புறமாகக் குத்தியெடுத்தும் நோய்க் காரணத்தை அறிவதற்காக பரிசோதனை செய்வார்கள். மூளைச் சவ்வுகளை ஊடுருவிச் செல்லும் சக்தியுள்ள மருந்துகளை தொடர்ச்சியாக ஊசி மூலம் செலுத்துவார்கள். நோய் குணமாகும்போது பின் விளைவுகள் ஏற்படாமலும் பராமரிப்பார்கள்.

8. மூளைக்காய்ச்சல் நோய் ஏற்படாமல் தடுக்கக் கூடிய வழிகள் எவை?

நுளம்பினால் பரவும் வைரஸ்களை தவிர்க்க நுளம்பு வளரும் சுற்றாடலான நீர்தேங்கும் குழிகள், பாத்திரங்கள், டப்பாக்கள் போன்றவற்றை ஒழிக்க வேண்டும். நோய்க் கிருமிகளை பரப்பும், விலங்குகளை சுற்றாடலில் இருந்து அகற்றுதல் நல்லது.

பாக்டீரியாவால் ஏற்படும் மூளைக்காய்ச்சல் கூடுதலாக மூக்குத் தொண்டைப் பகுதியில் ஏற்படும் தொற்றுகளாகவே ஆரம்பிக்கின்றன. சில வேளை நடுக்காதுத் தொற்றிலிருந்தும் தலைக்காயங்களில் இருந்தும் உண்டாகலாம். எனவே இந்த நோய்களின் அறிகுறிகள் ஏற்பட்டால் முக்கியமாக குழந்தைகளிற்கு உடனடியாக முறையான மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும்.

காச நோயும் சில சந்தர்ப்பங்களில் மூளைக்காய்ச்சலாக மாறலாம். எனவே ஒழுங்கான காச நோய் சிகிச்சையும் போதிய ஊட்டச்சத்துணவும் முக்கியமானவை.

9. மூளைக் காய்ச்சலால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் எவை?

மூளைக்காய்ச்சல் ஏற்பட்டு குணமாகிய பின்பும் சில குறைபாடுகள் ஏற்படலாம். அவையாவன: குழந்தைகளின் மூளை வளர்ச்சிக் குறைபாடு, வலிப்பு, கை, கால் செயலிழத்தல் போன்றவையாகும். இத்தப் பாதிப்புகள் இலேசானதாகவோ அல்லது கடுமையானவையாகவோ இருக்கலாம். நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து உடனடியாக முறையான சிகிச்சை வழங்கினால் பாதிப்புகளை தவிர்த்துக் கொள்ளலாம்.

நுளம்பு-கொசு

# காதில் கேட்கும் ஒலிகள்! மனநோயில் ஒரு வகை!

சிலருக்கு காதில் சில குரல்கள் எப்போதும் கேட்டுக் கொண்டே இருக்கும். அந்தக் குரல் 'இதைச் செய்-அதைச் செய்' என்று கட்டளை பிறப்பித்துக் கொண்டே இருக்கும். அசிங்கமான வார்த்தைகளால் பேசும். உனக்கும் உன் குடும்பத்துக்கும் கெட்டது ஏதோ நடக்கப்போகிறது என்று காதில் சொல்லிக்கொண்டே இருக்கும். வேலையில் கவனம் செலுத்த முடியாமல் திணறுவார்கள். தெருவில் நடந்தால் எல்லோரும் தன்னையே பார்ப்பதாகவும், தனக்கு எதிராக அனைவரும் சதி செய்வதாகவும் கூறுவார்கள்.

இப்படி காதில் குரல் கேட்பது என்பது மருந்துகளால் தீர்க்க முடியாத ஒரு தீவிரமான பிரச்னை. இந்த நோய்க்கென்று தரப்படும் மருந்துகள் ஒரு மயக்க உணர்வை ஏற்படுத்துவதால் தற்காலிகமாக இந்த மாயக் குரல்களின் பிரட்டல்கள் நிற்கும். மருந்தின் வேகம் தீர்ந்தவுடன் மீண்டும் குரல்கள் கேட்க தொடங்கி விடும். இப்படி குரல்கள் கேட்பதற்கு அடிப்படை காரணம் என்ன என்பதை உள் மனதை ஆராய்ந்தே கண்டறிய வேண்டும். காரணத்தைக் கண்டறிந்து மனத்தை அரிக்கும் கசப்பான நினைவுகளை சீர்படுத்தும்போது குரல்கள் கேட்பது நிரந்தரமாகவே நின்று விடும்.

—டாக்டர் வேதமாலிகா.

# ஈ.ஏ.ம.க. மாணவர் அமைப்பு கலந்துரையாடல்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

அறிந்திருக்க வேண்டும் என்ற நோக்குடன் தெரிவிக்கப் பட்டது.

தேநீர் இடைவேளைக்குப் பிறகு, எஸ்.ஏ. அம்பிகாபதி "ஆங்கிலப் பாடத்திட்டம்" பற்றி மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். இன்னும் சிறிது காலத்திற்குப் பிறகு தான் முகாம் மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடங்களை அஞ்சல் வழி மூலமும் நேரடியாகவும் சென்று தரப்போவதாக அறிவித்தார். இதனால் மாணவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

பொது அறிவு மற்றும் பொது விஞ்ஞானம் பற்றிய வினாடி வினா நிகழ்ச்சியை நான்கு குழுக்களாக முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற பெயரில் பிரித்து குழுநிலைப் போட்டி நடாத்தப்பட்டது இது ந. இரவீந்திரராஜாவால் மேற்கொள்ளப்பட்டது.

மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு முதலில் மாணவர்களைக் குழுக்களாக பிரித்து அதே பெயரிலேயே விளையாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கின. இவ்விளையாட்டுப்போட்டிகளில் முதலில் பெண்களுக்கான விளையாட்டுகள் நடைபெற்றன.

1. பலூன் உடைத்தல்.
2. பன் சாப்பிடல்.
3. மா ஊதி காசு எடுத்தல்.
4. எலுமிச்சம் கரண்டி ஓட்டம்.
5. தடை ஓட்டம்.

போன்றவை நடைபெற்றன. இவ்வாறான விளையாட்டுக்கள் பெண்கள் தமக்கு ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளையும் எவ்வாறு சமாளித்து வெற்றி காண்கின்றார்கள் என்பதை சித்தரிக்கும் வகையில் அமைந்தன. மேற்கண்ட நிகழ்ச்சிகளை தனித்தனியே செய்யாமல் ஒவ்வொரு குழுக்களிலும் இரண்டு பேர் வீதம் தேர்வு செய்யப்பட்டு அவர்களை ஒரே மூச்சில் பலூன் உடைத்தவுடன், பன் சாப்பிடல், பன் சாப்பிட்டவுடனேயே ஓடி வந்து மாவை ஊதி காசை எடுத்தல், அதை செய்தவுடன் எலுமிச்சம் காயினை கரண்டியில் ஏந்தி ஓடுதல், பின்பு தொடர்ந்து தடை ஓட்டம் எனப் பெண்கள் பரபரப்புடன், பலசுமைகளுக்கு மத்தியில் அதை செய்ய வேண்டுமே, அதை செய்ததும் மற்றொன்றைச்செய்ய வேண்டுமே என்ற எண்ணத்தில் செயற்பட்டவிதம் பார்க்கின்ற அனைவரையும் பரவசத்துக்குள்ளாக்கி விட்டது. இதில் முல்லை அணியினர் முதலாமிடத்தையும், மருதம் அணியினர் இரண்டாமிடத்தையும், குறிஞ்சி அணியினர் மூன்றாமிடத்தையும், நெய்தல் அணியினர் நான்காமிடத்தையும் பெற்றனர்.

தொடர்ந்து மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் 'கிளித் தட்டு' விளையாட்டு இடம் பெற்றது. இதிலும் அனைத்து மாணவர்களும் மிகவும் உற்சாகமாக ஓர் குறிக்கோளை கொண்டு அதனை நிறைவேற்ற தேவையான திட்டங்கள் வகுத்து வெற்றி கண்டது போலிருந்தது அவர்கள் விளையாடிய விதம் மொத்தத்தில் அனைத்து மாணவர்களும் மிகவும் சிறப்பாக விளையாடி மகிழ்ச்சியடைந்தார்கள். இதிலே முதலாமிடத்தை மருதம் அணியினரே பெற்றனர். இரண்டாமிடத்தை முல்லை அணியினரும், மூன்றாமிடத்தினை குறிஞ்சி அணியினரும்; நான்காமிடத்தை நெய்தல் அணியினரும் பெற்றனர்.

விளையாட்டு நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றதும் அடுத்ததாக, தமிழ் இலக்கிய அறிமுக போட்டி என்னும் தலைப்பில், சங்ககால இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்ட கதாபாத்திரங்கள் சம்பந்தமான நிகழ்ச்சிகள் பற்றி கேள்விகள் கேட்கப்பட்டன.

மூன்றாவது (16-8-98) நாள் நிகழ்ச்சி இரண்டு நிமிட மௌன அஞ்சலியுடன் ஆரம்பமானது.

இதில் மாணவர்களுக்கு பங்கேற்றல் முறையில் ஆக்கம் என்ற தலைப்பில் நாடகம், கவிதைகள் போன்றவைகள் இடம்பெற்றன. கவிதைகளின் தலைப்புகள் முறையேகுறிஞ்சி அணியினருக்கு 'புரட்சி', முல்லை அணியினருக்கு 'நட்பு' போன்ற தலைப்பினைக் கொடுத்து பதினைந்து நிமிடங்களுக்குள் கவிதைகளைத் தயார் செய்ய வேண்டுமென்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. மாணவர்கள் மிகவும் ஆர்வமாக தத்தமது கவிதைகளை புனையத் தொடங்கினர். இதில் திடீரென தலைப்புக்களைக் கொடுத்துப் பதினைந்து நிமிடங்களுக்குள் கவிதை எழுத வேண்டும் என்று குறிப்பிட்டதால், முதலில் மாணவர்கள் சற்று குழப்படைந்து காணப்பட்டாலும், போட்டி என்று வந்துவிட்டால் எப்படியாவது செய்தாக வேண்டுமே என்ற நோக்கில் ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்த இரு வரிகளை எழுதி அவற்றை அனைவரும் இணைத்து ஒன்றிணைத்து ஓர் நல்ல கவிதையாக மாற்றி விட்டார்கள்.

இதன் மூலம் தனிமையில் ஒரு மனிதர் ஒருவர் ஒரு செயலைச் செய்வதற்கும், குழுநிலையில் இணைந்து செய்வதற்கும் இடையேயுள்ள வித்தியாசங்களை அவர்கள் இலகுவாக புரிந்துக் கொண்டதை நாம் காணக்கூடியதாக இருந்தது. இதில் 'கல்வி'-ஐ மையமாகக் கொண்ட கவிதை முதலாமிடத்தையும், 'புரட்சி'-யினை மையமாகக் கொண்ட அணி இரண்டாமிடத்தையும், 'குடும்பம்'-இதனை தலைப்பாகக் கொண்ட அணி மூன்றாவது இடத்தையும், 'நட்பு' இதை மையமாகக் கொண்ட அணியினர் நான்காமிடத்தினையும் பெற்றனர்.

அடுத்தபடியாக, நாடகங்கள் அனைத்துக் குழுக்களாலும் முறையே 'பெண்மனம்' 'தியாக உள்ளம்', 'யார் குற்றவாளி', 'அன்பைத் தேடி' என்னும் தலைப்புகளில் நான்கு வகையான நாடகங்கள் நடாத்தப்பட்டன அனைத்து மாணவர்களும் தங்களது பாத்திரங்களை மிக அழகாக அனுபவித்து நடித்த விதம் அனைவரையும் மெய்சிலிர்க்கச்செய்து விட்டது. இதில் ஒவ்வொருவருக்குள்ளும் புதையுண்டுக் கிடந்த திறமைகளை நாம் வெளிக்கொண்டு வர இந்த கலை நிகழ்ச்சிகள் ஓர் வழிகாட்டியாக அமைந்தமை அனைவருமே உணரும் வகையில் அமைந்தன.

தொடர்ந்து, கலந்துரையாடலின் இறுதிக் கட்டமாக லம்பட் 'எமது வரலாற்றுப் பின்னணி' பற்றி பின்வருமாறு கூறினார்.

1. இலங்கையின் நீளம் மற்றும் அகலம் மற்றும் சுற்றளவு என்ன?

2. மலையகத் தமிழர்கள் என்பவர்கள் யார்?

3. அவர்கள் எங்கிருந்து வந்தனர்?

4. இலங்கையில் முதன் முதலில் தமிழர்களாகிய எமக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் என்ன?

6. அதன் பாதிப்புக்கள் எப்படி இருந்தன?

7. எத்தனை நாடுகளில் எமது தமிழர்கள் அகதிகளாக இருக்கின்றார்கள்?

8. இப்போது தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை முகாம்களில் எத்தனை ஆயிரம் தமிழர்கள் அகதிகளாக இருக்கின்றார்கள்?

9. தற்போது இலங்கையில் இருக்கின்ற தமிழர்களின் நிலை என்ன?

10 நாம் கண்டிப்பாகக் கற்க வேண்டும்; கல்வியின் பயன் யாது? என விளக்கினார்.

மாணவர் சார்பாக செல்வன் எஸ். கிங்ஸ்லி நன்றியுரை வழங்கினார். இறுதியாக பரிசுகள் வழங்கப்பட்டன. முதல் பரிசு (ஆப்பிள் பெட்டி) மருதம் அணியினருக்கு வழங்கப்பட்டது. இரண்டாவது பரிசு (பிஸ்கட்) முல்லை அணியினருக்கும், மூன்றாவது பரிசு (சாக்லேட்) குறிஞ்சி அணியினருக்கும், நான்காவது பரிசு (பிஸ்கெட் பாக்கெட்) நெய்தல் அணியினருக்கும் வழங்கப் பட்டது.

அனைவரும் தாம் பெற்ற பரிசுகளை பகிர்ந்து சாப்பிட்டு இக்கலந்துரையாடல் நிகழ்ச்சியினை இனிதாக நிறைவு செய்தனர்.

தொகுப்பு :
செல்வி க. சிறிலட்சுமிப்பிரியா

# பிள்ளைகளை ஊனமையாக்குவதில் பொல்லாத போரின் பங்கு!

தற்கால யுத்தங்களில் போர் வீரர்களை விடப் பொது மக்களே கூடுதலாகக் கொல்லப்படுகிறார்கள் அல்லது ஊனம் அடைகிறார்கள். அதிலும் பெருமளவு பாதிக்கப்படுபவர்கள் பெண்களும் குழந்தைகளுமே ஆவார்கள். முதலாவது உலக யுத்தத்தின் போது கொல்லப்பட்டவர்கள் மற்றும் காயமடைந்தவர்களில், ஐந்து சதவீதமானோர் மட்டுமே பொது மக்களாயிருந்தனர். தற்போது யுத்தங்களில் கொல்லப்படுபவர்களைப் போல் மூன்று மடங்கு பேர் காயமடைகின்றனர்.

யுத்தத்தால்ஏற்படுத்தப்படும் வறுமையும் நெருக்கடிகளும் கடும் ஊனங்களிற்கே (Disabilities) வழி வகுக்கின்றன. உலகில் மூன்றில் ஒரு பங்கு குழந்தைகளுக்கு போதிய உணவோ, அடிப்படைச் சுகாதார வசதியோ கிடைப்பதில்லை. அத்துடன் பல லட்சம் பேர் வீடுகளையும் இழக்கின்றனர். இந்த நிலையிலும், பல நாடுகளின் தலைவர்கள் போர் ஆயுதங்களுக்காக மேலும் மேலும் அதிகப் பணத்தை செலவிடுகின்றனர்.

வலிமையுள்ளவர்கள், மற்றவர்களை அரசியல், சமூக, பொருளாதார ரீதியாக கட்டுப்படுத்த, யுத்தம், பயங்கரவாதம் சித்திரவதை போன்றவற்றைக் கருவிகளாகப் பயன்படுத்துகின்றார்கள்.

வறிய நாடுகளில் உள்ள மக்கள் சர்வாதிகாரிகளை விரட்டியடித்து விட்டு புதிய மக்கள் அரசை அமைத்து வளங்களை நியாயமாகபங்கிடு செய்யமுயலும்போது, வல்லமை படைத்த செல்வந்த நாடுகள் இந்தப் புதிய அரசுகளை அழிக்க முற்படுகின்றன. இதற்காக நீண்டகால யுத்தங்களை ஏற்படுத்தவும், பாடசாலைகள், சுகாதார நிலையங்கள் உற்பத்திச் சாலைகள் ஆகியவற்றினை தகர்க்கவும், பயங்கரவாதிகளுக்கு இந்த செல்வந்த நாடுகள் பண உதவி செய்கின்றன. இதன் விளைவாக மேலும் வறுமை, நோய்கள். ஊனங்கள் அதிகரிக்கின்றன.

இந்த நிலையை மாற்ற, புதிய உண்மையான, மனிதாபிமான உலக அமைப்பிற்காக போராடும், பிற்படுத்தப்பட்ட மக்கள், அநீதிக்குள்ளானோர் ஆகியோருடன் உலகிலுள்ள ஊனமுற்ற மக்களும் இணைந்து போராட வேண்டும்.

பயங்கரவாதம் எப்போதும் இன்னொரு பயங்கரவாதத்தால்தான் எதிர்க்கப்படுகின்றது. உ-ம்- அமெரிக்கநாடு ஏப்ரல்-1986இல் லிபியாவை தாக்கியபோது ஊனமுற்ற சிறுவர்களின் பாடசாலையில் குண்டுகள் விழுந்தன. இது போன்ற நடவடிக்கைகள் உண்மையில் பயங்கர வாதத்தை நிறுத்துவதில்லை. மாறாக அப்பாவி மக்களை ஊனமாக்கவும், கொல்லவுமே உதவுகின்றன.

'கண்ணுக்கு கண் என்ற கொள்கையால் உலகமே குருடாகி விடும்.'

மகாத்மாகாந்தி

நன்றி :— டாக்டர் டேவிட் வேர்னர்
'The Village disabled child'

முதலமைச்சரின் பேத்தி

# அஞ்சுகச் செல்வி திருமணம்

தமிழக முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் பேத்தியும், மு.க. அழகிரி அவர்களின் இரண்டாவது மகளுமான செல்வி அஞ்சுகச் செல்விக்கும், மதுரை டாக்டர் ஆர். இரத்தினவேல் அவர்களின் மகன் செல்வன் விவேக்கிற்கும் 9-9-98 அன்று சென்னை அண்ணாசாலையில் உள்ள காமராசர் அரங்கத்தில் தமிழகக் கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமையில் திருமணம் சிறப்புற நடைபெற்றது.

முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலிமாறன் வரவேற்றார். த.மா.கா. காங்கிரஸ், பா.ஜ.க.; கம்யூனிஸ்ட், ஜனதா தளம், தேசியலீக், முஸ்லிம்லீக், எம்.ஜி.ஆர். அதிமுக, எம்.ஜி.ஆர். கழகம், தமிழ்த் தேசியக் கட்சி உட்பட அனைத்துக் கட்சித் தலைவர்களும், பல்துறைப் பிரமுகர்களும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள். தி.மு.க. தலைவர் கலைஞர் நன்றி கூறினார்.

இவ்விழாவில் ஈழஏதிலியர் மறுவாழ்வுக் கழக நிறுவனர் சா செ. சந்திரகாசன், முனைவர் அரு. கோபாலன், அகி...

www.padippakam.com



# அந்தநிலை வந்து சேருமா?

**முல்லை சதீஸ்**
இ.அ. முகாம், மண்டபம்

பறவைகளின் ''கீச் கீச்'' என்ற ஒலியும் சேவல்களின் ''கொக்கரக்கோ'' என்ற கூவலுடனும் குளிர்ந்த தென்றலுடனும் அன்றைய காலைப் பொழுது புலரத் தொடங்கியது. கிழக்குவானம் சிவந்து சூரியனின் வருகைக்கு கட்டியம் கூறியது.

மண்டபம்முகாமிலிருக்கும் சகாயமாதா கோவிலில்இருந்து ''இசைஒன்றுஇசைக்கின்றேன் இறைவா'' என்ற இனிய கிறிஸ்தவ கீதம் காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது முகாமின் முன்பகுதியில் இருக்கும் சித்தி விநாயகர் ஆலயத்தில் காலைப்பூசைக்கான மணி ''டாண் டாண்'' என்று ஒலித்துக் கொண்டிருந்தது.

நித்திரை விட்டெழுந்த குலசேகரம் அவசர அவசரமாக முகத்தைக் கழுவிவிட்டுபழைய சாரத்தையும் பழைய சேட்டையும் மடித்துப் பைக்குள் வைத்துக் கொண்டு வாசலுக்கு வந்தவர் திரும்பி வீட்டிற்குள் பார்த்தார். மனைவியும் மூன்று பிள்ளைகளும் நன்றாகத்தூங்கி கொண்டிருந்தார்கள். ஏதோ தொண்டையை வந்து அடைப்பது போல் இருந்தது. கண்கள் பனிக்கத் தொடங்கின. கண்ணைத் துடைத்துக் கொண்டு வேகமாக நடந்து முகாம் வாசலைக் கடந்து பஸ் ஸ்டாப்பிற்கு வந்தார்.

அங்கு இவருடன்வேலைக்குச் செல்வதற்காக இன்னும் பலர் நின்றார்கள். பஸ் வந்து விடவும் எல்லோரும் ஏறி உட்கார்ந்துகொண்டார்கள் நடத்துனர் இவருக்கு அருகில் வரவும் ''உச்சப்புளி ஒன்று'' என்று சொல்லி இரண்டு ரூபாய் எழுபத்தைந்து சதம் கொடுத்தார் நடத்துனர் ரிக்கற்றை கொடுக்கவும் வேண்டி சட்டைப் பைக்குள் வைத்து விட்டு கண்ணாடிக்கு வெளியே பார்வையை செலுத்தினார்.

பனை மரங்களும், புளிய மரங்களும், தென்னந் தோட்டங்களும் இவர் பார்வையில் இருந்து வேக வேகமாகப் பின் நோக்கி போய்க் கொண்டிருந்தன. பஸ் உரிய இடத்திற்கு வந்து விடவும் எல்லோரும் இறங்கி கடற்கரையை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள். கடற்கரையில் வலைப்பதற்கு சிறிது நேரம் ஆகுமென்றும் அதுவரை எல்லோரையும் உட்காரும் படியும் கூறப்பட்டதால் கொண்டுவந்த பையை பக்கத்தில் வைத்துக் கொண்டு கடற்கரை மணலில் அமர்ந்த குலசேகரம் கடலையே வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தார்.

அலைகள் வேக வேகமாக வந்து திரும்பவும் கடலுக்குள் சென்று கொண்டிருந்தன. இவரது நினைவுகளும் பின் நோக்கி சென்று கொண்டிருந்தன.

1985ம் ஆண்டு சித்திரை மாதம்.

வல்வெட்டித்துறை கடல் பரந்து விரிந்து கிடந்தது. அலைகள் மெதுவாக வந்து மீண்டும் கடலைத் தேடிச் சென்றுகொண்டிருந்தன கடல் அமைதியாய் கிடந்தது. கழுத்தில் பெரிய தங்கச் சங்கிலியும், கையில் பெரிய மோதிரமும், இடது கையில் சிற்றிசன் வாட்சும் கட்டியபடி கடற்கரையில் இருந்து வீட்டிற்கு வந்த குலசேகரம் ''புஷ்பா'' என்று குரல் கொடுத்தபடியே வந்தார் அடுக்களையில் வேலையாக இருந்த மனைவி ''என்னங் கோப்பா'' என்றுகேட்டபடியே முன் ஹாலுக்கு வந்தாள்.

அழகிய வட்ட முகம், சிவந்த நிறம், நெற்றியில் குங்குமப் பொட்டு, கழுத்தில் தாலிக் கொடி, அத்துடன் தங்கச் சங்கிலி, கை இரண்டிலும் காப்பு, விரலில் இதய வடிவிலானமோதிரம் அணிந்து மஞ்சள்நிற மெக்சியில்அழகாக காட்சி தந்தாள்.

''இண்டைக்கு எங்கட வள்ளத்தில் நூறு கிலோவுக்கு மேல பாரமீன் பட்டிருக்குது. கரையிலயே வைச்சுவிலையை தீர்த்து குடுத்திட்டன். இந்தாரும் இந்தக் காசைக் கொண்டு போய் வையும்,'' என்று கூறி மனைவியின் கையில் பணத்தைகொடுத்தார் அருகில் இருந்த ஈஸி செயரில் உட்கார்ந்து கொண்டு சாய்ந்து படுத்துக் கொண்டார்.

அடுக்களையில் இருந்து சில்வர் தம்பரில் டீயுடன் வந்த மனைவி ''இந்தாங்கோப்பா'' என்று டீயை நீட்டினாள். டீ நிரம்ப இருந்தது. ஆவி மேலே வந்து கொண்டிருந்தது. சாய்ந்திருந்தவர் நிமிர்ந்து டீயை வேண்டி உறிஞ்சிக் குடித்தபடி ''எங்க புள்ளையள்? பள்ளிக்கூடம் போட்டினமோ'' என்று கேட்கவும் ''ஓம் அப்பா போட்டினம்'' ''நீங்கள் டீயை குடியுங்கோ நான் அடுப்பிலே இடியப்பம் அவிச்சுக் கொண்டு இருந்தனான். அவிச்சு முடிய உங்களுக்கு இடியப்பம் கொண்டு வாறன்.'' என்று கூறியபடியே அடுக்களைக்குள் சென்று மறைந்தாள்.

அன்று இரவுகடற்கரைக்கு சென்றுவிட்டு வந்த கணவன் ஏதோ யோசனையில் இருக்கவும் ''என்னப்பா யோசிக்கிறீங்கள்'' என்று கேட்டபடியே புஷ்பா கணவனின் பக்கத்தில் அமர்ந்தாள். 'அதப்பா இன்னொரு புது வள்ளமும், யமகா இஞ்சினும் புதுசா வலையும் எடுத்தால் நல்லது எண்டு பார்க்கிறன். இப்ப யுத்தநிறுத்தம்தானே கடலுக்கும் போகக் கூடியதாய் இருக்குது. மீனும் நல்லாப் பிடிபடுது. அதுதான் என்ன செய்வமெண்டுயோசிக்கிறன்.'

''அம்பாடுங்கோவனப்பா பிறகேன்யோசிக்கிறீங்கள்?''

''காசு கொஞ்சம்தான் இருக்குது புஷ்பா அதுதான்! மிச்சத்துக்கு உம்முடைய கொடியையும், நகையளையும் என்றசங்கிலியையும் அடைவு வைச்சு எடுப்பம் எண்டு நினைக்கிறன். கொஞ்சநாளில அடைவு எடுத்திடலாம். என்னப்பா சொல்றீர்''

''உங்கடை சொல்லை நான் எண்டாலும் மீறின்னேனாப்பா. அடைவு வைச்சுட்டு எடுங்கோ. நான் அதுவரையும் மூத்தவளின்ர சங்கிலியப் போட்டிருக்கிறன்.''

என்று கூறியபடி எழுந்து கணவனுக்கு இரவு உணவு கொடுப்பதற்காக அடுக்களைக்குள் சென்றாள். நகைஅடைவு வைத்து வள்ளம், இஞ்சின், வலை எடுத்து தொழிலும் இரண்டு நாள் நடந்தது. ஆனால்அவர்களின் நினைப்பு பொய்யானது.

சித்திரை பத்தொன்பதாம் திகதி மீண்டும் போர் ஆரம்பமானது. மீண்டும் தமிழரின் கட்டுமரப் பெங்கும் சிங்களக் கடற்படையின் கடற்படைப் படகுகள்ரோந்து வரத்தொடங்கின. கடலுக்கு செல்லத்தடை விதிக்கப்பட்டது. ஏதோ கையில் இருந்ததை வைத்து குடும்பத்தை காப்பாற்றிக் கொண்டு வந்தார் குலசேகரம்.

அந்த வருடக் கடைசியில் யாழ்ப்பாணத்தை சிங்கள இராணுவம் கைப்பற்றியது, பின்பு அடுத்தவருடம் சித்திரை மாதம் தென்மராட்சியையும்; அந்த மாதக் கடைசியில் வடமராட்சியையும் கைப்பற்ற சிங்களப் படைகள் வந்தபோது மனைவி பிள்ளைகளுடன் கையில் அகப்பட்டதைஎடுத்து கொண்டு வன்னிக்குவந்த குலசேகரம், புதுக்குடியிருப்பில் தனக்குத் தெரிந்த ஒருவரின் காணிக்குள் கொட்டில் ஒன்று போட்டுக் கொண்டு வாழ்க்கையை தொடர்ந்தார்.

ஊரை இழந்து, சொந்த வீட்டை இழந்து தன்னை வாழ வைத்துக் கொண்டிருந்த மீன்பிடி உபகரணங்களை இழந்து எமது வாழ்க்கை இப்படியாகி விட்டதே என்று வேதனைப் பட்டபடி இருந்தவரை 'சாப்பிடவாங்கோப்பா' என்றமனைவியின் அழைப்பு யோசனையில் இருந்து விடுபட வைத்தது வெறுங் கழுத்துடன் வந்த மனைவியைப் பார்த்ததும் குலசேகரத்துக்கு அழுகையாக வந்தது. வந்த அழுகையை அடக்கிக் கொண்டு எழுந்து சென்று சாப்பிட உட்கார்ந்தார்.

இடம் பெயர்ந்தவர்களின் வருகை அதிகரிக்கவும் அடுத்தடுத்த மாதங்களில் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடும், நிலவத் தொடங்கியது. இங்கிருந்தால் பெரும் கஷ்டத்தை சந்திக்க வேண்டி வரும் என்று நினைத்த குலசேகரம் மனைவி பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு தமிழ் நாட்டிற்கு செல்வதென்று முடிவெடுத்தார் மீதமாக இருந்த மனைவியின் நகைகளையும், பிள்ளைகளின் நகைகளையும் விற்று வள்ளத்துக்கு கொடுத்து தமிழ்நாட்டிற்கு வந்து சேர்ந்தார் இங்கு வந்து மண்டபம் முகாமில் தங்கியிருக்கும் குலசேகரம் அன்றாடம் கூலி வேலைக்கு சென்றால் தான் வீட்டுச் செலவைப் பார்க்கலாம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டார்.

''வள்ளம் இறக்கியாச்சு எல்லோரும் எழும்புங்கோ'' என்ற குரல் கேட்கவும் நினைவுகள்தடைப்பட்டு சகசநிலைக்கு வந்த குலசேகரம் கண்ணில் வந்தகண்ணீரைத் துடைத்தபடி எழுந்து வலை இழுப்பதற்கு ஆயத்தமானார்.

''இந்தக் கஷ்டங்கள் மறைந்து மீண்டும் என்ர நாட்டுக்குப் போய் எங்கட கடல்ல தொழில் செய்யிற நாளஎன்டைக்குவரும்'' என்று நினைத்தபடியே தனது நாடிருக்கும் திசையை நோக்கினார். அந்தத் திசையில் வானம் இருண்டு கரிய முகில் கூட்டங்களாக காணப்பட்டன.

# குயிலே மீண்டும் வருவாயா?!

குயிலே குயிலே கருங்குயிலே!
கவிதை பாடும் மணிக்குயிலே!
விடியற்காலை வேளையிலே
முற்றத்துள்ள வேம்பினிலே
நின்றன் இனிய குரல் கேட்டே
நித்திரை விட்டு நான் எழுவேன்;

கொஞ்சும் குயிலே நின் கானம்
கொஞ்ச நாளாய் ஏன் காணோம்?!
எங்கு சென்றாய் பூங்குயிலே?!
இன்னிசை பாட வா குயிலே!

கிராமம் சலித்துப் போனதுவோ!
நகர்புற ஆவல் வந்ததுவோ!
நாடி அங்கே சென்றனையோ
நயமாய்ச் சொல்லு தேன்குயிலே!

வருவாய் மீண்டும் நீயென்று—தினம்
வாசல் வேம்பை நோக்குகின்றேன்
வாடிய நிலையில் ஏங்குகின்றேன்!
குயிலே மீண்டும் வருவாயா?!
உந்தன் குரலில் கவிதை தருவாயா?!
கனிவாய் உந்தன் குரல் கேட்க
காத்திருக்கின்றேன் ஆவலுடன்
ஒரு மனதாய் நீயும் வந்துவிடு!

**தே. சித்ரா**
இ.அ. முகாம், போகநல்லூர்.

### துடித்துவந்தமடல்

# வெளிக்கடை சிறைக் கொடுமை விஞ்சுகின்ற சிறைக் கொடுமை

ஆசிரியரே, தங்களின் ஆகஸ்டு மாத இதழில் மேற்கண்ட தலைப்பில் பெட்டிச் செய்தியாக வெளியிட்டிருந்ததைகண்ணுற்றேன். உண்மையில் சிங்களவர்கள் படுத்திய கொடுமைகளைவிட தமிழர்கள் தமிழர்களுக்கு இழைக்கும் கொடுமையே ஈழத்தில் அதிகமாகவுள்ளது.

ஒருவர் இன்னொருவருக்கு எவ்விதமான தவறுகளை இழைத்து இருந்தாலும் அதை மனம் விட்டுப் பேசி நிவர்த்தி செய்வதை விட்டு இப்படித் தமிழர்களுக்குள்ளே பாதகச் செயல்களை செய்வது மனித நேயத்திற்கு புறம்பானது. டக்ளஸ் தேவனந்தா தாக்கப் பட்டதை உழைப்போர் தோழமைக் கழகம் வன்மையாக கண்டிக்கிறது. சகோதர இயக்கங்களையும் இணைத்து ஈழ விடுதலை காண்பதே சிறப்பானது. அதைவிட்டு பாசிச முறையில் ஈழ விடுதலை பெறுவது பாலைவனத்தில் பயிர் செய்வதற் ஒப்பாகும். டக்ளஸ் தேவானந்தா விரைவில் பூரண நலம் பெற நாங்கள் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அன்புள்ள
P. தேவதாஸ்
செயலாளர்
உழைப்போர்தோழமைக்கழகம்
சென்னை-58.

www.padippakam.com



# இனப்பிரச்சினையை வட அயர்லாந்து தீர்வின்படி தீர்க்க முடியாதா என்பதை ஆராயவே இலங்கை வந்துள்ளேன்

### எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்து பேராசிரியர் பிரேஸர் பேச்சுவார்த்தை

இலங்கை வந்துள்ள வட அயர்லாந்து சமாதான உடன்படிக்கை கைகூடுவதற்கு பின்னணியிலிருந்து உழைத்தவரான அயர்லாந்து அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் தோமஸ்கிரானட் ரேஸர் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்து இழுபறிப்படும் இலங்கைஇனப் பிரச்சினை தீர்வு முயற்சிகள் தொடர்பாக பேசினார். அரசாங்கமும் எதிர்க்கட்சியினரும் ஒன்றுபட்டு தமிழர்களின் இந்த பிரச்சினைக்கு சுமுகமான முடிவு ஒன்றைக் காண்பதற்குள்ள தடைகள், முரண்பாடுகள் பற்றியும் அவர் எதிர்க்கட்சித்தலைவரிடம் கேட்டறிந்தார்.

## ரணிலின் விளக்கம்

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனை எதனையும் முன் வைக்காமல் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த முன்வரவேண்டும். அப்படியானதொரு பேச்சு இடம் பெற்றாலேயே பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடியதாயிருக்கும். புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் முன் வருமானால் அதற்கு தமது கட்சி குந்தமாக இருக்கமாட்டாது என்று இந்த சந்திப்பின்போது எதிர்க்கட்சித் தலைவர் இந்த அயர்லாந்து நிபுணருக்கு தமது கட்சியின் நிலைப்பாட்டை விளக்கியிருக்கிறார்.

''ஐ.தே.க. பதவிக்கு வந்தால், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசி இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும், கட்சியின் எதிர்காலத்திட்டமும் இதுவே'' என்று அவர் சுட்டிக் காட்டியதாகவும் தெரிய வருகிறது.

கொழும்பு கேம்பிரிட்ஜ் டெரஸில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் இல்லத்தில் இந்த சந்திப்பு நடந்தது. எதிர்க்கட்சித்தலைவருடன் ஐ தே க. பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்கவும் உடன் இருந்தார். பேச்சுவார்த்தை சுமார் 45 நிமிட நேரம் நடந்தது.

## அந்த முன்னுதாரணம்

சர்வதேச உலகம் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் அதிக அக்கறை காட்டி வருகிறது. பன்னெடுங்காலமாக இருந்த எமது வட அயர்லாந்துப் பிரச்சினைக்கு இப்பொழுது சுமுகமான தீர்வொன்று ஏற்பட்டுள்ளது. அந்த தீர்வின் அடிப்படையை முன் உதாரணமாக வைத்து இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட முடியாதா? என்பதை ஆராயவே நான். இங்கு. வந்துள்ளேன் என்று அயர்லாந்து நிபுணர் இந்த சந்திப்பின் போது எடுத்துக் கூறியதாக தெரிய வருகிறது.

இந்த அயர்லாந்து நிபுணர் விமானம் மூலம் யாழ்ப்பாணமும் சென்றார். யாழ்ப்பாண நிலைமைகளை நேரில் அறியவும் வட அயர்லாந்து சமாதான உடன்படிக்கைபற்றி அங்குள்ள புத்தி ஜீவிகள் அறிஞர்களுக்கு எடுத்துக் கூறவுமே இவர் யாழ்ப்பாணம் சென்றார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கூட்டத்திலும் இவர் பேச ஏற்பாடாகி இருந்தது.

#### இராணுவ வீரரிடமிருந்து

# மீட்கப்பட்ட நகை விபரம் யாழ். நீதிமன்றம் அறிவிப்பு

காலி மாவட்டத்தில் கொள்ளைச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட இராணுவ வீரர் ஒருவரிடமிருந்து மீட்கப்பட்ட நகைகள் பற்றிய விபரம் யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்த நகைகளுக்குரியவர் காலி நீதிமன்றத்தில் நகைகளை அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு பொது மக்களைக் கோரும் விளம்பரம் ஒன்று யாழ்ப்பாண நீதிமன்றத்தில் தொங்கவிடப்பட்டுள்ளது.

காலி, ரத்கம என்ற இடத்தைச் சேர்ந்த சுனில் சாந்த என்ற இராணுவ வீரரிடமிருந்தே இந்த நகைகள் மீட்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

காலி, நீதிமன்றத்தில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ள நகைகளின் விபரம் வருமாறு:

1½ பவுண் 2 காசு உட்பட 24 அங்குல நீளமுள்ள தங்கச் சங்கிலி. 'வி' டிசைன் உள்ள இரு தங்கக் காப்பு, மெஷின் கட் தங்கக்காப்பு இரண்டு, பம்பாய் டிசைன் தங்கக்காப்பு இரண்டு, குழந்தையின் காப்பு இரண்டு, உருவம் வரையப்பட்ட தங்க மோதிரம் ஒன்று, பெரல் டிஸைன் மோதிரம் ஒன்று, சிறு மோதிரம் ஒன்று, தாலி ஒன்று மணியுடன், பஞ்சாயுதம் ஒன்று, மயில் டிஸைன் தங்க மோதிரம் ஒன்று, கை மணிக்கூடு ஒன்று, எட்டரை அங்குல தங்க மாலை ஒன்று.

யாழ். நீதிமன்றப்பதிவாளருக்கு காலி நீதிமன்றப் பதிவாளரால் இவ்விபரம் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ் விளம்பரம் நீதிமன்றத்தில் தொங்கவிடப்பட்டுள்ளது.

இவ்விளம்பரத்தை பலர் வந்து பார்த்துச் செல்கின்றனர் ஆறு மாதங்களுக்குள் இந்தத் தங்க நகைகளை உரிமை கோராதபட்சத்தில் இவை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மலையகத் தமிழர்களின் பணம் மற்றும் உடைமைகள் ஆயுத முனையில் கொள்ளை

### பட்டப்பகலில் இயங்கும் கோஷ்டியைப் பிடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மலையகத்திலிருந்து கொழும்புக்கு செல்லும் தமிழ் மக்களிடம் இராணுவ வீரர்களின்அடையாள அட்டையை காட்டி அவர்களை அச்சுறுத்தி அவர்களது பணத்தையும் உடைமைகளையும் கொள்ளையிடும் கோஷ்டியொன்று தலைநகரில் இயங்கி வருவதாக நம்பகமாகத் தெரியவருகிறது.

அண்மையில் மாத்தளை கந்தேநுவரயைச் சேர்ந்த தமிழ் வர்த்தகர் ஒருவர் இக்கோஷ்டியிடம் அகப்பட்டு ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பணத்தையும் பொருள்களையும் இழந்துள்ளார்.

இவர் தனது வர்த்தக நிலையத்துக்கு உடுதுணிகள் வாங்க கடந்த பதினாறாம் திகதி கொழும்புக்குச்சென்றுள்ளார். பகல் 12.30 மணியளவில் கொழும்பு தனியார் பஸ் நிலையத்தில் நின்று கொண்டிருந்தபோது இனம் தெரியாத இருவர் இவரை நெருங்கி இராணுவ வீரர்களின் அடையாள அட்டையும் புகைப் படங்களையும் தஸ்தாவேஜுக் களையும் காட்டி தாங்கள் இராணுவத்தினர் என்று கூறியுள்ளனர். பின் ஊர், பெயர் போன்ற விபரங்களை கேட்டறிந்து கொண்ட பின் இவரது அடையாள அட்டையை வாங்கியுள்ளனர்.

''நீர் புலியாக இருக்கலாம் எமக்கு சந்தேகமாக உள்ளது. உம்மை விசாரிக்க வேண்டியுள்ளது அதோ பொலிஸ் ஜீப் நிற்கிறது நீர் பொலிஸ் நிலையம் வந்து வாக்குமூலம் கொடுத்துவிட்டு செல்லலாம் என்றுவாகன நெரிசல் மிக்க பகுதிக்கு அழைத்துச் சென்று ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தி வர்த்தகரிடமிருந்த ஐயாயிரம் ரூபா ரொக்கப்பணத்தையும்உடைமைகளை (துணிமணிகள்)யும் அபகரித்துச் சென்றுள்ளனர். அத்தோடு மிகமிக கீழ்த்தரமாக 'பரயா பரதெமழா' என்று பேசி அவ்விடத்தை விட்டு ஓடிவிடுமாறு இல்லையேல் கொலை செய்வதாகவும் கூறியுள்ளனர்.

இவர் உடனடியாக அவ்விடத்தைவிட்டு அகன்றுள்ளார். ஊருக்குத் திரும்பி வரக் கூட காசு இன்றி நண்பர் ஒருவரை அணுகி பயணச் செலவு பெற்றுக்கொண்டு வீடு திரும்பியுள்ளார்.

தமிழனாக பிறந்து விட்ட ஒரே காரணத்தினால்தான் தனக்கு இந்தத் தண்டனையா என இவர் தன்னைத்தானே நொந்து கொண்டார்.

கொழும்பு செல்லும் மலையகத்தவர்களுக்குப் போதிய பாதுகாப்புப் பெற்றுதர நடவடிக்கை எடுக்கப்படமாட்டாதா? என்றும் இவர் வேதனையுடன் கேள்வி எழுப்பினார்.

# தமிழ் மக்களை இம்சைப்படுத்துவது குறித்து நடவடிக்கை எடுக்கக் குழு நியமனம்

### புகார்களை 24 மணி நேரமும் பதிவு செய்ய ஏற்பாடு

பாதுகாப்புப் படையினர், பொலிஸார் ஆகியோர் சந்தேகத்தின் பேரில் தமிழ் மக்களை கைது செய்து மற்றும் விசாரணைக்காக தடுத்து வைக்கப்படும் சந்தர்ப்பங்களில் தமிழ் மக்களை இம்சைப் படுத்துவது தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி குழுவொன்றை நியமித்துள்ளார்.

இதன்மூலம் அவர்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு உடனடியாக தகுந்த நடவடிக்கைமேற்கொள்ள முடியும்.

## குழுவின் அதிகாரம்

இந்த திட்டத்தை அமுல் படுத்துவதெற்கென 24 மணி நேரமும புகார்கள் ஏற்றுக் கொள்ளப்படும். சம்பந்தப்பட்டவர்கள் 34-9/4 பிரத்தியேக தொலைபேசி இலக்கத்துடனும் 333716 இலக்க ஃபக்ஸ் செய்தி மூலமும் புகார் செய்யலாம் இதற்கான தனியான பிரிவு நீதி அரசியலமைப்பு விவகார தேசிய நல்லிணக்க அமைச்சில் இயங்கும். பொது மக்களிடம் இருந்து கிடைக்கப் பெறும் புகார்கள் அமைச்சர், எம்.பிக்கள் அடங்கிய குழுவிடம் கையளிக்கப்படும்.

பாதுகாப்புப் படைகள் பொலிஸ் திணைக்களத்திலும் இந்த குழு தலையிட்டு சட்ட ரீதியற்ற கைதுகள், இம்சைகள் தொடர்பாக கட்டளை பிறப்பிக்கவும் இந்த குழுவிற்கு அதிகாரம் வழங்கப்படும்.

கலாசார சமய விவகார அமைச்சர் லக்ஷ்மன் ஜயக்கொடி தலைமையிலான இக் குழுவில் வெளிவிவகாரஅமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், சமுர்த்தி, விளையாட்டுத் துறை அமைச்சர் எஸ் பி. திசாநாயக்க, கைத் தொழில் தொழில் நுட்பத்துறை அமைச்சர் பட்டி வீரக்கோன், எம்.பிக்களான ஆர். சம்பந்தன், டக்ளஸ் தேவானந்தா, எம்.எம். மஹ்ரூர் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாதுகாப்பு அமைச்சர் பாதுகாப்புப் படைகளுக்குப் பொறுப்பானவர் என்ற முறையில் ஜனாதிபதி பாதுகாப்பு படைகள், பொலிஸார், தமிழ் மக்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்யும் பொழுது சட்டத்திற்கு அமைய மனிதாபிமான முறையில் நடத்தப்பட வேண்டும் என உத்தரவு பிறப்பித்தார். இந்த உத்தரவிற்கு பின்பும் சில பொலிஸ் அதிகாரிகள் தமிழ் மக்களை கைது செய்யும்பொழுது இம்சைப்படுத்துகின்றனர் என ஜனாதிபதிக்கு புகார் செய்யப் பட்டுள்ளது. பெரும்பாலான பொலிஸ் அதிகாரிகள், இக்கட்டான நிலையிலும் சட்டத்திற்கு அமைய செயல்படுகின்றனர் என்பதை ஜனாதிபதி நன்கு அறிவார்.

## அரசியல் நோக்கம்

பொலிஸ் அதிகாரிக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்தி அறிவுறுத்திய பொழுதிலும் சில பொலிஸ் அதிகாரிகள் தமிழ் மக்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்யும் பொழுது தேவையற்ற இம்சைக்குட்படுத்தி வருவதாக பரவலான புகார்கள் கிடைத்து வருகின்றன.

அந்த அதிகாரிகளில் சிலர் அரசாங்கத்திற்கெதிரான கருத்துக்களை கூறி வருவதுடன் முக்கியமான பிரமுகர்களை தவறான முறையில் பேசியும் வருகின்றனர். அரசாங்கத்தின் மீது பொது மக்களுக்கு அதிருப்தியைஏற்படுத்த அரசியல் நோக்கம் கொண்டு அவர்கள் செயற்படுகின்றனர்.

மேற்படி குழுவினரின் பணிப்புரைக்கு ஆயுதப் படைகள் பொலிஸ் படை ஆகியவற்றின் தலைவர்கள் இணங்க வேண்டும் அத்தகைய உத்தரவுகள் மீறப்படுமானால் அது குறித்து விசாரணை செய்யப்பட்டு தகுந்தவாறு கையாளப் படும் எனவும் ஜனாதிபதி

www.padippakam.com



## வாசகர் நெஞ்சம்

அன்புள்ள ஆசிரியரே!

ஈழத்திலிருந்து அகதிகளாக வந்துள்ள நாங்கள், உங்கள் 'ஈழசுதந்திரன்' இதழில் வரும் அனைத்தையும் படிப்பதன் மூலம் ஈழத்தை விட்டு வெளியிலிருந்தாலும் ஈழ உணர்வுகளை விடாமல் வாழ்ந்து வருகின்றோம். அதிலும் எம்மைப் போன்ற இள நெஞ்சங்கள் விழிப்படைய 'ஈழசுதந்திரன்' மிகுந்த துணை புரிந்து வருகிறது.

செல்வி R. பூமதி, இ.அ. முகாம்,
சிவகிரிப்பட்டி, பழனி-624602.

ஐயா,

சென்னை வளசரவாக்கம் மற்றும் போரூர் பகுதியில் சுமார் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் வசித்து வருகிறார்கள். மேற் குறிப்பிட்ட மக்கள் தற்போதைய ஈழம் மற்றும் ஈழமக்களின் நிலை, இந்தியாவில் அகதி முகாம்களில் வாழும் மக்களின் நிலை, அவர்களுக்கு ஈழ ஏதிலியர் மறு வாழ்வுக்கழகம் ஆற்றிவரும் சேவை போன்ற விவரங்களை போதிய அளவு தெரிந்து கொள்ளாமலே இருந்து வருகிறார்கள். இதை மாற்ற ஈழசுதந்திரனை அத்தகையோர் வாசிக்கும்படி செய்திட வேண்டும்.

ஈழத் தமிழ்மக்கள் எங்கெங்கு வாழினும், எமது ஈழப் பிரச்சினைகளில் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துவது அவசியமாகும். அதற்கு 'ஈழ சுதந்திரன்' ஆவன செய்யும் என்று நம்புகிறேன்.

A.R. சாள்ஸ், சென்னை-87.

அன்புள்ள ஆசிரியருக்கு,

தங்களுடைய மே' 98 'ஈழசுதந்திரன்' இதழைத் தற்செயலாகக் கண்ணுற்றேன். அதில் ஈழத்தமிழரின் இன்றைய நிலையைப் படம் பிடித்துக் காட்டியிருக்கும் பாங்கினை பாராட்டுகிறேன்.

நானும் என் குடும்பத்தினரும் ஈழத்து இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு, 1984ல் புலம்பெயர்ந்தோம். ஆகையால் தமிழ ஈழத்தில் சிங்களவரின் இனவெறிச் செயல்களை அறிந்து கொள்ள மிகுந்த ஆவலுடையவர்களாக உள்ளோம். அதை நிறைவேற்றும் ஈழசுதந்திரனை வாழ்த்தி வரவேற்கிறோம்.

எஸ். முத்துக்குமார், புதுக்கோட்டை.

பத்திரிகையில் என் கவிதை வரும் என்று நான் நினைக்கவே இல்லை. 'ஈழசுதந்திரனில்' என் கவிதையைக் கண்டு அளவு கடந்த சந்தோஷமடைந்தேன். நான் ஒரு கவிதைப் பிரியை. புதியவர்களுக்கு ஆதரவு கொடுக்கும் ஈழசுதந்திரனுக்கு மனமார்ந்த நன்றி

எஸ். கவிதா, இ.அ. முகாம், கீழ்ப்புதுப்பட்டு.

"வன்முறைதான் பிரச்சினை என்றால் மலையகத் தமிழர்களுக்கு எதிராகவும் ஏன் ஒடுக்குமுறை?" என்ற முன் பக்க அறிக்கை சிறீலங்கா அரசின் முகத்திரையைக் கிழிப்பதாகும். அதே வேளை அவ்வறிக்கையை விடுத்திருக்கும் ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகம், சிறீலங்கா அரசின் இப்பாசிசப் போக்கிற்கு எதிராக சர்வதேசப் பிரச்சார இயக்கத்தை மேற்கொள்ள வேண்டும். உலக நாடுகளுக்கு இலங்கையில் நடக்கும் உண்மையான நிலவரங்களை உடனுக்கு உடன் கொடுத்து, தமிழர் கோரிக்கைக்கு உலகு தழுவிய ஆதரவைக் கட்டியெழுப்ப முன்வரவேண்டும்.

சி.எச். ராகவேந்திரா, விழுப்புரம்.

'பிரின்சஸ்காஷ்' என்ற வெளிநாட்டு இந்தியருக்குச் சொந்தமான கப்பலை சிறீலங்கா அரசு தாக்கி மூழ்கடித்ததானது, அதன் இந்தியப் பகையுணர்வுக்கு எடுத்துக்காட்டாகும்" என்பதை விளக்கி ஈழசுதந்திரனில் வந்திருந்த ஆசிரியவுரை நூற்றுக்கு நூறு சரியானது.

தே. வைத்தியலிங்கம், தஞ்சை-6.

"இருண்ட ஜூலை! இன்னமும் விடியவில்லை!" என்ற இரத்தினராசசிங்கத்தின் கட்டுரை பிரமாதம். "அகதியாக ஒதுங்க நினைத்த மண்ணில் சடலமாக ஒதுங்க நேரிடுவது கொடுமை" என்ற இறுதி வரி இந்தியாவின் மனச்சாட்சியையும் உலுக்குவதாகும்.

அ. இராமலிங்கம், ஈரோடு-3.

கவிதைச் சரத்தில் இடம்பெற்ற "தண்ணீரிலா? கண்ணீரிலா?" என்ற சு. சிவாவின் கவிதை உள்ளபடியே எங்களைக் கண்ணீர் விட்டு அழவைத்து விட்டது. அதைப் போலவே 'வேற்றுமை என்னும் விஷம்' என்ற வி. ஜெகன் கவிதையும் உள்ளத்தைத் தொட்டது. 'சமுதாய அடிப்படையிலான மறுவாழ்வு' என்ற அறிவியல் பகுதிக் கட்டுரை நன்றாக இருந்தது.

ஏ. தமயந்தி, சென்னை- 3.

# திருவண்ணாமலை மாவட்ட கல்லூரி மாணவர் பேரவை ஒருங்கிணைப்புக் கூட்டம்

திருவண்ணாமலை மாவட்டம் தென்பள்ளிப்பட்டு இலங்கை அகதிகள் முகாம் கல்லூரி மாணவர்கள் பேரவை ஒருங்கிணைப்புக் கூட்டம் 20-[illegible]-98 அன்று நடைபெற்றது.

மாவட்ட இணைப்பாளர் செபஞானசீலன், மாவட்டத் தொண்டர் கிருஷ்ணபிள்ளை மற்றும் கல்லூரி மாணவர்கள் பங்கு கொண்டு சிறப்பித்தனர். இம்முகாமைச் சேர்ந்த நிர்வாகக்குழு, மாதர்சங்கம், கோயில் நிர்வாகசபை உறுப்பினர்கள், விளையாட்டுக்கழகம், மாணவர்மன்ற உறுப்பினர்களும் பங்கு கொண்டு ஒத்துழைப்பு நல்கினர்.

திருவண்ணாமலை ஈழக் கல்லூரி மாணவர் பேரவையின் தலைவர் இரா. பத்மநாபன் வரவேற்புரை நல்கி, இக்கூட்டத்தை திருவண்ணாமலை மாவட்ட இணைத்தொண்டர் மோகன் அவர்களை தலைமையேற்று நடத்துமாறு வேண்டிக் கொண்டார்.

முகாமின் தலைவர் கோ. இராசதுரை உரையாற்றிய போது இக்கல்லூரி மாணவர்-பேரவைக்கூட்டம் எமது முகாமில் நடைபெறுவதையொட்டி நான் அளவற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். எமது உழைப்பும்; எங்கள் ஆதரவும் என்றும் உங்களுக்கு உண்டு என்றார்.

இதனைத் தொடர்ந்து 1998-1999ம் ஆண்டு கல்லூரி மாணவர்களையும், பன்னிரெண்டாம் வகுப்பு ஏனைய மாணவர்களையும் பேரவையில் இணைக்கும் வைபவம் இடம் பெற்றது. ஒவ்வொரு மாணவரும் இணைவில் உறுதி மொழியெடுத்துக் கொண்டனர்.

### உறுதிமொழி

அகதியாக நான் வாழ்கின்ற போதிலும் கல்லூரி சென்று பட்டம்பெற்று நாம், நமது குடும்பம் என வாழாமல், எல்லோரும் நம் ஈழ மக்கள்; எம் மாணவர்கள் என்ற எண்ணத்தோடு, தேசபக்தி, நாட்டு உணர்வு, தன்னலம் அற்ற சேவை ஆகிய கொள்கையுடன் இப்பேரவையில் இன்று முதல் இணைந்து திறம்படச் சேவையாற்றுவேன் என உறுதி மொழி கூறினார்.

சென்னை மண்டல இணைப்பாளர் செபஞான சீலன் உரையாற்றும்போது ஆரம்பத்திலே இப்பேரவையை அமைக்கின்றபோது 12 கல்லூரிமாணவர்களைக்கொண்ட ஒரு அமைப்பாக இருந்தது. ஆனால் தற்போது மும்மடங்காகி உயர்ந்துள்ளது. இவ்வாண்டு 40-மாணவர்களைக் கொண்ட ஒரு மாபெரும் அமைப்பாக செயல்படுகின்றது என்பதில் மிக மகிழ்ச்சியாகவுள்ளது. சிறு துளி பெருவெள்ளம் என்பதற்கு அமைய வளர்ச்சி அடைந்திருக்கின்றது. ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் கல்விக்காகபல திட்டங்களைச் செயல்படுத்தி மாணவர்களை முன்னேற்ற வேண்டும் என்னும் நோக்கில் நடைமுறைப் படுத்தி வருகின்றது. இம் மாவட்டத்திலே மாபெரும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகின்றது. நிச்சயமாக நீங்கள் அனைவரும் கல்வி கற்பது மட்டுமல்லாது, முகாமில் இருக்கும் ஏனைய மாணவர்களையும் ஊக்கப்படுத்த வேண்டும் அப்போது தான் நாம் முழு வளர்ச்சி காண முடியும். நாளை மலர இருக்கின்ற தமிழ் ஈழத்தை கட்டிக் காக்கின்ற பொறுப்பு உங்கஇ கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது அதை நீங்கள் சரியாக பாதுகாக்க வேண்டுமானால் கல்வி என்னும் படியிலே முன்னேறி நாளை கட்டப்படும் ஈழத்தில் நாமும் ஓர் செங்கற்களாக இருக்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

திருவண்ணாமலை மாவட்ட தொண்டர் கிருஷ்ணபிள்ளை பேசுகின்ற போது குறிப்பிட்ட இந்த சிறிய காலப் பகுதியில் இம் மாணவர் பேரவை கணக்கிட முடியாத அளவிற்கு வளர்ச்சி எய்தியிருப்பதை எண்ணி நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். எமது ஈழ ஏதிலியர் மறுவாழ்வு கழகம் கல்வி உதவியை செய்து வருகின்றது. இதை மாபெரும் வாய்ப்பாகப் பயன்படுத்தி நாளைய ஈழத்தை உருவாக்குகின்ற சிற்பிகளாக நீங்கள் திகழ வேண்டும் உங்களுக்கு உறுதுணையாக என்றென்றும் துணை இருப்போம் என்றார்.

மதிய உணவு இடைவேளையின் பின்னர் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு இந்தகல்வி ஆண்டின்பணிகள் பற்றியும், செயல் திட்டங்கள் பற்றியும், ஆலோசனைகளும், திட்டங்களும் அதற்கான தீர்வுகளும் எடுக்கப்பட்டன.

### குழு தீர்வுகளின் 98-99 கல்வியாண்டிற்கான பேரவையின் திட்டங்கள்

1. நடமாடும் போதனா மையத்தை மேலும் சிறப்புடன் செயல்படுத்தல்.

2. முகாம்களில் குழுக்களிடையே விழிப்புணர்ச்சி மற்றும் ஒருங்கிணைப்பும் கழக சேவைகள் பற்றிய விளக்கமும் வழங்குதல்.

3. 10ம் 12ம் வகுப்பு மாணவர்களை முழுத்தேர்ச்சி பெற வைத்தல்.

4. முகாம்களில் போதனை மையம் நடாத்திடல்.

5. முதியோர் கல்வி ஏற்படுத்தல்.

5. முகாம்களில் பாலர் பள்ளி நடைபெற ஊக்குவித்தல்.

7. சுற்றுப்புறச் சூழல் பாதுகாத்தல், மரங்கள் நடுதல் சிரமதானம் மேற்கொள்ளல்.

8. முகாம்களில் கலைஞர்களை உருவாக்கிடுதல் மற்றும் ஊக்குவித்தல்.

9. கல்வி கற்க சுயமாக பொருளாதாரமீட்டசுயதொழில் திட்டம் மேற்கொள்ளல்.

10. கல்விக்கான நிதி சேகரிப்பு.

இந்துடன் பேரவையில் கீழ்க்காணும் விதிமுறைகளும் வகுக்கப்பட்டன.

### விதிமுறைகள்

1. ஒவ்வொரு முகாம் மக்களுடனும், மாணவர்களுடனும் பணிவுடனும், பண்புடனும் நடந்து கொள்ள வேண்டும்.

2. மாணவர் பேரவையில் இருக்கும் மாணவர்கள் சகோதர மனப்பாங்கைக் கடைப் பிடிக்க வேண்டும்.

3 செய்கின்ற சேவையை தொண்டுள்ளம் கொண்டு ஒற்றுமை உணர்வுடன் செயலாற்ற வேண்டும்.

4. தொண்டர்கள் மற்றும் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் முகாமிற்கு வருகை தரும் போது அவர்களுக்கு ஒத்துழைப்புக் கொடுத்துச் செயலாற்ற வேண்டும்.

5. எக்காரணம் கொண்டும் மாற்றார்கள்தவறாகப்பேசுகின்ற அளவிற்கு ஒழுக்கங்களைக் கைவிடாமல் நடந்து கொள்வது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

கலாநிதி சிற்றம்பலத்தாரின் கி.பி. 1000 வரைக்கான ஈழத்தமிழர் வரலாறு, ஈழத்தமிழர் வரலாற்றில் உள்ள இருட்டுகளில் எல்லாம் வெளிச்சம் பாய்ச்சுவதாக உள்ளது. சிங்கள பௌத்த வரலாற்றாசிரியர்களின் புரட்டுக்களை முறியடிப்பதாகவும் உள்ளது.

சி.வி. கிருஷ்ணபிள்ளை, கோவை-1.

சித்திரா தேவசகாயத்தின் 'பெண்ணின் கடமை' சிறுகதை கொள்கையுள்ள ஒரு ஈழத்தமிழ்ப் பெண்ணின் படப்பிடிப்புப் போல இருந்தது. 163ம் குறட்பா பற்றி அருகோவின் விளக்கம் அருமை. 'குறளும் கிறளும்' என்ற தலைப்பில் உவமைக் கவிஞர் சுரதா தந்திருந்த தகவல் சிந்தனைக்கு விருந்து. சுப்புராய முதலியாரின் அந்தக் 'கிறள்' நூல் இப்போது கிடைக்குமா?

நா. மணிமொழி, சென்னை-14.

தந்தை செல்வா கொழும்பில் வீடு வாங்காத காரணத்தைச் சபாரத்தினம் எழுதிவரும் வரலாற்றுத் தொடரில் படித்து வியந்தேன். அவருடைய ஈழத்தாயமண் பற்றை உணர்ந்து கண்ணீர் உகுத்தேன்.

எஸ். மரியதாஸ், வேலூர்-1.

www.padippakam.com



# தந்தை செல்வா



க. சபாரத்தினம்

## சட்டத் தொழிலில் நேர்மை

### அங்கம்-8

தந்தை செல்வா எதிலும் நேர்மையைக் கடைபிடிப்பவர்.

தந்தை செல்வாவின் நேர்மையை மெச்சி டாக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வா 1974ம் ஆண்டில் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை என் நினைவுக்கு வருகிறது. அப்பொழுது நான் 'தினகரனில்' வேலை செய்து கொண்டிருந்தேன். பாராளுமன்ற நடவடிக்கையை 'கவர்' செய்வதற்காக பாராளுமன்றத்துக்குப் போவதுண்டு.

காங்கேசன் துறைத் தொகுதிக்கான இடைத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்தை வற்புறுத்தும் வகையில் கொல்வின் பேசினார்.

1972அரசியல்சட்டத்தை ஆட்சேபித்து அதே ஆண்டு அக்டோபர் 3ம் திகதி தந்தை செல்வா தனது எம். பி. பதவியை இராஜினாமாச் செய்தார். காங்கேசன்துறைத் தொகுதியில் உப தேர்தலை நடத்தி தமிழ் மக்கள் அரசியல் சட்டத்தை ஆதரிக்கிறார்களா அல்லது எதிர்க்கிறார்களா என்று அறிந்து கொள்ளுமாறு அரசுக்குச் சவால் விட்டார் தந்தை.

ஆனால், அரசு தேர்தலைத் தள்ளிப் போட்டுக் கொண்டு போனது தேர்தலை நடத்துமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஆற்றிய உரைகளுக்குப் பதிலளிக்கும்போது கொல்வின் தந்தையின்நேர்மை பற்றியும் குறிப்பிட்டார்.

கொல்வின் சொன்னார் திரு.செல்வநாயகம் நேர்மைக் பெயர் பெற்றவர். தனதுகட்சிக்காரருக்காக நீதிமன்றத்தில் தோன்ற முடியாது போனால் தான் பெற்றுக்கொண்ட முற்பணத்தைத் திருப்பிக்கொடுத்து விடுவார். அப்படிச் செய்யும் வழக்கறிஞர்கள்மிகச்சொற்பம்.

1924ல்அப்புக்கர்த்தாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட செல்வா அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த பிரான்சிஸ் டி சொய்சாவின் 'சேம்பர்சில்' சேர்ந்து தொழில் பழகினார்.

சிவில் துறையில் தொழில் செய்ய முடிவு செய்தமையால் கொழும்பு விண்ணப்ப நீதிமன்றத்தில் தோற்ற ஆரம்பித்தார்.

அந்தக்காலத்தில் கொழும்பில் நாட்டுக் கோட்டைச் செட்டியார் சமூகத்தினர் பணம் வட்டிக்குச் கொடுக்கும் தொழிலைச் செய்து வந்தனர். கடன் வாங்கியவர்கள் பணத்தைத் திருப்பிக் கொடுக்கத் தவறின் வழக்குத் தொடரவேண்டிவரும் அத்தகைய கொடுக்கல் வாங்கல் வழக்குகளில் தன் திறமையைச் செல்வா வளர்த்துக் கொண்டார்.

சிவில் துறையில் அந்தக் காலத்தில் சி. நாகலிங்கம், என். நடராஜா, வி.எல்.சென். சீ சுவான் ஆகியோர்பிரபல்யம் பெற்று விளங்கினர். இவர்கள் காணி வழக்குகளில்தான்அதிக கவனம் செலுத்தினர்.

கொடுக்கல்வாங்கல் சம்பந்தப்பட்ட விடயங்களில்தனக்கு அதிகம் போட்டியில்லை என்பதை உணர்ந்து கொண்ட செல்வா அத்துறையில் தனது திறமையை வளர்த்தார். அவர் பெற்றிருந்த கணித அறிவு அதற்கு உதவியது.

செட்டிமார்கொண்டுவந்து கொடுக்கும் கணக்குப் புத்தகக் கட்டுகளைப் பிரித்துப்படித்து அவற்றில் ஒழுங்குகளைக் கண்டு கொள்ளும் திறமை அவருக்கு இருந்தது.

''இரவிரவாக கண்விழித்திருந்து கணக்குகளைப் பார்த்துக் கொண்டிருப்பார்'' என்று அவரின் மனைவி ஒருமுறை எனக்குக் கூறியுள்ளார்.

விண்ணப்பநீதிமன்றத்தில் போதிய பயிற்சியும் அனுபவம் பெற்றதும் மாவட்ட நீதிமன்றத்துக்குப்போய் தொழில் நடத்தத் துவங்கினார்.

விண்ணப்பநீதிமன்றத்தில் 5 ஆண்டுகள் பயின்ற பின்பே மாவட்ட நீதிமன்றத்துக்குப் போனதாக அவரின் கீழ் பணிபுரிந்தவர்கள் கூறினார்கள்.

1930ம் ஆண்டுகளில் செல்வநாயகத்தின் புகழ் பரவ ஆரம்பித்தது.

அத்தசாப்தத்தின் பிற்பகுதியில் அப்பீல் கோட்டில் தோன்றி வாதாடத் தொடங்கினார்.

1947ல் மகாராணியின் வழக்கறிஞர் (கியூ.ஸி)ஆக்கப்பட்டார்.

செல்வநாயகம் சிறந்த பேச்சாளரல்ல.

சொற் சிலம்பம் விளையாடுபவரல்ல.

சாட்சிகளை வெருட்டி மூர்ச்சிக்கச் செய்பவருமல்ல.

அப்படிப்பட்டவர் சட்டத் துறையில் உயர்ந்தது எப்படி?

எனது நண்பர் சி. எஸ். தர்மராஜா 1978ம் ஆண்டில் இந்த விடங்களை ஆராய்ந்தார்.

### பகுத்தாயும் திறமை

தந்தையின் காலத்தில் புகழ்பெற்றுவிளங்கிய வழக்கறிஞர்கள், அவருக்கு மரியாதை கொடுத்த நீதிபதிகள், நீதியரசர்கள், நீதிமன்றத்தில் பல்வேறு துறைகளிலும் பணிபுரிந்தவழக்கறிஞரல்லாதோர் ஆகியோரிடம் விசாரித்தார்.

கிடைத்த விடைகள்:

பிரச்சினைகளை கூர்மையாக, ஆழ்ந்து பகுத்தாய்வு செய்தல்.

சட்டக் கருத்துக்களைச் சரிவரப் புரிந்து கொள்ளல்.

கடின உழைப்பு.

அர்ப்பண உணர்வு

சட்டப் பத்திரங்களைத் தயாரிக்கும் திறன்.

நேர்மை.

பிரபலவழக்கறிஞர் ஒருவர் சொன்னது இது:

''சட்டத் தொழிலில் அவர் வெற்றி பெற்றமைக்குக் காரணம் அவரின் கடின உழைப்பு மிக உயர்வான நேர்மை. கொள்கைகளைக் கடினமாகக் கடைப்பிடித்தல். அவரிலும் எவ்வளவோ திறமை வாய்ந்தவர்களுக்கு எதிராகத் தோன்றி அவர் வெற்றிபெற்றதில் ஆச்சரியம் எதுவும் இல்லை''

'எவ்வளவோ திறமை வாய்ந்தவர்கள்'என்று அந்தப் பிரபல வழக்கறிஞர் குறிப்பிட்டது வாதத்திறமையை மட்டுமே.

செல்வநாயகம் தனது வழக்குப் பத்திரங்களை மிகயும் சுருக்கமாகவும் கச்சிதமாகவும் தயாரிக்கும் பழக்கமுடையவர்.

தனது கட்சிக்காரரின் நிலைப்பாட்டை சுருக்கமாக எடுத்துக்கூறி, சம்பந்தப்பட்ட சட்டங்களின் விளக்கத்தை எடுத்துரைத்து, அவ்விளக்கத்தை ஆதரிக்கும் வழக்குத் தீர்ப்புகளைத் தொகுத்தளிப்பார்.

''நீதிமன்றத்திடம் நாம் நீதியைத்தான் கேட்கிறோம். நீதிமன்றம் நீதியைச் செய்ய உதவுவதுவதுதான் எமது தொழில். அதைத்தான் நாம் செய்ய வேண்டும்'' என்று செல்வநாயகம் அடிக்கடிச் சொல்லுவார்.

செல்வநாயகத்தின் ஆழமான சட்ட அறிவையும், வழிகாட்டல் திறனையும் நீதவான்கள்மதித்தனர். அவரின்வாதங்களை மிகவும் கவனமாகக் கேட்டனர். அவரின் தொகுப்புரையை ஒரு சொல் தவறாமல் எழுதிக் கொண்ட சந்தர்ப்பங்களும் உண்டு.

ஒரு சம்பவம்.

செல்வநாயகம் சிரேஷ்ட வழக்கறிஞராக அமர்த்தப்பட்டிருந்தார்.

அவரின் ஜூனியர் வழக்கறிஞரின் சமர்ப்பணத்தைத் தயாரித்துக் கோட்டில் தாக்கல் செய்திருந்தார்.

அவ்வழக்கு பிரதம நீதியரசர் சர். சிட்னி ஏபிரகாம்ஸ் முன் விசாரணைக்கு வந்தது.

சமர்ப்பணத்தை வாசித்து விட்டு கோட்டுக்கு வந்த சர். சிட்னி செல்வநாயகத்தைப் பார்த்துக் கூறினார். இச்சமர்ப்பணத்தை நீங்கள் தயாரிக்கவில்லை என்பது நிச்சயமாகத் தெரிகிறது. அது உங்களுடைய ஜூனியரின் வேலையாகஇருக்க வேண்டும்.

செல்வநாயகம் எழுந்தார் அச்சமர்ப்பணத்துக்கு நான் முழுப் பொறுப்பையும் எடுக்கிறேன் என்று சொன்னார்.

அந்தப் பதிலால் செல்வநாயகம் தனது ஜூனியரைக் கைவிடவில்லை; உண்மையை மறைத்து கோட்டுக்குப் பொய் சொல்லவும் இல்லை.

செல்வநாயகம் எப்பொழுதும் தனது கட்சிக்காரர்களுக்கு மதிப்பளிப்பவர். அவர்கள் தவறானவிவரங்களைக்கொடுக்கும் போது கொதிக்கவும் மாட்டார்! ஆறுதலாக பொறுமையாக கேள்விகளைக் கேட்டு உண்மையை வரவழைப்பார்.

### எனக்கும் கொஞ்சம்

அவரிடம் சென்ற கட்சிக்காரர்களிடமிருந்து அவரின் ஜூனியர் வழக்கு விவரங்களை பெற்றுக் கொண்டிருந்தபோது நடந்தசம்பவம் இது. ஜூனியர் எதையோ கேட்க கட்சிக்காரர் வேறெதையோ சொல்லிக் கொண்டிருந்தார். பொறுமை இழந்த ஜூனியர் ''உங்களுக்கென்ன?'' செவிடா என்று கத்தி விட்டார்.

அதைக் கேட்டு மிரண்ட கட்சிக்காரரிடம் செல்வநாயகம் பேசினார். தன்காதைச்சுட்டிக் காட்டி, ''எனக்கும் கொஞ்சம் காது கேட்பது குறைவு அதனால் உங்களுக்கும் குறைவா என்று கேட்கிறார். எங்களைப் போல் முதுமை வந்தால் தான் பொறுமை வரும்'' என்று சொல்லிச் சமாளித்தார்.

தந்தை செல்வாவின் ஜூனியர்களாக இருந்தவர்கள் பலர் பின்புபெரிய புள்ளிகளாகி விட்டனர். பிரதம நீதியரசர் பதவிகளை வகித்த நெவில் சமரக்கோன் எஸ்.சர்வானந்தா பிரபல வழக்கறிஞர்களாக விளங்கிய வி. நவரத்தினராசா, சி. ரெங்கநாதன், அரசில் செல்வாக்கு மிகுந்த எஸ்மண்ட் விக்கிரமசிங்க (யு. என். பி. தலைவர் ரணில் விக்கிரசிங்கவின் தந்தை) ஆகியோர் அவர்களில் சிலர்.

தன்னிடம் ஆலோசனை பெறவரும் வழக்கறிஞர்களுக்கு அவர்கள் மிகவும் இளையவர்களாக இருப்பினும் உரிய மரியாதை கொடுக்க செல்வநாயகம் தவறுவதில்லை. ஒருநாள் அவரின் சேம்பருக்கு வந்த வழக்கறிஞர், வழக்கம் போல சப்-பாத்தை படியில் சுழற்றி வைத்துவிட்டு உள்ளே போனார். பலத்தமழை பெய்து முற்றத்தில் வெள்ளம். அந்த வழக்கறிஞர் ஆலோசனை முடிந்ததும் ஓடிப்போய்காரில் ஏறிக்கொண்டார். சப்பாத்தை எடுக்க அவர் மறந்துவிட்டதை அவதானித்த செல்வநாயகம் ஓடிப்போய் அதை எடுத்துக் கொண்டுபோய் காரில்கொடுத்தார்.

செல்வநாயகத்தின் சட்ட அறிவுக்கும்வாழ்க்கையைஅறு

(16ம் பக்கம் பார்க்க)

---

# முகத்தார் ஜேசுரத்தினம் இளையமகன் திருமணம்

## சந்திரகாசன் முன்னிலையில் சென்னையில் நடைபெற்றது

ஈழத்தின் பிரபல கவிஞரும் நாடகாசிரியரும், நடிகரும், வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளரும், முழுக்க முழுக்க இலங்கையிலேயே உருவான முதல் தமிழ்ப்படத்தின் கதாநாயக நட்சத்திரமுமான 'முகத்தார்' ஜேசுரத்தினம் அவர்களின் இளை மகனும், தற்போது பிரான்ஸ் நாட்டில் வசித்து வருபவருமான செல்வன் பாட்ரிக் செல்வராஜ் மணாளருக்கும், ஈழத்து மாதகலைச்சேர்ந்த திரு. அண்டனி சைமன் அவர்களின் மகள் செல்வி ஆன் மஞ்சுளா மணவாட்டிக்கும் 14-9-98 அன்று காலை 10 மணியளவில் தமிழீழத் தந்தை செல்வாவின் மைந்தரும், ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழகத் தலைவருமான சட்டத்தரணி சா.செ. சந்திரகாசன் அவர்கள் முன்னிலையில் சென்னை அண்ணா நகரில் பதிவுத் திருமணம் நடைபெற்றது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த முனைவர் அரு. கோபாலன் மணமகன் சார்பிலும், திரு. ஆறுமுகம் மணமகள் சார்பிலும் சான்றொப்பம் இட்டனர்.

பின்னர் ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகப் பணிமனையில் நடந்த திருமண வரவேற்பில் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகச் செயலாளர் செல்வி சூரியகுமாரி, சாம்கோயில் பிள்ளை, க. இரத்தினராஜசிங்கம், திரு. ஆறுமுகம் தம்பதிகள், திரு ஜேசுரத்தினம் தம்பதிகள் திரு. இர. மாணிக்கவாசகர் தம்பதிகள், கலைஞானவேல் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

திரு ஜேசுரத்தினம் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் செயல்திட்ட இயக்குநர்களில் ஒருவராக இருந்து, தமிழ்நாட்டில் தங்கி அகதிகள் மறுவாழ்வுச் சேவையாற்றியவர் என்பதால் அவர் குடும்ப விழாவில் அனைவருமே ஆர்வமுடன் பங்கு பற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

வாழ்க மணமக்கள்!

படிப்பகம்

www.padippakam.com



# கிரிமினல் குற்றம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு, இலங்கை கத்தோலிக்க ஆயர் மகா சங்கத்தின் வேண்டுகோள் அறிக்கையில் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.

1. அண்மைக் காலமாக சிறீலங்காவில் நடைபெறும் இனப்போரானது, ஒரு இனத்தைத் திட்டமிட்டே அழிக்கும் கொடுமையாக வடிவம் பெற்றுள்ளது. நவீன யுத்திகளைக் கையாண்டு அப்பாவிப் பொது மக்களை அழிப்பதாகவுள்ளது. மக்களைக் கொல்லும் இம் மாபாதகப் போரில் உணவும் ஒரு புதிய யுத்தக் கருவியாக மாற்றப்பட்டுள்ளது.

## சொல்லொணாத் துயரம்

2. இச் சண்டையில் வடக்கின் வன்னிப் பிரதேசத்தில் 6,50,000 மக்கள் உரிய மருந்துகளோ, இன்றியமையாத உணவோ இன்றி கடந்த 2 ஆண்டுகளாக மடிந்து வருகின்றனர். ஐ.நா. அகதி ஆணையத்தினூடாக வழங்கப்பட்டு வந்த உணவுப் பங்கீட்டின் மூலம்தான் அவர்கள் உயிர்தரித்து வந்தனர். அரசின் நடவடிக்கையால் அதுவும் சந்தேகத்திற்கு ஆட்பட்டுள்ளது.

3. சண்டை நடைபெறும் பகுதிகளில் உள்ள பொது மக்கள் இரக்கமற்ற உணவுத் தட்டுப்பாட்டின் காரணமாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு இடம் பெயர்கின்றனர். உணவு நிறுத்தப்பட்டதால் கடந்த ஒரு மாதத்தில் பெருமளவில் மக்கள் பாதிப்படைந்துள்ளனர். அதிலும் குழந்தைகளின் பாதிப்பு சொல்லும்தரமன்று.

4. உரம் மற்றும் வேளாண் பொருள்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதால் கடந்த 7 ஆண்டுகளாக வடபகுதியில் விவசாயமே நடைபெறவில்லை அதனால் மொத்த மக்களும் அரசின் பங்கீட்டை எதிர் பார்த்தே வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

5. இருப்பிடமிழந்த 6,50,000 மக்களில் 25,000 பேருக்கு மட்டுமே 50 சதவித உணவுப் பங்கீடு அனுமதிக்கப்பட்டிருந்தது. அதுவும் கடந்த 2 மாதங்களாக இல்லாமல் அம் மக்கள் சாவின் விளிம்பில் தள்ளப்பட்டுள்ளனர்.

அதனால் சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் அப்பகுதிக்கு உணவுப் பொருள்கள் அனுப்பப்படுவதும், ஒழுங்காக விநியோகம் செய்யப்படுவதும் அவசர அவசியமாகும். குறிப்பாக வன்னிப்பகுதி பெண்கள் உயிர் பிழைக்க இது உடனடியாகத் தேவை.

## படைக்கருவியா பசிக்கு உணவு

அதே வேளை இராணுவம் உணவை ஒரு படைக்கருவியாகப் பயன்படுத்த முடியாதபடி அரசு இந்த மனிதாபிமானத் தேவையை நிறைவு செய்ய வேண்டியது அவசியமாகும். உணவு மக்களைச் சென்றடைவதில் புலிகளும் இடையூறு செய்யாமல் ஒத்துழைப்பது அத்தியாவசியமாகும்.

இவ்வாறு, கத்தோலிக்க ஆயர்கள் மகா சங்கத்தின் வேண்டுகோளை ஆதரிக்கும் மாந்தநேய அமைப்புகளைச் சேர்ந்தோரும் கருத்துக் கூறியுள்ளனர்

மேலும் உணவைப் போருக்கான ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தும் சிறீலங்கா அரசின் நடவடிக்கை 1949ம் ஆண்டு ஜெனீவா மாநாட்டின் பொதுப் பிரகடனத்தின் 3வது சரத்தின்படி யுத்தக் குற்றமுமாகும்.

ஏனெனில் 1990ம் ஆண்டு முதலே இலங்கைத் தமிழர்களின் பாரம்பரியத் தாயகமான வடக்கு கிழக்கில் சிறீலங்கா அரசு பொருளாதாரத் தடையைக் கடைபிடித்து வருகின்றது.

## அகால மரணங்கள்

இதனால் ஊட்டச்சத்தின்மையால் கர்ப்பிணிப் பெண்களும், சிறுவர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, தமிழ்ப் பகுதிகளில் கொடிய தொற்று நோய்கள் பரவியுள்ளன. அதே நேரம் அத்தியாவசிய மருந்துகளுக்கும் தடையிருப்பதால் அவர்கள் அகால மரணங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த ஓராண்டுக்குமுன் புலிகளிடமிருந்து விடுவித்து விட்டதாக சிறீலங்கா அரசு தம்பட்டமடித்துக் கொள்ளும் யாழ்ப்பாணத்திலும் கூட 29,000 இடம் பெயர்ந்த குடும்பங்கள் சாவின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அங்கும் உணவுத் தட்டுப்பாடும், தொழிலின்மையும், தொற்றுநோய்ப் பரவலும் பெரிய அளவில் நிலவுகின்றதாகத் தெரிகிறது.

எனவே 1. தமிழர் தாயகமான வடக்கு கிழக்கின் மீது கடந்த 8 ஆண்டுகளாக இருந்து வரும் பொருளாதாரத் தடையை அகற்றி, இராணுவ ஆக்கிரமிப்பைக் கைவிட்டு, உணவு, மருந்து, உரம் போன்ற வேளாண் பொருள்கள், மீன்பிடி உபகரணங்கள் தமிழ்மக்களுக்குத் தாராளமாகக் கிடைக்கவும், போரை நிறுத்தி, தமிழ்மக்கள் தங்கள் தொழில்களை மேற்கொள்ளவும் வழிவகை செய்யவேண்டும்.

2. உள்நாட்டில் ஆயிரக் கணக்கில் இடம் பெயர்ந்துள்ள தமிழ்ப்பொது மக்களுக்கு உணவுப்பங்கீட்டு விநியோகம் மருந்து முதலிய அத்தியாவசியப் பொருள்கள் உடனடியாக கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இவ்வாறு கோரும் சர்வதேச மனிதவுரிமை ஆதரவாளர்கள், சிறீலங்காவும் பங்கு கொண்டிருக்கும் 'சார்க்' நாடுகளில் தலையாய நாடு என்ற முறையில் இந்தியா சிறீலங்காவை நிர்ப்பந்திக்க வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

---

## 'ஈழசுதந்திரன்' இதழுக்கு எழுதுவோர் கவனிக்க

ஈழசுதந்திரனுக்கு இப்போது கதை, கட்டுரை, கவிதை போன்றவை ஏராளமாக வந்து கொண்டிருக்கின்றன. அவர்களுக்குப் பாராட்டுக்கள்!

தகுதியுள்ளவை நிச்சயம் பிரசுரிக்கப்படும். இடமிருப்பதைப் பொறுத்து முன் பின்னாக வெளிவரும். அதேவேளை உடனடியாக இடம் பெறாதவற்றைத் திருப்பியனுப்பி வைக்கவோ, அது குறித்து கடிதத்தொடர்பு கொள்ளவோ இயலாத நிலை.

எனவே, ஈழசுதந்திரனுக்கு எழுதுவோர் பிரதி வைத்துக் கொண்டு அனுப்ப வேண்டுகிறோம். பதில் எழுதுவதற்கு முடியாமைக்கு வருந்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

ஆசிரியர் 'ஈழசுதந்திரன்'
சென்னை-8.

---

# தந்தை செல்வா...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

கும் முறைக்கும் இது நல்ல உதாரணம். அப்பீல்கோட்டில் நடந்த விசாரணைஅது. கீழ்க் கோட்டில் செல்வாவின் வாதம் வென்று விட்டது.

பாதிக்கப்பட்ட கட்சியினர் அப்பீல் செய்தனர். பிரபல வழக்கறிஞர் ஒருவரையும் அமர்த்தினர்.

கீழ்க்கோட்டுத்தீர்ப்பு தவறானது என்பதை நிருபிக்கபல தீர்ப்புக்களை ஒன்றுக்குப் பின் ஒன்றாக அடுக்கிக் கொண்டு போனார் அந்த வழக்கறிஞர்.

அப்பீல் செய்தவரின்வழக்கறிஞர் அமர்ந்ததும்,

செல்வநாயகம் எழுந்தார். மேலும்இரண்டு தீர்ப்புக்களைக் கூறினார்.

''இவையும் அப்பீல்காரருக்கு ஆதரவாகத்தான் உள்ளன. ஆனால் இவை விளக்கும் விதி வேறு. எமது வழக்கில் சம்பந்தப்பட்ட விதி வேறு'' என்று சொல்லி எடுத்துரைக்கப்பட்ட தீர்ப்புக்களை அங்கு விசாரிக்கப்படும் வழக்கிலிருந்து வேறுபடுத்திக்காட்டினார்.

வழக்கைச் சரிவரப்புரிந்து கொள்ளாமல் ஆதாரங்களைக் காட்ட முனைவதிலுள்ள ஆபத்தை செல்வநாயகம்சுட்டிகாட்டத் தவறில்லை.

செல்வநாயகம் தோற்றிய பலவழக்குகளில்சட்டமுக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் காங்கேசன்துறை தொகுதியில் உள்ளது. நூறு ஆண்டுகளுக்கு மேல் அக்கோவில் நம்பிக்கைச் சொத்தாகவுள்ளது. அந்நம்பிக்கை சொத்தை உருவாக்கியது யார் என்பதும் அதை நிர்வகிப்பதற்காக யார் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் தெரியாது. ஆனால் சந்ததி சந்ததியாக கோவில் குருக்கள் குடும்பத்தினர் நிர்வகித்து வந்துள்ளனர் அதை ஆட்சேபித்து தம்பிப்பிள்ளை என்பவர் வழக்குத் தாக்கல் செய்தார். செல்வநாயகம் துரைசாமி குருக்கள் சார்பில் ஆஜரானார். நம்பிக்கைச் சொத்தை உருவாக்கிய உறுதி கிடைக்காத சந்தர்ப்பங்களில் நீண்ட காலமாக நம்பிக்கைப் பொறுப்பாளராகஇருந்து வந்த குருக்களே நம்பிக்கைப் பொறுப்பாளராக நியமிக்கப்படலாம்என்றுஅவர் வாதாடினார். அவ்வாதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்வழக்கின் விளைவாக, நம்பிக்கைப் பொறுப்பாளர் நியமனம் பற்றிய பத்திரங்கள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் நடைமுறையில் இருந்த வழக்கத்தை ஏற்றுக் கொள்ள இத்தீர்ப்பு வழிவகுக்கிறது.

வள்ளியம்மை ஆச்சி எதிர் அட்டர்னி ஜெனரல் என்ற வழக்கும் முக்கியமானது.வள்ளியம்மை ஆச்சி நாட்டுக் கோட்டை செட்டியார் வகுப்பைச் சேர்ந்தவர். அவருக்கு கிடைத்த பொதுச் சொத்து (பிரிக்கப்படாத சொத்து)க்கு வருமான வரிப் பகுதியினர் பூதல் வரியை அறவிட்டனர்.

வள்ளியம்மை ஆச்சி இதை ஆட்சேபித்து வழக்குத் தொடர்ந்தார் செல்வநாயகம் அவரின் வழக்கறிஞர்பூதல்வரி ஒரு அந்நிய வழக்கை அடிப்படையாகக் கொண்ட சட்டம். அது இந்து தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட பொதுச் சொத்துக்கு ஒவ்வாது என்று செல்வநாயகம் வாதிட்டார். அவ்வாதத்தைஏற்றுக்கொண்ட நீதிமன்றம் பிரிக்கப்படாத சொத்துக்குப்பூதல்வரிவிதிக்கக் கூடாது என்று தீர்ப்பளித்தது. அப்பீல் கோடும் பிரிவி கவுன்சிலும் அத்தீர்ப்பை ஏற்றுக் கொண்டன.

இன்னுமொரு முக்கியமான வழக்கு ஷாபி மதப்பிரிவைச் சேர்ந்த பிராயம் வராத ஒரு முஸ்லிம் பெண் ஹனாபி மதப் பிரிவின் ஹனாபி சட்டத்தின்படி திருமணம் செய்தார். அப்பொழுது தன் தாய் மாமனை ''வாரி'' (பாதுகாவலர்)யாக நியமித்து அவரின் அனுமதியைப் பெற்றார். அப்பெண்ணின்தகப்பன் அதை ஆட்சேபித்து தன்னையே அப்பெண்ணின் பாதுகாவலராக நியமிக்குமாறு கோரி கொழும்புமாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

அப்பெண்ணின் சார்பாக ஆஜரான செல்வநாயகம் இரண்டு வாதங்களை முன் வைத்தார். முதலாவது ஹனபி சட்டத்தின் கீழ்பருவம் எய்திய பெண் திருமணவயதை அடைகிறார் என்பது. எனவே அவர் பாதுகாவலரை நியமிக்கவேண்டிய தேவையில்லை என்பது அதன் அர்த்தம் மற்றது முஸ்லிம் மதத்தின் ஒரு பிரிவிலிருந்து வேறொரு பிரிவுக்கு மாறுவது மதமாற்றமல்ல. இவ்விருவாதத்தையும் மாவட்டநீதி மன்றம் ஏற்றுக் கொண்டது. அப்பீலில் சுப்ரீம் கோட்டினாலும் பிரிவி கவுன்ஸிலாலும் அவ்வாதங்கள் ஊர்ஜிதப்படுத்தப்பட்டன.

சட்டத் தொழிலில் தந்தை செல்வா முழுக் கவனத்தையும் செலுத்தினார்.

சுப்ரீம் கோட்டு நீதியரசராவதே தன் இலட்சியம் என்று தன் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் சொன்னார்.

அவர் விரும்பியபாதையில் செல்ல அவரை விதி விடவில்லை.

அடுத்து அரசியல் பிரவேசம்.

(தொடரும்)

Edited, Printed, Published and Owned by ARUNACHALAM GOPALAN, No. 14, Sait Colony 1st Street, Egmore, Chennai-600 0 8
Printed at Kuralneri Achagam, 4/77, Subethar Garden, Choolaimedu, Chennai-94

ஜனநாயகம்-சமதர்மம்-சமய சார்பின்மை-நமது பாதை